Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 +24 | விலை 40 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :266 ஆவணி 06 ஆம் நாள் சனிக்கிழமை 22 ஓகஸ்ட் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



முச்சந்தி முரளி

"நீலம்பாரிச்சா
உடம்புக்கும்
கூடாது
வீணைக்கும்
கூடாது
கண்டியளோ"

## தமிழ்க் கூட்டமைப்பின்

# பேச்சாளராக செல்வம் கொறடாவாகச் சித்தர்

### கூட்டமைப்பைபலப்படுத்த புதியநடவடிக்கை கட்சித் தலைவர்கள் சந்திப்பில் இணக்கம்



சித்தாத்தன்



செல்வம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளராக ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனையும், கூட்டமைப்பின் கொறடாவாக புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தனையும் நியமிக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருடனான பங்காளிக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்றுக் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. 15



## தீர்வு காணும் பொறுப்பிலிருந்து இந்தியா ஒருபோதும் விலகாது!

### தமிழ்க் கூட்டமைப்புடனான சந்திப்பில் இந்தியத் தூதுவர் கோபால் திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 22

இலங்கையில் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் பொறுப்பிலிருந்து இந்தியா ஒருபோதும் விலகாது. இலங்கை அரசும் இந்தக் கடமையிலிருந்து நழுவ முடியாது. இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்தார் இலங்கைக் 15

## ராஜபக்சக்கள் அரசின் தொடரும் ஓரவஞ்சனை

### இராஜாங்க அமைச்சுச் செயலர்களில் ஒருவர் மட்டுமே தமிழர்

யாழ்ப்பாணம், ஓக. 22

அமைச்சுக்களுக்கான செயலர்கள் நியமனத்தின் போது தமிழர்கள் எவரும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் 36 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செயலர்கள் நாளை மறுதினம் திங்கட் கிழமை நியமிக்கப்படவுள்ள நிலையில் அதில் ஒரேயொரு தமிழர் மாத்திரம் உள் 15

## யாழ். செயலகம் 'நீல மயம்' ஆக்கிரமிக்கிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இரண்டு அறைகள் மற்றும் ஓர் மாநாட்டு மண்டபத்தை ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அலுவலகத்துக்குத் தேவை என்று தெரிவித்துள்ள அங்கஜன் இராமநாதன், அவற்றுக்கு நீல நிற வர்ணப் பூச்சு பூசுமாறு பணித்துள்ளா 14

### தேசியப் பட்டியல் ஆசனம்

## 2 ஆண்டுகளின் பின்னர் மாற்றுவதற்கு இணக்கம்

யாழ்ப்பாணம், ஓக. 22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனத்தை இரண்டு ஆண்டுகளின் பின்னர் வேறொருவருக்கு வழங்குவதற்கு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இணக் 15

## டக்ளஸுக்கு அங்கஜன் 'செக்'

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக நேரடியாக அபிவிருத்தித் திட்டங்கள் எதுவும் முன்னெடுக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரியவருகின்றது. 14

## பொலிஸின் தாக்குதலால் இளைஞன் படுகாயம்!

### யாழ். போதனாவில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாண நகரப் பகுதியில் முச்சக்கர வண்டி சாரதி ஒருவர், பொலிஸாரின் மூர்க்கத்தனமான தாக்குதலில் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா 14

### நாட்டின் இறையாண்மையை முதன்மைப்படுத்தி

## மோசமான போர்க்குற்றங்களை ஒருபோதும் மறைக்க முடியாது!

### கோத்தாவின் உரைக்கு கஜேந்திரகுமார் பதிலடி



கொழும்பு, ஓக. 22

ஜனாதிபதி இன்று நாட்டின் இறையாண்மை குறித்து பேசுகின்றார். ஆனால், இலங்கையின் இறுதிப் போரில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. 15

## விக்கியின் கன்னியுரையால் நாடாளுமன்றில் சர்ச்சை



கொழும்பு, ஓக. 22

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில் ஆற்றிய கன்னி உரை தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபே 15

உள்ளே

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வவுனியா வடக்கு பிரதேச சபைத் தலைமை சிங்களவருக்குப் பறிபோகும் அபாயமுண்டு

## அதன் தற்போதைய தலைவர் எச்சரிக்கை

வவுனியா, ஓகஸ்ட் 22

**வவுனியா வடக்கு பிரதேச சபையின் தலைமைக்கு எதிராகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். சிங்களவரே இதன்மூலம் தலைவராகுவார் என்று பிரதேச சபையின் தலைவர் ச.தணிகாசலம் தெரிவித்தார்.**

வவுனியா வடக்கு பிரதேச சபையின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் பிரதேச சபையின் உறுப்பினராக இருக்கின்ற சஞ்சுதன் தலைமையிலான 15 பேர் கொண்ட குழு கடந்த 13ஆம் திகதி எமது சபை அமர்வு இடம்பெறுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் தலைவரான எனக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கடிதம் ஒன்றினை சமர்ப்பித்துள்ளனர். இந்த நிலையில் இது தொடர்பில் எமது பிரதேச மக்களுக்கும் சமூக ஆர்வலர்களுக்கும் தேசியம் பேசுகின்றவர்களுக்கும் தெளிவுபடுத்த வேண்டியவனாக இருக்கின்றேன்.

இந்த வகையில் அவர்களால் குற்றஞ்சாட்டப்பட்ட விடயமாக சபையை கொண்டு நடத்தக்கூடிய தகுதியீனம் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் தவிசாளரின் எண்ணங்களில் விடாப்பிடியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பிரிவின் கீழ் இவர்கள் இந்த கோரிக்கையின் பிரகாரம் இதனை நிறைவேற்றுவதற்கு தகுதியில்லை என நம்புகின்றேன். எனவே இவ்வாறான நடவடிக்கையை ஒரு தவிசாளர் கொண்டிருப்பாராக இருந்தால் அதனை மாகாண உள்ளூராட்சி ஆணையாளரிடம் அல்லது ஆளுநரிடமோ அமைச்சரிடமோ முறையிட முடியும் எனக் கூற விரும்புகின்றேன். அத்துடன் வட மாகாணத்தில் பல உள்ளூராட்சி மன்றங்களில் நம்பிக்கையில்லா பிரேரணைகள் கொண்டு வரப்படும் நிலை காணப்படுகின்றது. இது அந்தந்த பிரதேச நலனுக்கு உகந்ததல்ல.

இந்த வகையில் வவுனியா வடக்கு பிரதேசசபையிலும் தலைவர் மீது நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரப்படுமாயின் அது சபையில் அதிகளவான எதிர்தரப்பு அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும் சிங்கள பிரதிநிதிகள் பக்கம் தலைமைத்துவம் செல்லும் என்பது மறுப்பதற்கில்லை. எனவே இதனை அனைவரும் உணரவேண்டும் என்றார். (ம110)

# இணக்க சபை அமர்வு

யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் பிரதேச இணக்க சபை அமர்வு இன்று சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் மன்றத்தில் (சட்டநாதர் சிவன் கோயில் எதிரில்) நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ.5)

# இலங்கைத் தமிழரொருவர் அமெரிக்காவுக்கு நாடுகடத்தல்

இலங்கையில் பிறந்த கனேடிய பிரஜை ஒருவர், அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார். ஆட்கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றத்திற்காக சிறைத்தண்டனை அனுபவித்த நிலையில் அவர் தற்போது அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார் என்று றோயல் டர்க்ஸ் மற்றும் கைகோஸ் தீவுகள் பொலிஸ் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பிறந்த கனேடிய குடிமகனான ஸ்ரீகஜமுகன் செல்லையாவை அமெரிக்க அரசிடம் ஒப்படைக்குமாறு திங்கட்கிழமை கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஒக்ரோபரில் செல்லையா சிறிகஜமுகன் ஒரு படகில் ஹைட்டி கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டார். இந்த படகில் 28 இலங்கையர்கள் மற்றும் ஒரு இந்தியர் உட்பட 158 பயணிகளை இவர் கடத்திச் சென்றதாக டர்க்ஸ் மற்றும் கைகோஸ் தீவுகள் பொலிஸ் தெரிவித்துள்ளது.

இதன்போது சட்டவிரோத நுழைவு மற்றும் சட்டவிரோத நுழைவுக்கு உதவிய குற்றச்சாட்டுக்களை குறித்த நபர் எதிர்கொண்டார். இந்த நிலையில் ஜூன் மாதத்தில் இந்த குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டார். இதையடுத்து 14 மாத சிறைத்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செல்லையா மற்றும் படகில் இருந்த மற்றவர்கள் மீதான விசாரணையே இதுவரை மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய மற்றும் மிகவும் சிக்கலான குற்றவியல் விசாரணைகளில் ஒன்றாகும். இதன் விளைவாக கனடா, யு.எஸ் மற்றும் இலங்கையிலும் கைது இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

தண்டனைக்காலம் முடிந்து செல்லையா கனடாவுக்கு நாடு கடத்தப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அமெரிக்காவிலும் அவர் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ளவதால் அவரை தம்மிடம் ஒப்படைக்குமறு அமெரிக்க அதிகாரிகள் ஜூலை பிற்பகுதியில் கோரியுள்ளனர்.

பணத்திற்கு ஈடாக பல இலங்கை வெளிநாட்டினரை டர்க்ஸ் மற்றும் கைகோஸிலிருந்து கனடா, பஹாமாஸ் மற்றும் அமெரிக்கா வழியாக அழைத்துச் செல்ல செல்லையா திட்டமிட்டிருப்பதாக நம்பப்படுவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. (ம)

# பாடசாலை நேரத்தில் மீண்டும் மாற்றங்கள்

கொழும்பு, ஓக. 22

எதிர்வரும் செப்ரெம்பர் இரண்டாம் திகதி முதல் பாடசாலை நேரத்தை மாற்றியமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, தரம் 10, 11, 12, 13 ஆகிய வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் காலை 7.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை முன்னெடுக்கப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# காரைநகர் மத்தியஸ்த சபையின் கலந்துரையாடல்கள் ஞாயிறன்று!

காரைநகர், ஓக. 22

காரைநகர் மத்தியஸ்த சபையின் பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் மீள ஆரம்பிக்கப்பட உள்ளதாக காரைநகர் பிரதேச மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் ந.பாரதி அறிவித்துள்ளார்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக கடந்த ஐந்து மாதங்களாக நாடு முழுவதும் இடைநிறுத்தப்பட்ட மத்தியஸ்தர் சபை அமர்வுகள் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் மீள ஆரம்பிக்குமாறு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் செயலாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் பிரதி ஞாயிறுக்கிழமைகளில் காரைநகர் இந்துக் கல்லூரியில் வழமை போன்று மத்தியஸ்தர் சபையின் அமர்வுகள் இடம்பெறும் எனவும், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம250)

# போதையில் சாரத்தியம் ரூ.25ஆயிரம் தண்டம்!!

கொடிகாமம், ஓக. 22

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நால்வருக்குத் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் நேற்றுத் தண்டம் விதிக்கப்பட்டது

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மதுபோதையில் வாகனம் செலுத்திய குறித்த நால்வரும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி போக்குவரத்து பொலிசாரால் கைது செய்யப்பட்ட நிலையில் நேற்று அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. (ம159)

## வலி.தென்மேற்கு பிரதேச சபையில்

# 4 லட்சம் பெறுமதியான மின் உபகரணங்கள் மாயம்: திருடப்பட்டுவிட்டன என நேற்றுக்காலை கவனவீர்ப்பு

வலிகாமம் தென்மேற்குப்பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இருந்த சுமார் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான மின் உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன என்று தெரிவித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சபை உறுப்பினர்கள் நேற்றுக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மேலும் கனவயீர்ப்பில் ஈடுபட்ட உறுப்பினர்கள் தெரிவித்ததாவது:

கடந்த ஜூன் மாதம் 6ஆம் திகதியன்று பிரதேச சபையின் தலைமைக் காரியாலயத்திலிருந்து நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான மின் உபகரணங்கள் திருடப்பட்டன. இது தொடர்பாக சபைக் கூட்டத்தில் செயலரிடம் கேள்வி எழுப்பியபோது அவர் திருப்திகரமான பதிலை வழங்கவில்லை. இதனால் சபையில் குழப்பம் ஏற்பட்டது. இதன் காரணமாக உறுப்பினர்களாகிய நாம் சபையை விட்டு வெளிநடப்புச் செய்து பிரதேச சபை வளாகத்தில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். திருட்டு நடந்த பின்னர் சபை அமர்வு மூன்று தடவைகள் நடைபெற்றது. அம் மூன்று அமர்வுகளிலும் செயலாளரோ நிர்வாகமோ விசாரணை அறிக்கைகள் எதையும் சமர்ப்பிக்கவில்லை. எமது கேள்விகளுக்கான தெளிவான பதிலைக் கூறவில்லை. இன்று இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யவுள்ளோம் என்று தெரிவித்தனர்.

இதையடுத்து வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தெரிவித்ததாவது:

சபையில் இருந்து பல மின் உபகரணங்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. அவற்றைத்தான் இவர்கள் திருட்டு என்று குறிப்பிடுகின்றார்கள். இது தொடர்பில் முழுமையான விசாரணை இடம்பெற்று வருகின்றது. விசாரணையின் பின்னரே இது தொடர்பில் உத்தியோகபூர்வமாக தகவலைத் தெரிவிக்க முடியும். அதுவரையும் இதைத் திருட்டு என்று குறிப்பிட முடியாது. மற்றும்படி இது போலியான குற்றச்சாட்டு - என்றார். (ம)

# தகவல் அறியும் உரிமையை 20ஆவது திருத்தம் பாதிக்காது


## உதய கம்மன்பில நம்பிக்கை



**கொழும்பு, ஓக.22**

**20ஆவது அரசமைப்புத் திருத்தம் உருவாக்கப்படும்போது அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தகவலறியும் உரிமை சட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என அமைச்சரவை இணைப்பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார். அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பொதுமக்களின் உரிமைகளை பாதுகாக்கும் விடயங்களுக்கு முழுமையான பாதுகாப்பை அரசாங்கம் வழங்கும். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை முழுமையாக இரத்துச் செய்வது அரசாங்கத்தின் நோக்கமல்ல, இத்திருத்தத்தில் குறிப்பிடப்பட் டுள்ள விடயங்கள் கடந்த காலங்களில் அரச நிர்வா கத்தில் பெரும் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளது. குறைபாடுகளை நிவர்த்திசெய்து புதிய திருத்தம் உருவாக்கப்பட வேண்டும் என்பது அரசாங்கத்தின் பிரதான எதிர்பார்ப்பு. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தின் சாதகமான விடயங்கள் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவில் உள்வாங்கப்படும். தகவலறியும் உரிமை அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் உருவாக்கப்பட்டமை சிறந்த ஒரு விடய மாகும். அரச விடயங்கள் தொடர்பான விடயங்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு உரிமை உண்டு. அரசமைப்பின் 20ஆவது திருத்தம் உருவாக்கப்படுவதினால் தகவலறியும் திருத்தச்சட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்புக்களின் உரிமைகள் தொடர்ந்து பாதுகாக்கப்படும். சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகளுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாது எனத் தெரிவித்தார். (ரி1)



## தேசிய விளையாட்டு சபை தலைவராக மஹேல

கொழும்பு, ஓக.22

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன தேசிய விளையாட்டு சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச குறித்த நியமனத்தை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவின் உறுப்பினர்களாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, ஜூலியன் போலிங், திலந்த மாலகமுவ, கஸ்தூரி செல்லராஜா வில்சன், சுபுன் வீரசிங்க, ரொஹான் பெர்னாண்டோ, ருவன் கேரகல, சஞ்சீவ விக்ரமநாயக்க, மேஜர் ஜெனரல் ராஜித அம்பேமொஹட்டி, ரொவேனா சமரசிங்க, யஸ்வந்த் முத்தெட்டுவேகம, ஏ.ஜெ.எஸ்.எஸ். எதிரிசூரிய மற்றும் தியுமி அபேசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (ரி2)




## மதுபான போத்தல்களின் மீள்சுழற்சிக்கு புதிய திட்டம்

*கலால் திணைக்களம் தெரிவிப்பு*

கொழும்பு, ஓக.22

பாவனையின் பின்னர் வெளியேற்றப்படும் மதுபானப் போத்தல்களை மீள்சுழற்சிக்குட்படுத்த புதிய வேலைத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளது என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையுடன் இணைந்து கலால் திணைக்களம் இதை முன்னெடுக்கவுள்ளது.

உபயோகித்த பின் வெளியேற்றப்படும் மதுபான போத்தல் மற்றும் டின்களால் சூழல் மாசடைகிறது என கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் பிரகாரமே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவற்றை மீள்சுழற்சியின் மூலம் மீண்டும் பாவனைக்கு எடுத்துக்கொள்வதுடன், தேசிய வர்த்தகர்களும் உற்பத்தியாளர்களும் இதனால் பயன்பெறுவர் எனவும் கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது. வருடத்திற்கு ஒருதடவை பயன்படுத்தப்பட்ட 30 கோடி மதுபான போத்தல்களும், 16 கோடி மில்லியன் டின்களும் முறையாக அகற்றப்படுவதில்லை என்று மத்திய சுற்றுசூழல் அதிகாரசபை சுட்டிக் காட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ரி1)

## நிஷாந்த சில்வாவை கைது செய்ய உத்தரவு



கொழும்பு, ஓக.22

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் புகுந்துள்ள, சி.ஐ.டியின் முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த சில்வாவைக் கைதுசெய்ய கம்பஹா நீதிமன்றம் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரான பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஷானி அபேசேகர, சி.ஐ.டி. முன்னாள் உப பொலிஸ் பரிசோதகர் மெண்டிஸ் ஆகியோர், சி.சி.டி. எனப்படும் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் மொஹம்மட் சியாம் படுகொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்தன உள்ளிட்ட 8 பேருக்கு எதிரான விசாரணைகளில், சந்தேகநபர்களைக் கைது செய்ய புதிதாக சாட்சியங்களை உருவாக்கினார் என கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவு முன்வைத்த கோரிக்கையை ஏற்று, கம்பஹா நீதிவான் மஞ்சுள கருணாரத்ன இந்த உத்தரவை நேற்று முன்தினம் பிறப்பித்தார். (ரி1)

## கசிப்புடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, ஓக.22

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணைப் பகுதியில், கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலையடுத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து 80 லீற்றர் கசிப்பும், 250 லீற்றர் கோடாவும், கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் சந்தேகநபர் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ரி2-316)



## கொள்கைப் பிரகடன உரையில் சிறுபான்மையினருக்குத் தீமை

### இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, ஓக.22

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் சில நன்மைகள் உள்ள போதும், சிறுபான்மை இன மக்களுக்கு தீமைகளும் உள்ளன என நாடாளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிலையில், நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் வைத்து செய்திச் சேவையொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் எதிர்வரும் அமர்வுகளில் பிரஸ்தாபிக்க எதிர்பார்க்கின்றேன் எனவும் அவர் தெரிவித்தார். (ரி1)

# அதிபர் காரியாலய கட்டடத் திறப்பு

மன்னார், ஓக. 22

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட தேவன்பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட அதிபர் காரியாலயக் கட்டடம் நேற்றுமுன்தினம் வைபவரீதியாக திறக்கப்பட்டது.

வடக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத் திறப்பு நிகழ்வு அதிபர் பி.டியூட்சன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் ஏ.பத்திநாதன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-56)



# எம்.பி. பதவிக்காக ஏமாற்று வேலைகள்

## கஜேந்திரகுமாரைச் சாடினாரா மணி?

யாழ்ப்பாணம், ஓக. 22



நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்துக்காக எத்தகைய ஏமாற்று வேலைகளையும் செய்யக்கூடியவர்கள் தான் இன்று எமது தலைவர்களாகவுள்ளனர். இவர்கள்தான் கொள்கை, உரிமைக்காகப் போராடுவார்களா என்று சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் முக்கிய பதவிகளில் வகித்து வந்த மணிவண்ணனை அந்தக் கட்சி குறித்த பதவிகளிலிருந்து தூக்கியது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்பட்டார் என்று குற்றச்சாட்டை முன்வைத்தே மணிவண்ணனின் பதவிகள் பறிக்கப்பட்டன.

இவ்வாறான நிலையிலேயே மணிவண்ணன் அந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

கூட்டுறவாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாமனிதர் சின்னத்தம்பி சிவமகாராசாவின் நினைவு தினம் நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

சிவமகாராசா முதன் முறையாக நாடாளுமன்றம் தெரிவானபோது மக்களின் விடுதலைக்காகத் தனிநாடு கேட்டுப் போராடவேண்டும் என்றால் 6 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் சத்தியம் செய்து போராடமுடியாது என்பதற்காகத் தனது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை இழந்தவர். இதன்மூலம் தனது கொள்கை - இலட்சியம் என்பவற்றில் எத்தகைய உறுதியுடன் இருந்தார் என்பது உறுதியாகின்றது. அதன்பின்னர் போட்டியிட்ட போது மக்கள் தெரிவு கிடைக்கவில்லை. பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியாக போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்தும் மக்களுக்காகவே சேவை செய்து அதற்காகவே அவரது உயிரும் பறிக்கப்பட்டது.

மாமனிதர் சிவமகாராசா தனது கொள்கையில் உறுதியுடன் இருந்தமையால் தான் தனது முதல் தெரிவின் போது நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறவில்லை. ஆனால் இன்றுள்ள எமது தலைவர்கள் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்காக ஏமாற்று வேலை செய்யக்கூடிய நிலையிலேயே உள்ளனர். - என்றார். (ஐ)

# மின்சார வசதிகளின்றி இருளில் அவதியுறும் துவரங்குளம் மக்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**வவுனியா, ஓக.22**

**வவுனியா நொச்சிமோட்டை துவரங்குளம் பகுதியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் வீட்டுத்திட்டத்துக்கு உள்வாங்கப்பட்டு குடியேற்றப்பட்ட 15 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு இதுவரை மின்சார இணைப்பு வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

வவுனியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நொச்சிமோட்டைக் கிராம அலுவலகர் பிரிவின் துவரங்குளம் பகுதியில் 15 குடும்பங்களுக்கு காணி வழங்கப்பட்டு வீட்டுத்திட்டங்களுக்கு உள்வாங்கப்பட்டனர். எனினும் இரண்டு வருடங்கள் கடந்தும் இன்று வரை அவர்களுக்கு மின்சார இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

அத்துடன் வீட்டுத்திட்டத்துக்கு உள்வாங்கப்பட்ட சொந்தக் காணியுடைய மக்களும் இவ்வாறு மின்சார இணைப்பைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மின்சாரத்தைப் பெறுவது தொடர்பில் பல முயற்சிகளை மேற்கொண்டும், இதுவரை எந்தப் பயனுமின்றி அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர். அத்தோடு கிராமத்துக்கான வீதி விளக்குகளின்றி காட்டு யானைகளின் தொல்லைகளும் இரவில் அதிகரித்துள்ளமையால், அச்சத்தில் வாழ்கின்றனர் எனவும் மக்கள் தெரிவித்தனர்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தை கவனத்திற்கொண்டு எமது கிராமத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள் என்றும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# பெருந்திருவிழா

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 11 நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும், முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 2 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய சைவமகா சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)

# குப்பைகள் ஏற்றுவதற்கு புதிய நடைமுறை

சாவகச்சேரி, ஓக. 22

சாவகச்சேரி நகரசபையினர் குப்பைகளை வாகனங்களில் ஏற்றுவதற்கு புதிய நடைமுறையை செப்ரெம்பர் மாதம் தொடக்கம் அமுல்படுத்தவுள்ளனர்.

நகரசபை சுகாதார அலகினரால் தினமும் வட்டாரங்களில் கழிவுகள் அகற்றும் பணிகள் வாகனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வரியிறுப்பாளர்களால் வீதியோரங்களில் உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை ஒன்றாக உரப்பைகளில் போட்டு வைப்பதால் அதனைத் தரம் பிரிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதனால் செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் உக்கும் மற்றும் உக்காத கழிவுகளை வரியிறுப்பாளர்கள் தரம் பிரித்து வீதியோரங்களில் வைக்கும் குப்பைகள் மட்டுமே வாகனத்தில் ஏற்றப்படும் என்று சபையின் சுகாதாரக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்தத் திட்டம் இரு மாதங்களுக்கு அமுல்படுத்தப்பட்டு வரியிறுப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்கும் பட்சத்தில் நவம்பர் மாதம் தொடக்கம் ஒருநாள் உக்கும் கழிவுகளும் மறுநாள் உக்காத கழிவுகளும் வாகனங்களில் ஏற்ற நடவடிக்கை எடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ-9)



வெற்றிலைக்கேணி ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை ஆலய பிரதம குரு சட்டநாதக் குருக்கள் யோகசம்மந்பமந்தக் குருக்கள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து 15 நாள்கள் திருவிழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-70)

# வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாண மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்துக்கு கடந்த 13 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும், மாவட்டச் செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் குறித்த பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பட்டியலைப் பார்வையிடலாம்.

இதற்கமைய புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் மாகாணங்களுக்கிடையே வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத்தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் என்பவற்றையும் மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் சமர்ப்பித்து, தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத்தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாளை கொடியேற்றம்

நீர்வேலி, ஓக. 22

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 11 நாள்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், 2 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 3 ஆம் திகதி வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

ஆலயத்துக்கு வருகைதரும் பக்தர்கள் முகக் கவசம் அணிந்து வருவதுடன் சமூக இடைவெளியையும் கடைப்பிடிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீண்டெழட்டும் ஒற்றுமை!

தேர்தலுக்குப் பின்னர் சிலபல காரணங்களால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்டிருந்த தளம்பல் நிலைமை, தற்போது சீராகத் தொடங்கியுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய பேச்சாளராக செல்வம் அடைக்கலநாதனும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் கொறடாவாகச் சித்தார்த்தனும் தெரிவாகியுள்ளனர். இதுவரைகாலமும் குறித்த இரு பதவிகளும் தமிழரசுக் கட்சி வசமே இருந்தன. ஆனால் இப்போது அவை பங்காளிக் கட்சிகளிடம் பகிர்ந்தளிக்கப்பட்டுவிட்டன.

கடந்த காலங்களில் கூட்டமைப்பின் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களில் தமிழரசுக் கட்சியின் ஆதிக்கமும் பங்காளிக் கட்சிகளைப் புறக்கணித்தலும் முக்கியமாக முன்வைக்கப்பட்டன. அதனை உறுதி செய்வதுபோலவே கூட்டமைப்பின் முக்கியமான பதவிகள் தமிழரசுக் கட்சி வசம் இருக்க உப்புச்சப்பற்ற பதவிகளே பங்காளிக் கட்சிகளுக்கு வழங்கப்பட்டன. தேர்தல் கால ஆசன ஒதுக்கீடுகளிலும் இதே நிலைதான். இதனாலேயே கூட்டமைப்பை விட்டு சில கட்சிகள் வெளியேறியும் இருந்தன.

எனினும் இம்முறை பொதுத்தேர்தல் மிகப்பலமான பாடமொன்றை கூட்டமைப்புக்கு போதித்ததால் இனியும் பழைய தனிக்கட்சி ஆதிக்கப் பாதையில் பயணிப்பது தவறென்பதை உணர்ந்துகொண்டு அதனை உடனடியாகவே சீர்செய்யும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. குறிப்பாக இம்முறை நாடாளுமன்றில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் தனிவழி செல்லப்போகின்றன என்றும் கதைகள் கிளம்பியிருந்தன. இதனால் ஏற்கனவே வாக்குச் சரிவைச் சந்தித்த கூட்டமைப்பு இன்னும் பலவீனப்பட்டுவிடுமோ என்ற ஏக்கம் தமிழ் மக்களிடையே எழுந்தது. ஏனெனில் கூட்டமைப்பு என்பது தனியே ஓர் அரசியல் கட்சி மாத்திரமல்ல. தமிழர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக உதிரிகளாகச் சிதறிக் கிடந்த தமிழ்க் கட்சிகளையெல்லாம் ஒன்றிணைத்து ஜனநாயகப் போரில் ஈடுபடுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே இது. இதன் பின்புலத்தில் போராளிகள் இருந்தார்கள் என்பதும் வெளிப்படை.

எனவே ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர் எமக்குள்ள ஒரேயொரு ஆத்மபலம் கூட்டமைப்பு மட்டுமே கூட்டமைப்பைச் சிதைப்பதென்பதோ அல்லது பலவீனப்படுத்துவதோ எங்களுடைய விடுதலைப் போராட்டத்தின் ஆன்மாவை அழிப்பதாகவே இருக்கும். இதுநாள்வரை எமக்காக உயிர்த்தியாகம் செய்த போராளிகளின் கனவுகளைக் கொல்வதாகவும் அமைந்துவிடும். ஆகவேதான் கூட்டமைப்பு மீண்டும் பழைய 'கெத்தோடு' வீறுநடை போடவேண்டுமென தமிழ் மக்கள் எதிர்பார்த்தனர். அதனை ஈடுசெய்வதுபோல இப்போது கூட்டமைப்பு மிகச் சரியான முடிவை எடுத்து பேச்சாளர், கொறடா பதவிகளைப் பங்காளிக் கட்சிகளுக்கு வழங்கி தன்னுடைய மீளெழுச்சியை நிரூபித்திருக்கின்றது. இதே பாதையில் சக கட்சிகளை அரவணைத்து ஒருங்கிணைவைப் பேணி மக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்து கூட்டமைப்பு நடப்பதன் மூலமே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் கூட்டமைப்பினரே என சிங்களப் பேரினவாதத்துக்கு மீண்டும் சொல்லமுடியும்.



# தமிழ்க் கூட்டமைப்பின் கோரிக்கையை பிழையாக பொருள்கோடல் செய்யாதீர்!

*வெற்றி மமதை விபரீதத்தையே ஏற்படுத்தும் என எச்சரிக்கின்றார் ஜனா எம்.பி*

**கொழும்பு, ஓக. 22**

**'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோருவது பிரிக்க முடியாத பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் ஒன்றாக சமத்துவமாக வாழும் உரிமையையே. எமது கோரிக்கையைப் பிழையாக பொருள்கோடல் செய்யாதீர்கள். தென்னிலங்கை மக்களை எமது கோரிக்கை தொடர்பாக பிழையாக வழிநடத்தாதீர்கள். நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து எமது நாட்டைக் கட்டியெழுப்புவோம்' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'நடைபெற்று முடிந்த ஒன்பதாவது நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளை வைத்து எமக்கான மக்கள் ஆதரவு தளம் தடம்புரண்டதாக அல்லது சில சில்லறைகள் எமது மக்கள் ஆதர வைத் தடம்புரள வைத்ததாக மார்தட்டிக் கூறுவது ஏற்க முடியாது ஒன்று.

தமிழ்த் தேசிய அரசியலை தமிழ்த் தேசிய மக்கள் உணர்வுகளைத் தெளிவாக புரிந்து கொண்டவன் என்ற வகையில் இந்தத் தேர்தல் முடிவுகள் எமக்கு ஏற்பட்ட ஒரு சறுக்கல். அவ்வளவுதான். அது தமிழ்த் தேசிய அரசியலின் முற்றுப்புள்ளியல்ல. இதை முதலில் நாம் அறிய வேண்டும்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவு உங்களுக்கு பெரும் வெற்றி. இதில் எந்தவித ஐயமும் இல்லை. இந்த வெற்றிக்கான காரண காரியங்களை நான் ஆராய முனையவில்லை. நீங்கள் பெற்ற இந்தப் பெருவெற்றியை நம் நாட்டில் ஐக்கியம், ஒருமைப்பாடு, இன, மத, மொழி ரீதியான சமத்துவம் என்பவற்றைக் கட்டியெழுப்பப் பயன்படுத்துங்கள். படைகளின் மனோபாவம், படைத் தளபதிகளின் மனோபாவம், போரின் தர்மம், போரின் அதர்மம் அத்தனையும் புரிந்தவன் நான். ஏனென்றால் நானும் முன்னாள் போராளி. களமாடியவன். இதனால்தான் கூறுகின்றேன் போர்க் கால சமன்பாடு சமாதான காலத்துக்குப் பொருந்தாது.

போர் வெற்றி, தேர்தல் வெற்றி மூலம் நீங்கள் கொள்ளும் மமதை சிலவேளை உங்களுக்கு விபரீதத்தை ஏற்படுத்தலாம். ஆணைப் பெண்ணாக்க பெண்ணை ஆணாக்க மட்டுமே முடியாத அத்தனை அதிகாரங்களையும் கொண்டு தனக்கேற்ற வகையில் அரசமைப்பை உருவாக்க தனது நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்ற ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூட இன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதை இக்கணம் நினைவுகூர்ந்து கொள்ளுங்கள்' என்றார்.

(ம22,44)

# வாரத்தில் ஒருநாள் 'பற்றிக்'!

கொழும்பு, ஓக.22

அரச ஊழியர்கள் வாரத்தில் ஒருநாள் 'பற்றிக்' அல்லது உள்நாட்டு ஆடையை அணிந்து வரவேண்டும் என இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பான சட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

பற்றிக் கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பற்றிக் ஆடை அணிந்தே நாடாளுமன்றத்துக்கு வந்திருந்தார்.

இந்தநிலையில் அரச ஊழியர்களுக்கு ஆடை தொடர்பான சட்டம் இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது - என்றார். (எ)

# யாழ். போதனாவுக்கு நவீன சிசி ஸ்கேனர்!

கொழும்பு, ஓக.22

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு 160 மில்லியன் ரூபா பெறுமதியான நவீன டிஜிற்றல் சிசி ஸ்கேனர் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளதாவது:

யாழ். போதனா வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சால் டிஜிற்றல் சிசி ஸ்கேனர் நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டுள்ளது. சுமார் 160 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த இயந்திரம் இலங்கையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் மட்டும் தற்போது காணப்படுகின்றது. அடுத்ததாக தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது

இதன்மூலம் நோயாளிகளில் சில நோய்களை இலகுவாக இனங்கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கும். குருதிக் கலன்களின் நாடி, நாளங்களில் அடைப்பு ஏற்படும்போது இந்தக் கருவி மூலம் இலகுவாக கண்டறியக் கூடியதாக இருக்கும். இதன்மூலம் சிறுநீரகத்துக்குச் செல்லக்கூடிய கலங்களில் ஏற்படும் மாற்றம் மற்றும் மூளைக்குச் செல்லும் கலங்கள், இதயத்தில் ஏற்படுகின்ற அடைப்புகளை இலகுவாகக் கண்டறியக் கூடியதாக இருக்கின்றது. இதற்குரிய தகுதி வாய்ந்த வைத்திய ஆளணியினரும் அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளனர். என்றார்.

(எ)

# கட்சித் தலைமை மணிக்குத் “தடா”

## ஊடக சந்திப்பை நடத்தவிடாது கட்சி அலுவலகம் மூடப்பட்டது

**யாழ்ப்பாணம், ஓக.22**
**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட சட்டத்தரணி வி.மணிவண்ணன் நேற்று நடத்தவிருந்த ஊடக சந்திப்பு கைவிடப்பட்டுள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் மற்றும் தேசிய அமைப்பாளர் பதவிகளில் இருந்து வி.மணிவண்ணன் கட்சித் தலைமையால் நீக்கப்பட்டார்.**

அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கட்சியின் மத்திய குழுவால் முன்வைக்க அது வி.மணிவண்ணனுக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக நேற்றுக் கட்சித் தலைமைக்குப் பதில் அனுப்பியிருந்த மணிவண்ணன், இன்று தனது நிலைப்பாடு தொடர்பில் ஊடக சந்திப்பு நடத்தப்படும் என்று நேற்று அறிவித்திருந்தார்.

நேற்று பிற்பகல் கட்சி அலுவலகத்தில் அவர் ஊடக சந்திப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்த நிலையில், அங்கு ஊடக சந்திப்பு நடத்தக் கட்சித் தலைமை அனுமதி மறுத்துள்ளது. அங்கிருந்தவர்களை வெளியேற்றி கட்சி அலுவலகம் மூடப்பட்டது. அதனால் ஊடக சந்திப்பு இறுதி நேரத்தில் கைவிடப்பட்டுள்ளது. (எ-26)

## புதிய அரசமைப்பை ஆராய குழு நியமிக்க சு.க. முடிவு

கொழும்பு, ஓக. 22
புதிய அரசமைப்பு தொடர்பில் ஆராய்வதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விஷேட குழுவொன்றை நியமிக்கத் தீர்மானித்துள்ளது. குழு முன்வைக்கும் பரிந்துரைகளுக்கு அமைய புதிய அரசமைப்பு குறித்த தமது நிலைப்பாட்டை வெளியிடவுள்ளதாக அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மத்திய குழுக் கூட்டம் கொழும்பு 10 , டார்லி வீதியில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் வியாழக்கிழமை மாலை கூடியது. இதன்போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மத்திய குழுக் கூட்டம் நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கட்சியின் பொதுச் செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, புதிதாக கொண்டு வரப்படவுள்ள அரசமைப்பு திருத்தம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்பதற்காக குழுவொன்றை அமைப்பதற்கு மத்திய குழு தீர்மானித்துள்ளது. இந்தக் குழு முன்வைக்கின்ற பரிந்துரைகளை ஆராய்ந்து அதற்கேற்ப எமது நிலைப்பாடு வெளிப்படுத்தப்படும்.

நாட்டுக்கு அவசியமான அரசமைப்பை உருவாக்குவதற்குத் தேவையான பலத்தை வழங்குவதற்கு நாம் தயாராகவுள்ளோம். அதற்கான நடவடிக்கைகள் மற்றும் சமகால அரசியல் நிலவரம் பற்றியும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.- என்றார் (து)

## விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஓக.22
தந்தை ஒருவர் தனது மகளின் திருமண நாள் அன்று பாரவூர்த்தி ஒன்றுடன் மோதுண்டு உயிரிழந்துள்ள சம்பவம் தும்மலசூரிய பிபிலதெனிய பிரதேசத்தில் பதிவாகியுள்ளது. 70 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். தனது மகளுடன் அழகு நிலையத்துக்கு சென்று விட்டு, பின்னர் அவர் தனியாக வீடு திரும்பிக் கொண்டிருந்த போது இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். விபத்துக் குறித்து மேலதிக விசாரணைகளை தும்மல சூரிய பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ரி2)

## கட்டுநாயக்கவில் பறிக்கப்பட்டது ‘குஷ்’

கொழும்பு, ஓக.22
வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ‘குஷ்’ எனப்படும் கஞ்சா கட்டுநாயக்க இலங்கை சுங்கப் பிரிவின் போதைப்பொருள் தடுப்பு பிரிவால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சுமார் 22 இலட்சம் ரூபா பெறுமதியான இந்த 222 கிராம் குஷ் கஞ்சாவை, இலங்கை சுங்கப் பிரிவின் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் கட்டுநாயக்கவில் அமைந்துள்ள ஒரு பொதிகளை விநியோகம் செய்யும் நிறுவனத்திடமிருந்து பறிமுதல் செய்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக சுங்கப் பிரிவினர் சேகரித்த உளவுத் தகவலுக்கு அமைவாக இந்த போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்த குஷ் கஞ்சா அமெரிக்காவிலிருந்து பொதிகள் மூலம் இலங்கையில் வசிக்கும் நபர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்த அதிகாரிகள், அதைப் பெற்றுக்கொள்ள எவரும் இன்னும் வரவில்லை என்றும் கூறியுள்ளனர்.

பிஸ்கட் பொதி, தொலைபேசிகள் மற்றும் கிருமி நீக்கும் கருவிகள் என்பவற்றில் மிகவும் சூட்சுமமான முறையில் மறைக்கப்பட்டு கொழும்பில் வெவ்வேறு பகுதிகளில் வசிக்கும் நபர்களுக்கு இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இது வரையில் சந்தேக நபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் சுங்க திணைக்கள போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

## நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் 12 எம்.பிக்கள்

கொழும்பு, ஓக.22
நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பெயரிடப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடியபோது, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன இந்தப் பெயர்களை முறையாக அறிவித்தார். அரசாங்க தரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஏழு எம்.பிக்களும், எதிர்த் தரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிமல் சிறிபால டிசில்வா, தினேஷ் குணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, டக்ளஸ் தேவானந்தா, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ச, பிரசன்ன ரணதுங்க, லக்ஸ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக்க, ரவூப் ஹக்கீம், விஜித்த ஹேரத், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ)

### புதிய கல்வித்திட்டம்;

## மக்களின் கருத்துக்கள் கேட்டறிய ஏற்பாடு

கொழும்பு, ஓக.22
புதிய கல்வித்திட்டம் குறித்து மக்களின் கருத்துகளைக் கேட்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரம் முதல் இந்த நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக தேசிய கல்வி நிறுவகம் தெரிவித்துள்ளது.

மாவட்ட ரீதியில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயரத்ன நவரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முன்பள்ளிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக மகளிர் விவகார மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்வி சேவைகள் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார். இதன் ஒருகட்டமாக முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்களின் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு திட்டமிடப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரி2)

## யுனிசெப் பாராட்டு

கொழும்பு, ஓக.22
கொரோனாவைக் கட்டுப்படுத்தி பாதுகாப்பாக மாணவர்களை பாடசாலைக்கு அழைத்து வந்த முதல் நாடு இலங்கை என்று யுனிசெப் நிறுவனம் பாராட்டுத் தெரிவித்துள்ளது. யுனிசெப் நிறுவனத்தின் இலங்கை பிரதிநிதி விம்சுடன் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட் டுள்ளது. மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்கு சிறந்த இடம் பாடசாலை. பாடசாலைகளைத் திறப்பது மிகவும் முக்கியமாகும். பாடசாலைகள் மூடப்பட்ட சந்தர்ப்பத்தில் கற்கை நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்ற போதிலும் கற்பதற்கான சிறந்த இடம் பாடசாலையாகும். எப்படியிருப்பினும் கொரோனாத் தடுப்புக்கான சுகாதார வழிக்காட்டல்களைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# வடக்கு, கிழக்கு தமிழர் மனங்களில் இடம் பிடித்துள்ளாராம் ஜனாதிபதி

## கண்டுபிடித்தார் ஆளுநர் சார்ள்ஸ்

**முல்லைத்தீவு, ஓக. 22**

**வடக்கு மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் ஜனாதிபதியின் செயற்பாட்டையும், அவரின் நேர்மையான திறமையான முடிவுகளையும் மக்கள் தற்போது ஏற்றுக்கொள்ள ஆரம்பித்துள்ளார்கள். இதனைப் பொறுக்க முடியாதவர்கள் தொடர்ந்தும் பொய்யான பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளார்கள் எனவே மக்கள் அதனைப் புரிந்துகொள்ளவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.**

முல்லைத்தீவில் நான்கு பாடசாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்களைத் திறப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடமாகாணத்தில் சட்டவிரோத மான நடவடிக்கைகள் அனைத்தும் நிறுத்தப்படவேண்டும். சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்படவேண்டும். மாணவர்கள் சுதந்திரமாக தங்கள் கல்வியைப் பெற உத்தரவாதம் வழங்கப்படவேண்டும். இதற்கு அத்தனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். அதற்கான சகல முயற்சிகளும் தற்போது ஆரம்பித்து விட்டன. வன்முறைகள் நடந்து கொண்டிருக்கின்றன. போதைவஸ்து கடத்திக்கொண்டிருக்கின்றார்கள். மாணவர் சமூகம் சீரழிந்து கொண்டிருக்கின்றது. குடும்பங்கள் வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களுக்கான வாழ்வாதாரம் இல்லை. இந்த நிலையில் இவற்றை விட்டுவிட்டு சம்பந்தம் இல்லாத விடயங்கள் தான் இந்த மாகாணத்தில் பேசப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

ஒரு கருத்தியலை சமூகத்தில் பரப்புவதன் ஊடாகத் தவறான பாதையில் இட்டுச் செல்ல வேண்டும் என்பது ஒரு குழுவினரின் செயற்பாடு. அவர்களின் முயற்சிகளை அண்மையில் நடந்த தேர்தல் முடிவுகளில் மக்கள் தோற்கடித்துள்ளார்கள். தேவையற்ற பொய்யான பிரசாரங்கள், வீண் கதைகள், பொய் வதந்திகளுக்கு எல்லாம் மக்களால் பதிலடி கொடுக்கப்பட்டுள்ளது. உண்மைகளைத் தரிசிக்க முயலுங்கள். உண்மைகளின் ஊடாக இந்த மாகாணத்தின் அபிவிருத்தியைப் பெற்றுக்கொள்ளத் தயாராகுங்கள் - என்றார். (ப-19)



## பாடசாலைக் கட்டடங்களை திறந்தார் வடக்கு ஆளுநர்

முல்லைத்தீவு, ஓக. 22

அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சினால் முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு பாடசாலைகளில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்று திறந்து வைக்கப்பட்டன.

முள்ளியளை வித்தியானந்தாக் கல்லூரி, தண்ணீரூற்று இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, முல்லைத்தீவு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அமைக்கப்பட்ட கட்டங்களே திறந்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், கல்வித் திணைக்கள அதிகாரிகள், வலயக் கல்விப் பணிப்பாளர், அதிபர், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ப-19)

## பயன்பாடற்ற நிலங்கள் விளை நிலங்களாக மாறும்

### அமைச்சர் டக்ளஸ் உறுதி

கொழும்பு ஓக. 22

வடக்கு மாகாணத்தில் பல்வேறு திணைக்களங்களின் பிடியில் பயன்பாடின்றி சிக்கிக் கிடக்கும் நிலங்களை விடுவித்து நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாயச் செய்கையை மேம்படுத்துவதே தமது நோக்கம் என்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றக் கன்னியமர்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

வடக்கில் காணப்படும் விவசாயத்துக்குப் பொருத்தமான காணிகள் அனைத்திலும் விவசாய நடவடிக்கையை மேற்கொண்டு நெல் உள்ளிட்ட உப உணவுப் பயிர்களை அதிகளவில் உற்பத்தி செய்வதன் ஊடாக அவற்றின் இறக்குமதிகளை நிறுத்தி, உணவு உற்பத்தியில் எமது நாட்டை தன்னிறைவு காணச் செய்வதே எமது ஆரம்ப இலக்காகும் - என்றார். (ப)

## திருட்டு முயற்சி; சந்தேகநபர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம். ஓக.22

கோப்பாய் பிரதேசத்தில் திருட்டுச் சம்பவத்தில் ஈடுபடுவதற்கு முற்பட்ட ஒருவரை பிரதேச இளைஞர்கள் ஒன்று சேர்ந்து மடக்கிப்பிடித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்றது. குறித்த நபர் அந்தப் பகுதியில் திருமணச் சடங்குகள் எங்கெங்கு நடைபெறுகின்றன என்ற தகவல்களை அங்குள்ள சில வீடுகளுக்குச் சென்று பெற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. பிடிக்கப்பட்ட சந்தேக நபரை இளைஞர்கள் பொலிஸில் ஒப்படைத்தனர். கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (ப-17)

## நகர சபையின் கீழ் வருகிறது திருமலை மொத்த மீன் சந்தை

### பிரேரணை நிறைவேற்றம்

திருகோணமலை,ஓக.22

திருகோணமலை மொத்த மீன் சந்தையை திருகோணமலை நகரசபையின் கீழ் கொண்டுவருவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நகரசபை உறுப்பினர் சத்தியனால் கொண்டுவரப்பட்ட இந்தப் பிரேரணையே கடந்த செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்டது.

திருகோணமலை மொத்த மீன் சந்தை கடந்த 2014 ஆம் ஆண்டு கடற்றொழில் பிரதி அமைச்சர் மூலமாக திருகோணமலை நகரசபையிடம் இருந்து எடுக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை நேர்த்தியாக நகர சபைக்கு வரிப்பணம் கட்டப்படுவதில்லை. இதனால் நகரத்தில் வாழும் மக்களுக்குச் செய்யப்படவேண்டிய அபிவிருத்திகள் மந்தமான நிலையில் நடைபெறுகின்றன. சட்டப்படி சந்தைகள் அனைத்தும் உள்ளூராட்சி சபைகளின் கீழ்தான் இயங்க வேண்டும். திருகோணமலை மொத்த மீன்சந்தையின் வருமானம் பெருந்தொகையாக இருந்தும் அது நகரசபையின் கீழ் இல்லாமல் இருப்பதால் நகர மக்களுக்கு இது பெரும் இழப்பு எனவும், இதனால் 2014 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை நீக்கப்பட வேண்டும் என்றும் பிரேரணையில் உறுப்பினர் சத்தியன் கோரியிருந்தார்.

அவர் கொண்டுவந்த அந்தப் பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டது. (ப)

## நீர் வழங்கல் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டி கவனவீர்ப்பு

வாழைச்சேனை, ஓக. 22

வாழைச்சேனை பிரதேசத்தில் நிலக்கீழ் நீர் மட்டம் குறைவடைவதால் ஏற்படும் சமூக நீர் வழங்கல் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும் என்று கோரி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.




இவ்வருடத்தில் மே மாதத்தில் இருந்து நிலக்கீழ் நீரானது மிக மோசமாக வற்றிப் போகின்றது. இதனால் பொதுமக்கள் தேவையான அளவு குடிதண்ணீரைப் பெறமுடியாதுள்ளதுடன், வீட்டுச் சமையல், ஆடைகளைக் கழுவுதல், வீட்டுத்தோட்டத்தைப்பராமரித்தல், கால் நடைகளுக்கு நீரில்லாமல் போதல் ஆகிய பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டி உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

வாழைச்சேனை புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் இரண்டு பனிக் கட்டித் தொழிற்சாலைகள், மற்றும் ஒரு சுத்திகரிக்கப்பட்ட நீர் விற்பனை நிலையம் உள்ளன. அத்தோடு கறுவாக்கேணி பிரதான வீதியில் ஒரு ஐஸ் தொழிற்சாலை. மற்றும் கிண்ணையடி பிரதான வீதியில் ஒரு பனிக் கட்டித் தொழிற்சாலை என ஐந்து தொழிற்சாலைகளும் பல இலட்சக்கணக்கான லீற்றர் நீரைத் தினமும் இயந்திரங்கள் மூலம் உறிஞ்சி எடுப்பதனால் நிலத்தடி நீர் இல்லாமல் செய்யப்படுகிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டது. (ப-150)

## கிளிநொச்சியில் சுகாதாரப் பிரிவு திடீர் பாய்ச்சல்

கிளிநொச்சி . ஓக.22

கிளிநொச்சி, கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்கள் நேற்று சுகாதார அதிகாரிகளின் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பரிசோதனையில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவு கையாளும் நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டு, சீர்கேட்டை நிவர்த்தி செய்யுமாறு எச்சரிக்கை செய்யப்பட்டதோடு, அது வரை நிலையத்தை மூடுமாறும் உத்தரவிடப்பட்டது. தமது அறிவுறுத்தல்களை மீறி அவை திறக்கப்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அறிவுறுத்தப்பட்டது. (ப-9)

# காணியைத் துப்பரவாக்க முல்லையில் இராணுவம் தடை

முல்லைத்தீவு, ஓக. 22

**மக்கள் தமது சொந்தக் காணிகளைத் துப்புரவு செய்யவும் முல்லைத்தீவில் இராணுவத்தினர் தடையை ஏற்படுத்தி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. முல்லைத்தீவு, பேராறு வசந்தபுரத்தில் தனது சொந்தக் காணி ஒன்றைத் துப்புரவு செய்துகொண்டிருந்த காணியின் உரிமையாளருக்கு தடையை ஏற்படுத்திய இராணுவத்தினர், காணியைத் துப்புரவு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட இயந்திரத்தைக் கொண்டுசென்றதுடன், சாரதியையும் இராணுவமுகாமுக்கு அழைத்துள்ளனர்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் பேராறு வசந்தபுரம் கிராமத்தில் தமது காணிகளைத் துப்பரவாக்குவதற்காக நேற்றுமுன்தினம் சென்ற காணியின் உரிமையாளர் ஒருவர் டோசர் இயந்திரத்தால் காணியைத் துப்புரவு செய்துள்ளார். அங்கு வந்த இராணுவத்தினர் காணி உரிமையாளரின் அடையாளத்தைப் பதிவு செய்துள்ளனர். அத்தோடு காணிக்கான ஆவணத்தைக் காட்டுமாறும் வற்புறுத்தியுள்ளனர். இரண்டு ஏக்கர் காணிக்கு உரிய உறுதிப்பத்திரம் இருந்தும் காணியைத் துப்புரவு செய்ய அவர்கள் தடைவிதித்துள்ளனர்.



காணிகளைத் துப்புரவு செய்த இயந்திரத்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள 64 ஆவது படைப் பிரிவினரின் முகாமுக்குக்கொண்டு சென்றனர். அந்த இயந்திரத்தின் சாரதியும் முகாமுக்குக் கூட்டிச் செல்லப்பட்டார். முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும், மக்கள் தமது சொந்தக் காணிகளைத் துப்புரவு செய்யும்போதெல்லாம் படையினர் இவ்வாறு தடைகளை ஏற்படுத்துகின்றனர் என்று பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவித்தனர். (ப-19)

## மக்களுக்குப் புரியாத கஜேந்திரகுமாரின் பேச்சு

யாழ்ப்பாணம், ஓக. 22

கடந்த 10 ஆண்டுகளின் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்றக் கன்னி அமர்வில் ஆங்கிலத்தில் உரையாற்றியது தொடர்பில் அவருக்கு வாக்களித்த மக்களில் அதிகமானோரை விசனிக்க வைத்துள்ளது. அவருடைய உரை மக்களுக்குப் புரியவில்லை என்று அவர்கள் விசனித்தனர்.

9ஆவது நாடாளுமன்றக் கன்னியமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அங்கு கட்சிகளின் தலைவர்களுக்கு உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இதன்போது கஜேந்திரகுமார் தமிழ் மொழியைப் புறக்கணித்து ஆங்கிலத்தில் மட்டும் உரையாற்றினார். அவருடைய அந்தப் பேச்சு, அவர் என்ன பேசுகிறார் என்பதை விளங்கிக்கொள்ள முடியாதிருந்தது என்றும், அவரை நாடாளுமன்றுக்கு அனுப்பிவைத்த மக்களுக்கு விளங்கும் வகையில் அவர் பேசியிருக்க வேண்டும் என்றும் மக்கள் கவலை தெரிவித்தனர்.

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற தமிழ்க் கட்சிகளின் தலைவர்களான இரா சம்பந்தன், டக்ளஸ் தேவானந்தா த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், சிவிவிக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மனோ கணேசன், சி. சந்திரகாந்தன் ஆகியோருக்கு உரையாற்றுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சித்தார்த்தன், அடைக்கலநாதன், மனோகணேசன், சந்திரகாந்தன் ஆகியோர் தமிழில் மட்டும் உரையாற்றினர். சி.வி.விக்னேஸ்வரன் சபாநாயகருக்கான வாழ்த்தை மட்டும் தமிழில் கூறிவிட்டு ஆங்கிலத்தில் உரையாற்றினார். இரா.சம்பந்தனும் ஒருசில வார்த்தைகளை தமிழில் கூறிவிட்டு தொடர்ந்து ஆங்கிலத்தில் உரையாற்றினார். (ப-159)

## கிளிநொச்சி நீர்ப்பாசனம் இரு பிரிவுகளாக மாற்றம்

கிளிநொச்சி மாவட்டம் இரண்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவுகளைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டம் 9 பெரும் நடுத்தரக் குளங்களைக் கொண்டது. அந்த 9 நடுத்தரக் குளங்களையும் ஒரு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவுக்கு உட்படுத்தி அதில் ஒரு பொறியியலாளரும் இதற்கான ஆளணியினரும், ஒரு பிரிவிவுக்கான நிதி ஒதுக்கமுமே இதுவரை காலமும் இருந்து வந்தது. இது மிகச் சிரமமான ஒன்றாகக் கூறப்பட்டது. இதனால் ஏற்பட்ட பல்வேறு கஷ்டங்களையும், சிரமங்களையும் பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியதன் விளைவாக தற்போது இரண்டு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி கிழக்குப் பிரிவாக இரணைமடு, கனகாம்பிகை, கல்மடு, பிரமந்தனாறு ஆகிய குளங்களை உள்ளடக்கிய ஒரு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவாகவும், கிளிநொச்சி மேற்குப் பிரிவாக அக்கராயன், வன்னேரி, பல்லவராயன்கட்டு, குடமுருட்டி, முறிப்பு ஆகிய குளங்களை உள்ளடக்கியதான மற்றுமொரு நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கிளி.மேற்கிற்கான அலுவலகம் கிளிநொச்சியில் நேற்று மதியம் 1.30 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ப-222)

## வீதி விபத்தைக் குறைக்க வேகத்தைக் குறையுங்கள்

### மருத்துவர் யமுனாநந்தா ஆலோசனை

யாழ்ப்பாணம், ஓக. 22

வேகத்தைக் குறைத்து விவேகமாகச் செயற்படுவதன் மூலமே யாழ்ப்பாணத்தில் விபத்துக்களைக் குறைக்க முடியும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி. யமுனாநந்தா தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்த அவர்;

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது வீதி விபத்துகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. கொரோனாத் தாக்கத்தின்பின்போக்குவரத்து முடக்கங்கள் காணப்பட்டதன் காரணமாக விபத்துக்கள் குறைந்திருந்தன. ஆனால் ஜுன் மாதத்துக்குப் பின்னர் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த மாதம் மட்டும் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சுமார் 180 பேர் வீதி விபத்துக்கால் காயமடைந்து சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்கள். ஒரு சிலர் இறந்துள்ளார்கள். பலர் விபத்துக்கள் இடம்பெற்ற இடத்திலேயே இறந்துள்ளார்கள்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் பாடசாலை வீதிகளில் நெரிசல் காணப்படுகின்ற போதிலும், விரைவாக வேலைக்குச் செல்ல வேண்டும், பாடசாலைக்குச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் வேகமாகச் செல்லும் போதும் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே வேகத்தைக் குறைத்து விவேகமாகப் பயணிப்பதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விபத்துக்களைக் கட்டுப்படுத்த முடியும் என்றார். (ப-111)

## எஸ்.வி.பி நலம்பெறவேண்டி கொழும்பில் கூட்டுவழிபாடு!

யாழ்ப்பாணம், ஓக. 22

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் விரைவில் குணமடைந்து வீடு திரும்ப வேண்டி கூட்டு பிரார்த்தனை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கை தமிழ் கலைஞர்கள் சங்கம் மற்றும் இலங்கை நெய்னார் சமூக நல காப்பகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் பாடகர் இர்பான் முஹம்மத் தலைமையில் இடம்பெற்றது. இதில் இலங்கை நெய்னார் சமூக நல காப்பக தலைவர் இம்ரான் நெய்னார், பிரபல கலைஞர் படத்தயாரிப்பாளர் ஸ்ருதி பிரபா, நிகழ்ச்சி தயாரிப்பாளர்களான ஆனந்தராஜ், ராஜஸ்வர், ஜெய்கணேஸ், மோகன் மற்றும் இர்ஷாத் மவுலானா ஹஸ்னி முஹம்மத் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம)



அக்கராயன்,வன்னேரி, பல்லவராயன்கட்டு, குடமுருட்டி, புதுமுறிப்பு ஆகிய குளங்களை உள்ளடக்கிய கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவுக்கான அலுவலகம் வடமாகாண ஆளுநரால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. (ப)

## சாந்தபண்டார பதவி விலகத் தீர்மானம்

கொழும்பு, ஓக.22

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் பதவியிலிருந்து, நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தபண்டார விலகுவதற்குத் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தான் நீண்ட காலமாக இந்தப் பதவியை வகித்து வருகின்றமையினால், புதியவர் ஒருவருக்கு இந்த வாய்ப்பை வழங்குவதற்காக, பதவி விலகத் தீர்மானித்துள்ளேன் என்று சாந்தபண்டார மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரி2)





# மகிமை வாய்ந்த விநாயகர் சதுர்த்தி

சிவரம்யா

விநாயக சதுர்த்தி இந்து விழாக்களில் மிகவும் மகிமை வாய்ந்த ஒன்றாகும். இது விநாயகரின் ஜன்மதினமாகும் விநாயகப் பெருமானுக்கு மிகவும் உகந்தநாள் இது. ஆவணி மாதம், வளர்பிறையில் வரும் சதுர்த்தியை (நான்காம் பிறை) விநாயகர் சதுர்த்தி எனக் கொண்டாடுகிறோம்.

சாட்சாத் பிரம்மமானவரும், பரம் பொருளானவரும், சிவனின் சக்தியாக அமைபவரும் அனைத்து ஆனந்தத்தின் காரணமானவரும், எல்லா நலன்களையும் காரியங்களில் வெற்றியையும் அள்ளித்தருள்பவரும் விநாயகப் பெருமானே.

"விநாயகப் பெருமானே! எலியை உமது வாகனமாகக் கொண்டு, கையில் கொழுக்கட்டையுடன், நீண்ட தும்பிக்கை மற்றும் அகன்ற காதுகளுடன் குறுகிய உருவத்தில் சிவனார்மைந்தனாக எல்லா விக்னங்களையும் நீக்கும் உமது திருப்பாதங்களை வணங்குகிறோம்.

"வி" என்பதற்கு இல்லை என்றும் பொருள் உண்டு. விநாயகர் என்றால் தனக்கு மேல் நாயகன் (தலைவன்) இல்லை என்றும் பொருள் தருவதாகும். எந்தக் காரியத்துக்கும் விக்னம் நேராமல் இருக்க விநாயகரை முதலில் வழிபட வேண்டும். இதனால் இவரை விக்னேஸ்வரர் என்றும் அழைக்கின்றோம். கணபதி என்றால் கணங்களின் தலைவன். இப்பெருமான் யானை முகம் கொண்டவர். 'உ' என்பது பிள்ளையார் சுழி. நாம் எதனை எழுதத் தொடங்கினாலும் முதலில் பிள்ளையார் சுழி இடாமல் தொடங்குவதில்லை. விநாயகரைப் போன்ற எளிமையான தெய்வம் வேறில்லை. ஆற்றங்கரையிலும் குளக்கரையிலும் அரச மரத்தடியிலும் விநாயகரைக் காணலாம்.

ஞானம் மற்றும் ஆனந்தத்தின் உருவகம் கணேசப் பெருமான் ஒரு சிறிய எலியே அவரது வாகனம். எலியின் மீது சவாரி செய்வது ஆணவத்தை முற்றாக அடக்குவதைக் குறிக்கிறது. அங்குசத்தை வைத்திருப்பது அவர் உலகத்தை அடக்கி ஆள்வதைக் குறிக்கிறது.

முன்னொரு காலத்தில் உதித்த சிந்தூரன் என்பவனைக் கொல்லும் பொருட்டு விநாயகர் திருவவதாரம் செய்தருளிய தினம் இவ் விசேட தினமாகும். இத் தினமானது உலக காரணராகிய சிவபிரானே பூசித்ததும் மகிமையும் கீர்த்தியும் வாய்ந்ததுமான நாளாகும்.

யானை முகமும், பெருஞ்சாளி வாகனமும் விநாயகரின் விவேகபுத்திகளின் அடையாளங்களென்று மதிக்கப்படுகின்றன. அவரது ஞானம், விவேகம், திறன், சுறுசுறுப்பு என்பனவற்றை அறிந்தே வியாச முனிவர் மகாபாரதத்தைத் தங்குதடையின்றி எழுதுவதற்கு விநாயகப் பெருமானைச் சதித்து கருமத்தை ஆரம்பித்தார். பண்டைக்காலத்துப் புலவர்கள், நூலாசிரியர்கள் விநாயகரை வணங்கியே தம் நூல்களைப் பாடினர். சிரசிலே குட்டுதல்; தோப்புக்கரணம் போடுதல் என்பன விசேடமாக விநாயகரை வழிபடும் முறைகளாகும். இதனால் நல்ல தேகாரோக்கியம் கிடைக்கிறது.

> சாட்சாத் பிரம்மமானவரும், பரம் பொருளானவரும், சிவனின் சக்தியாக அமைபவரும் அனைத்து ஆனந்தத்தின் காரணமானவரும், எல்லா நலன்களையும் காரியங்களில் வெற்றியையும் அள்ளித்தருள்பவரும் விநாயகப் பெருமானே.

விநாயகருக்குப் பல வகையான மலர்களைக் காட்டிலும் அறுகம் புல்லே மிகவும் உவப்பைத் தருவதாகும். இந்நாளில் இளம் பிறைச் சந்திரனைப் பார்த்தலாகாது. பகலில் உபவாசம் இருந்து ஆலய தரிசனம் செய்த பின், இரவில் கொழுக்கட்டை மோதகம் முதலியவை விநாயகருக்கு நிவேதித்து உண்ணலாம். உள்ளே இனிப்பைக் கொண்ட அரிசி மாவினால் செய்த கொழுக்கட்டை, மோதகம் விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது.

இந்நாளில் அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து நீராடி கணேசர் கதைகளை, மந்திரங்களைக் கூறுவது, படிப்பது நலம் தரும். விநாயகர் கோவிலுக்குச் சென்று கணேசரை பூசை செய்தல் வேண்டும்.

இந்தியாவில் வெகு விமரிசையாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. களி மண்ணில் விநாயகரின் உருவங்கள் உருவாக்கப்பட்டு இரண்டு நாள்கள் வழிபடப்பட்டு (சில சமயங்களில் பத்து நாள்கள் கொண்டாடப்படுகிறது.) பின்னர் அவை நீரில் கரைக்கப்படுகின்றன. கருங்கல், பொன், வெள்ளி, மரம், சுதை மேலும் சாணம், சந்தனம், மஞ்சள் என்பனவற்றால் திருவுருவம் அமைத்து வழிபடலாம்.

இத் தினத்தில் விரதம் அனுட்டித்து உள்ளன்போடு வழிபடுவோர்க்கு விநாயகர் திருவருள் கடாட்சம் கிடைக்கும் என்பது உறுதி. எல்லா சிறப்பும் பெற்று தடைகளை கடந்து முக்தியையும் நல்வாழ்வையும் பெறுவோமாக.

## வாகன புகை பரிசோதனை தேவையா தேவையில்லையா?

### திருத்தம் பற்றியும் ஆராய்கிறது அரசு

கொழும்பு, ஓக. 22

மோட்டார் வாகன உரிமங்களை வழங்க வாகன புகை சோதனை சான்றிதழ் வழங்குவது அவசியமா அவசியமில்லையா? என்றும் தேவையெனின், அதில் திருத்தம் செய்வது பற்றியும் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

ஆண்டுதோறும் மோட்டார் வாகன உரிமங்களை வழங்குவதற்கு முன்னோடியாக இப் பரிசோதனை நடத்தப்படுகின்றது. இந்த நிலையிலேயே அந்த வகையான புகைப் பரிசோதனை முறை தொடர்பில் அரசு பரிசீலிக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காபன் புகையை வெளியிடும் வாகனங்களை அனுமதிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாடு குறித்து ஜனாதிபதி கவனம் செலுத்தியுள்ளதாக வாகன ஒழுங்குமுறை, பஸ் போக்குவரத்து சேவைகள், வண்டிகள் மற்றும் வாகனத் துறை அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நாட்டின் மூன்று முக்கிய நிறுவனங்களால் இயக்கப்படும் சோதனை மையங்கள் உட்பட, பல புகைப்பரிசோதனை நிலையங்கள் ஊழல் மையங்களாக மாறியுள்ள நிலையில், தற்போதுள்ள காபன் புகை சோதனை முறையை விரைவில் திருத்த அரசு விரும்புகிறது.

ஒழுங்குமுறை தேவைகளைத் தவிர்ப்பதற்காக ஊழியர்களுக்கு இலஞ்சம் வழங்குவது குறித்தும், மையங்களில் பணிபுரியும் பயிற்சி பெறாத சோதனை ஊழியர்கள் குறித்தும் பல புகார்கள் வந்துள்ளன என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (த)

## காலத்துக்கேற்ப பாடவிதானங்களை நவீனப்படுத்த கல்வி அமைச்சு திட்டம்

கொழும்பு, ஓக. 22



தற்போதைய காலகட்டத்துக்கு ஏற்றவாறு பாடவிதானங்களை நவீனப்படுத்தவுள்ளதாகவும், அபிவிருத்திக்காக புதிய அமைச்சரவை பத்திரம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிரதான பாடசாலைகளின் அதிபர்களுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த அமைச்சரவைப் பத்திரம் விரைவில் தயாரிக்கப்படவுள்ளது என்றும், உயர்தரங்களுக்கான பாடப்புத்தகங்களை வழங்குவது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி2)

## தேக்க மரக் குற்றிகள் மீட்பு

கிளிநொச்சி, ஓக 22

அனுமதிப்பத்திரம் இன்றிக் கடத்தப்பட்ட தேக்க மரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதுடன், அவற்றைக் கொண்டு சென்ற உழவியந்திரத்தையும் கைப்பற்றியுள்ளதாக மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் கீழ் மாவட்ட போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் இயங்கி வருகின்றனர். அவர்களுக்கு நேற்றைய தினம் மரக்குற்றிகள் கடத்தப்படுவதாக இரகசியத் தகவல் கிடைத்தது. இதற்கு அமைய விரைந்து செயற்பட்ட பொலிஸ் குழுவினர் இரணைமடுப் பகுதியில் வைத்து மரக் குற்றிகளையும் உழவியந்திரத்தையும் கைப்பற்றினர். பொலிஸாரின் வருகையை அவதானித்த உழவு இயந்திரச் சாரதி தப்பிச் சென்றுள்ளார். 15 தேக்க மரக்குற்றிகள் இதன்போது மீட்கப்பட்டன.

உழவியந்திரம், மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட போதைப்பொருள் தடுப்புப்பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் சதுரங்க தெரிவித்தார். (இ-6)

# அரசமைப்பு மாற்றத்தை ஆதரித்தால் சிக்கல் வரும்

## சுட்டிக்காட்டுகிறார் முன்னாள் எம்.பி

**கொழும்பு, ஓக. 22**

**தமிழ் பேசும் உறுப்பினர்களும், முற்போக்காக சிந்திப்பவர்களும் 13ஆவது திருத்தச் சட்டத்தை பலவீனப்படுத்துவதிலோ 19ஆவது திருத்தச் சட்டத்தை பலவீனப்படுத்துவதற்கோ ஆதரவு தெரிவித்தால் இந்த நாட்டில் மீண்டும் பல பிரச்சினைகள் எழுவதற்கான வாய்ப்பிருக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.**

மட்டு.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சர்வாதிகாரத்துவ ஜனாதிபதி ஆட்சி முறையில் இருந்து மக்களை மீட்டெடுத்து ஜனநாயகத்தினையும் மக்கள்உரிமை சுதந்திரத்தினையும் பலப்படுத்தக்கூடிய தன்மையினை 19வது திருத்தம் கொண்டிருந்தது. அதனை அகற்றுவது என்பது ஜனநாயகத்தின் மீது கைவைப்பதாக இருக்கும்.

எதேச்சதிகாரம்கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தி ஜனாதிபதியின் சர்வாதிகார போக்குகளைக் கட்டுப்படுத்தி நாடாளுமன்ற அதிகாரங்களை உயர்த்தக்கூடிய வகையிலும் சுயாதீன ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை சுயாதீனமாகச் செயற்படக்கூடிய விதத்திலும் 19ஆவது திருத்தம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

19வது திருத்தச் சட்டத்தில் சுயாதீன ஆணைக்குழுக்கள் பல காணப்படுகின்றன. இதில் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் செயற்படக்கூடிய சூழ்நிலைகள் காணப்பட்டன. 19வது திருத்தச்சட்டம் அகற்றப்படும்போது சுயாதீன ஆணைக்குழுவினை கட்டுப்படுத்துகின்ற அதிகாரத்தினை ஜனாதிபதி தனது கைகளில் எடுக்கும்போது சுயாதீன ஆணைக்குழுக்கள் சுதந்திரமாக இயங்கமுடியாத நிலைக்குத் தள்ளப்படும்.

இவற்றுக்கெல்லாம் முடிவுகட்டி ஜனநாயகத்தினைப் பாதுகாக்கும் நோக்கிலேயே 19ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது.

இப்படிப்பட்ட ஜனநாயக முறைமைகளை எல்லாம் இல்லாதொழித்து மீண்டும் சிறுபான்மை இனங்களை அடக்கி ஓர் சர்வாதிகார, குடும்ப ஆட்சியினை தொடர்வதற்காகவே 19ஆவது திருத்தம் இல்லாதொழிக்கப்படவுள்ளது. இதற்கு சிறுபான்மையினக் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் ஆதரவளிக்கக்கூடாது. என்று கேட்டுக் கொண்டார்.

## பிக்குகளுக்கு அவமானமாகிய நாடாளுமன்ற ஆசனச் சண்டை

கொழும்பு, ஓக. 22

எங்கள் மக்கள் சக்தி கட்சிக்கு கிடைக்கப் பெற்றுள்ள ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்துக்கு மூன்று பிக்குகள் முரண்பட்டுக் கொள்கின்றமை பௌத்த மத கொள்கைகளையும், பௌத்த மக்களையும் அவமதிப்புக்குள்ளாக்கியுள்ளது.

இந்தவிடயம் தொடர்பில் மாநாயக்க தேரர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். மாநாயக்க தேரர்கள் தங்களின் பொறுப்புக்களை முறையாகச் செயற்படுத்தியிருந்தால் இந்தப் பிரச்சினை பாரதூரமாக தோற்றம் பெற்றிருக்காது என்று தெற்கு பௌத்த பீட பிரதான சங்க நாயக்கர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாநாயக்க தேரர்களுக்கு பௌத்த சாசனத்துக்கு அமைய வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் நிறைவேற்றப்பட்டுள்ளவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இனியாவது இந்த விடயத்தில் மாநாயக்க தேரர்கள் கவனம் செலுத்த வேண்டும். அபேஜன பல வேகய கட்சி பௌத்த தேசிய வாதத்தை முன்னிறுத்தி 67 ஆயிரம் மக்கள் ஆணையைப் பெற்றுள்ளது. என்றார். (த)

## அக்கிராசன உரை நாட்டுக்கு பாழ்!

### கூறுகின்றார் மங்கள சமரவீர

கொழும்பு, ஓக. 22

பெரும்பான்மைப் பார்வையை மையப்படுத்திய ஜனாதிபதியின் அக்கிராசன உரை, இலங்கை மிகப்பெரும் பின்நோக்கிய பாய்ச்சலொன்றுக்குத் தயாராக இருக்கவேண்டும் என்ற தனது அச்சத்தை மீளவும் உறுதிப்படுத்தும் வகையில் அமைந்திருப்பதாக முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

நாட்டின் ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. அங்கு கொள்கைப்பிரகடன உரை நிகழ்த்திய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச, மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் பெரும்பான்மை மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு நாம் எப்போதும் மதிப்பளிக்கின்றோம்.

புதிய நாடாளுமன்றம் நாட்டின் ஜனநாயகத்துக்கு இறுதிச்சடங்குகளை நடத்தியதாகவே வரலாற்றில் பதியப்படுமா? என்று ஏற்கனவே கேள்வியெழுப்பியிருந்த மங்கள சமரவீர, ஜனாதிபதியின் கொள்கைப்பிரகடன உரை தொடர்பில் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

அண்மைய காலங்களில் மிகச்சிறந்த ஒரு தேசிய விளையாட்டுக் கவுன்ஸிலை நியமித்தமைக்காக நாமல் ராஜபக்சவுக்கு வாழ்த்துக்களைக் கூறிக்கொள்கின்றேன்.

எனினும், பெரும்பான்மைப் பார்வையை மையப்படுத்திய உங்களுடைய சித்தப்பாவின் (ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின்) அக்கிராசன உரை, 'இலங்கை பின்நோக்கிய ஒரு பாய்ச்சலுக்குத் தயாராக இருக்கவேண்டும்' என்ற என்னுடைய அச்சத்தை மேலும் உறுதிப்படுத்துவதாகவே அமைந்திருக்கின்றது. என்று தெரிவித்துள்ளார். (த)

## ஆவணிச் சதுர்த்தி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஓக. 22

ஆவணிச் சதுர்த்தி விரதத்தை முன்னிட்டு கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் இன்று சனிக்கிழமை 108 சங்காபிஷேகம் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு சங்காபிஷேக ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெறும். தொடர்ந்து விநாயகப் பெருமான் வீதி வலம் வருதலும் நடைபெறும் என்று ஆலயத்தினர் அறிவித்துள்ளனர்.

+++

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்திலும் ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு இன்று சனிக்கிழமை சிறப்புப் பூசை வழிபாடுகள் நடைபெறும்.

மாலை 5 மணிக்கு விசேட அபிஷேகப் பூசைகள் நடைபெற்று சுவாமி வீதி வலம் வருவார்.

+++

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் ஆவணிச் சதுர்த்தியை முன்னிட்டு விநாயப்பெருமானுக்கு மாலை 4 மணிக்கு சிறப்புப் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி நடைபெறும்

+++

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி விரத வழிபாடுகள் இன்று சனிக்கிழமை காலை 8.45 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

தொடர்ந்து சுவாமி வீதிவலம் வருதலும் நடைபெறும். (ஐ-17)

## ராஜபக்ச குடும்பத்துக்கு சபையின் தொடக்கவுரை

### கிண்டலடிக்கின்றார் ஹர்ஷ

கொழும்பு, ஓக. 22

ஒன்பதாவது நாடாளுமன்றத்தில் தொடக்கவுரை ஆற்றுகின்ற கௌரவம், முதன்முறையாகப் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த நிபுண ரணவக்கவுக்குக் கிடைத்திருக்கிறது என்றும் இந்தப் புதிய நிலைவரங்கள் சுவாரஸ்ய மானவையாக இருக்கின்றன என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒன்பதாவது நாடாளுமன்றின் கன்னி அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கைப்பிரகடன உரையின் மீதான விவாதம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது முதலாவதுஉரையை நிபுண ரணவக்க நிகழ்த்தினார்.

இதுகுறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் ஹர்ஷ டி சில்வா, அதில் குறிப்பிட்டுள்ளதாவது:

இலங்கையின் 9 ஆவது பாராளுமன்றத்தில் தொடக்கவுரையை ஆற்றுகின்ற கௌரவம், முதலாவது உரை மாத்தறையிலிருந்து நாடாளுமன்றுக்கு முதற் தடவையாகத் தெரிவான ராஜபக்ச குடும்பத்தைச் சேர்ந்த நிபுண ரணவக்கவுக்கு கிடைத்திருக்கிறது. இந்த புதிய நிலவரங்கள் சுவாரஸ்யமானவையாக இருக்கின்றன என்று தெரிவித்திருக்கிறார். (த)

## புத்தளத்தில் ஐவர் கைது

கொழும்பு, ஓக. 22

புத்தளம் கல்லடி பிரதேசத்தில் ஹெரோய்ன், மாவா மற்றும் ஒரு தொகை பணம் என்பனவற்றுடன் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

புத்தளம் தலைமையக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் புத்தளம் கல்லடி மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் குறிப்பிட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 65 ஆயிரம் ரூபா பெறுமதியான 4 கிராம் 200 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மற்றும் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான மாவா என்பனளுளு பலமீட்கப்பட்டுள்ளன. (த)

## ஆணைக்குழுவில் நேற்று முற்பட்ட மலிக், ராஜித, மங்கள, சுமந்திரன்

கொழும்பு, ஓக. 22

முன்னாள் அமைச்சர்களான மலிக் சமரவிக்ரம, ராஜித சேனாரத்ன, மங்கள சமரவீர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதிவிசாரணை ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முற்பட்டனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் டாக்டர் நிஹால் ஜெயதிலக அளித்த முறைப்பாட்டுக்கு அமைவாக விசாரணைசெய்யவே அவர்கள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் முற்பட்டனர். (த)

### தருமபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட

# மருத்துவமனையை திறந்தும் நோயாளருக்கு விடிவில்லை

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

**கிளிநொச்சி, ஓக. 22**

**தருமபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வைத்தியசாலை நான்கு வருடங்களின் பின்னர் மக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டும், தாதியர் பற்றாக்குறை காரணமாக வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்படுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்து.**

தருமபுரம் வைத்தியசாலை அனைத்து வசதிகளும் நிறைந்த புதிய வைத்தியசாலையாக அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இருந்தும் தாதியர் இல்லாத காரணத்தால் இரவு வேளைகளில் அவசர தேவை கருதி வைத்தியசாலைக்கு வரும் மக்கள் அதிக பணம் கொடுத்து தனியார் வாகனங்களில் கிளிநொச்சி வைத்தியசாலைக்குச் செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. சுமார் 15க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இவ்வாறான நிலையை எதிர்கொண்டுள்ளனர். நோயாளர்களின் எதிர்பார்ப்புக்களை ஓரளவேனும் சரிசெய்ய வேண்டும் என்பதற்காக வைத்தியசாலையில் தற்பொமுது பணிபுரியும் தாதியர்கள் தமக்கான நேரத்தைவிட பல மணிநேரம் பணிபுரியும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுதொடர்பாக நிரந்தர தீர்வு பெற்றுத்தர வேண்டும் என தருமபுரம் வைத்தியசாலை நலம்புரிச் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்

(ப-113)

## ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

ஹட்டன், ஓக. 22

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட டிக்கோயா ஆற்றிலிருந்து நேற்று ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் யாருடையது என அடையாளம் காணப்படவில்லை. சுமார் 40 - 35 வயதுக்குக்கு இடைப்பட்டவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக டிக்கோயா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப)

## மத்தியஸ்த சபைகள் இன்று முதல் இயங்கும்

மட்டக்களப்பு, ஓக.22

நாட்டில் கொரோனாப் பரவல் காரணமாக பல மாதங்கள் இயங்காது இடைநிறுத்தப்பட்டிருந்த மத்தியஸ்த சபைகளின் அமர்வுகளை இன்று சனிக்கிழமை தொடக்கம் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு எடுத்துள்ளது.

சுகாதார வழிகாட்டுதல்களுக்கமைய மத்தியஸ்த குழாம் அமர்வுகளை ஆரம்பிப்பதற்கு மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது என மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மத்தியஸ்த பயிற்றுவிப்பாளர் எம்.ஐ.முகம்மட் ஆஸாத் தெரிவித்தார். (ரி1-30)

## இடைமாற்று வீட்டு அலகுகள் அமைக்க இந்தியா நிதி உதவி

கொழும்பு, ஓக.22

மன்னாரில் இடைமாற்று வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் ஆர்.ஏ. கொன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அபிவிருத்தி ம்ற்றும் ஒத்துழைப்புக்கான கவுன்சிலர் பானு பிரகாஷ், மற்றும் ஆர்.ஏ. கொன்ஸ்ட்ரக்சன் நிறுவனத்தினர் ஏனையோர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்த னர்.

பிரதி இந்திய உயர் ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப், சுற்றுலாத்துறை அமைச்சின் செயலர் எஸ்.ஹெட்டியாராச்சி ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தினால் அடையாளம் காணப்பட்டமைக்கு அமைவாக மன்னாரில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த 144 இடைமாற்று வீட்டு அலகுகளுக்கும் இந்திய அரசாங்கம் 30 கோடி இலங்கை ரூபா நிதி உதவியை வழங்கியுள்ளது. (ரி1)

## வெளிநாட்டு இறக்குமதிகள் நிறுத்தம்; அரசின் அறிவிப்பை வரவேற்கின்றோம்

### *யாழ். கமக்காரர் அமைப்பு அதிகார சபை தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஓக. 22

வெளிநாட்டு இறக்குமதிகள் நிறுத்தப்பட்டு உள்நாட்டு உற்பத்திகள் ஊக்குவிக்கப்படும் என்று புதிய அரசாங்கம் அறிவித்ததை வரவேற்கின்றோம் என யாழ் மாவட்ட கமக்காரர் அமைப்பு அதிகார சபையின் தலைவர் க. தியாகலிங்கம் தெரிவித்தார் யாழ்ப்பாணத்தின் விவசா,ய நிலைமைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ் மாவட்டத்தில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்குச் சந்தையில் நியாயமான விலை கிடைப்பதில்லை. எனினும் இந்தப் புதிய அரசாங்கம் உள்ளூர் உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுப்போம் எனவும் வெளிநாட்டு இறக்குமதியை கூடுதலாக நிறுத்துவோம் எனவும் அறிவித்துள்ளது. இது வரவேற்கக்கூடிய ஒரு விடயம். இதனைச் செயற்படுத்த வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். யாழ் மாவட்ட விவசாயிகள் இவ் வருடம் உருளைக்கிழங்கை பெரும் போகத்தில் அதிகளவில் பயிரிடவுள்ளார்கள். 350 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு கிடைக்குமாக இருந்தால் அதனைப் பயிரிட்டு அதன் மூலம் அவர்கள் பயனடைவர். கட்டாக்காலி நாய்களால் விவசாயிகள் பெரும் பிரச்சினையினை எதிர்கொள்கின்றனர். ஒரு நாளில் 20 பேர் வரையில் நாய் கடிக்கு இலக்காகின்றனர். எமது விவசாய நடவடிக்கைகளும் இவற்றால் பாதிப்படைகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இம்முறை காலம் பிந்திய மழையால் வெங்காயச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளது. இந்த அழிவுக்கு எந்த அரசாங்கமும் எமக்கு நிவாரணம் வழங்கியதில்லை. புதிய அரசாங்கம் விவசாயிகளின் பொருளாதாரத்தினை கருத்தில் கொண்டு இந்த வெங்காய அழிவுக்கு உரிய நிவாரணத்தை வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (ரி1)

### வன்னி வைத்தியசாலை, பாடசாலைகளின்

## வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஜனாதிபதியிடம் கோரிக்கை

வவுனியா, ஓக.22

வன்னி மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகள், பாடசாலைகளில் நீண்டகாலமாக நிலவிவரும் வெற்றிடங்களை நிரப்புமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கு. திலீபன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், நேற்றுமுன்தினம், இடம்பெற்ற ஜனாதிபதியுடனான சந்திப்பின்போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

வன்னியைச் சேர்ந்த மக்கள் நீண்டகாலமாக காணி உறுதிகள் பெற்றுக்கொள்ள முடியாமலிருப்பதும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டப்பட்டதோடு, இக்கோரிக்கைகளை விரைவுபடுத்தி தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-110)

## சிங்களத் தலைவர்களிடமிருந்தே மாற்றத்தை எதிர்பார்க்கும் தமிழர்

### *சிறீதரன் எம்.பி. எடுத்துரைப்பு*

மாற்றம் என்பது சிங்களத் தலைவர்களிடம் வரட்டும். மாற்றம் தமிழர்களிடம் வரவேண்டியதல்ல. தமிழர்களை யார் அழித்தார்களோ, யாரால் அவர்கள் கொல்லப்பட்டார்களோ, யாரிடமிருந்து தமது விடுதலைக்காகப் போராடுகின்றார்களோ அவர்களிடமிருந்தே தமிழர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

70 ஆண்டுகளாக நாட்டில் புரையோடிப்போயுள்ள தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ தனது கொள்கை விளக்க உரையில் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. இது மிகவும் மன வருத்தத்துக்குரியது, துரதிர்ஷ்டவசமானது. இந்த நாட்டின் முதன்மையான பிரச்சினையாக இருப்பது இனப்பிரச்சினை. இந்த நாட்டிலுள்ள இரு தேசிய இனங்களான சிங்கள, தமிழ் இனங்களில் தமிழினம் கடந்த பல வருடங்களாக இனப்படுகொலைகளை, அழிவுகளைச் சந்தித்து வந்த இனம். அதனால்தான் அவர்கள் மிகவும் நீண்டகால போராட்டத்துக்குள் தமது வாழ்க்கையை அர்ப்பணித்திருந்தார்கள். அவர்களின் போராட்ட வடிவங்கள் மௌனிக்கப்பட்டிருந்தாலும் இந்த நாட்டின் பிரஜைகள் நாங்கள் என்ற எண்ணம் அவர்களிடம் இன்னும் உருவாகாமல் இருக்கிறது. இந்த நாட்டிலே கொண்டுவரப்படுகின்ற பல்வேறு சட்டங்களும் சிங்கள மக்களின் மனோநிலைகளும் அவர்களை வழிநடத்துகின்ற சிங்களத் தலைவர்களின் எண்ணங்களுமே இன்னும் இந்த நாட்டை வேறுபட்ட நிலைக்குள் வைத்திருக்கின்றது - என்றார். (ப-22,44)



முல்லைத்தீவில் 7 பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 மாணவர்களுக்கு நேற்று துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. சுவிஸ் நாட்டின் தமிழ்க் கல்விச் சேவையின் நிதி உதவியில் வெளிச்சம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. (ப-222)

**இரசாயனவியல்(Chemistry)**
விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியரினால் தனி அல்லது குழுவாக தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலத்தில் கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 076 38 60 692

**வாடகைக்குத் தேவை**
வங்கியாளரின் சிறிய குடும்பத்தினர்க்கு வீடு வாடகைக்குத் தேவை. சுண்டுக்குளி, கச்சேரி நல்லூர் வீதி, புங்கன்குளம் பகுதிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
077 326 7467

## நல்லூர் பிரதேச சபை
## பகிரங்க அறிவித்தல்

**அனுமதியற்ற கட்டடங்கள், எல்லைச் சுவர் மற்றும் கொங்கிறீற்றாலான நிறுவுதல்கள் இடித்து அகற்றுதல்**

**2020.08.20 ஆம் திகதிய சபையின் 35ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைய**

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் மற்றும் வீடமைப்பு நகரமேம்பாடு சட்டத்திற்கு அமைய பிரதேச சபையினால் வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழன்றி கட்டிடங்கள் மற்றும் எல்லை சுவர்கள், கொங்கிறீற்றாலான, புதிய நிறுவுகைகள், மீள் நிறுவுதல் ,சேர் மானங்கள் எவற்றையும் செய்யும் பட்சத்தில் பிரதேச சபை சட்டப் பிரிவு 52 ஊடாக வழங்கப்பட்ட அதிகாரத்திற்கு அமைய இடித்தழிப்பதற்கு அல்லது அகற்றப்படுமென இத்தால் அறியத்தருகின்றேன்.

த.தியாகமூர்த்தி
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை

## நல்லூர் பிரதேச சபை
## பகிரங்க அறிவித்தல்

**திருநெல்வேலி**
**பொதுச் சந்தை வியாபாரிகளுக்கானது**
**2020.08.20 ஆம் திகதிய சபையின்**
**19ஆம் இலக்க தீர்மானத்திற்கு அமைய**

ஏற்கனவே சபையினால் அறிவிக்கப்பட்டதற்கு அமைய திருநெல்வேலி பொது சந்தையில் வியாபார ஒதுக்கீடு இடங்களை மீளாய்வு செய்து உறுதிப்படுத்தாதோர் உரிய பற்றிச் சீட்டு, ஆவணங்களுடன் தாங்கள் தொடர்ந்தும் வியாபாரம் செய்வதை 2020.08.31ஆம் திகதிக்கு முன்னர் நல்லூர் பிரதேச சபையின் நல்லூர் உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இட ஒதுக்கீடுகளை உறுதிப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றேன். தவறின் தாங்களாக வியாபார நடவடிக்கையை கைவிட்டதாக கருதி அவ்விடத்தை சபை பொறுப்பேற்றுக்கொள்ளும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

த.தியாகமூர்த்தி
தவிசாளர்,
நல்லூர் பிரதேச சபை

**வீடு வாடகை**
யாழ்ப்பாணத்தில் ஆனைப்பந்தி சந்திக்கும், இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் பாடசாலைக்கு அருகில் வீடு வாடகைக்குண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல.
077 211 4506,077 898 1106

**கிட்னி தேவை**
$O^{+}$ ரத்த வகையைச் சேர்ந்த 28 வயதுடைய பெண் ஒருவருக்கு நல்ல தேக ஆரோக்கியமுடைய ஒருவருடைய கிட்னி உடனடியாகத் தேவை.
077 738 5999

**மணமகள் தேவை**
யாழ் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1979ஆம் ஆண்டு பிறந்த கிறிஸ்தவ (R.C) மதத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
077 3127 498

**ஆண், பெண் வேலையாள்கள் தேவை**
கோழிப்பண்ணையிலும் கோழி இறைச் சிக்கடையிலும் வேலை செய்வதற்கு ஆண், பெண் தேவை.
குறிப்பு:- ஆண்கள் இரவு பகல் வேலை. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 076 057 0205
Viber:-004-177-9243687

**பணியாள்கள் தேவை**
(Vacancy)
1. கணிய அளவியலாளர்
(QS) - (NCT/ HND IN QS)
2. தொழில்நுட்ப அலுவலர்
(TO)- (NCT/HND IN CIVIL)
Contact No: 077 724 5399
(திங்கள் - சனி வரை 8.30 a.m - 5.00 p.m மணி வரை மட்டும் தொடர்புகொள்ளவும்.
E- mail : globa119construction@gmail.com

### வீட்டில் கஞ்சா பதுக்கல்:

# கைதான பெண்ணுக்கு 7 நாள் தடுப்புக் காவல்



கிளிநொச்சி, ஓக. 22

50 கிலோ கஞ்சாவை வீட்டில் பதுக்கி வைத்திருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்ட பெண்ணை 7 நாள்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது.

அந்தப் பெண்ணை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதிக்குமாறு பொலிஸாரால் கிளிநொச்சி நீதிமன்றுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொண்டே மன்று அந்த அனுமதியை வழங்கியது.

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டைப் பகுதியில் 50 கிலோ எடையுடைய கஞ்சாப் பொதிகளுடன் குடும்பப் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவரிடமிருந்து கஞ்சாப் பொதிகளும் மீட்கப்பட்டன. சுற்றிவளைப்பு நடவடிக்கையை விமானப்படையினர் மற்றும் புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்புடன் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். கஞ்சாப் பொதி கைதுசெய்யப்பட்ட பெண்ணின் கணவரால் கொண்டுவரப்பட்டது எனவும், சுற்றிவளைப்பின் போது சந்தேகநபர் தப்பியோடியுள்ளார் என்றும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்ததுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் நேற்று கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டார். இதன்போது, அந்தப் பெண்ணை தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதிக்குமாறு பொலிஸார் மன்றில் கோரிக்கை விடுத்தனர். பொலிஸாருடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதிவான் மன்று அவரை 7 நாள்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கியது. எதிர்வரும் 26 ஆம் திகதி வரை பெண் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ஜ-6)




LADIES ONLY EXCLUSIVE GYM
COMING NEAR TO YOU
29th of August 2020
கடந்த 5 வருடங்களாக உடற்பயிற்சி நிலையாங்களில் முன்னணி வகிக்கும் எமது நிறுவனம் பெண்களுக்கான பிரத்தியேக உடற்பயிற்சி நிலையத்தை கீழ் உள்ள முகவரியில் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
புகையிரத நிலைய வீதி, கோண்டாவில் கிழக்கு
தொடர்பு: 077 881 7436

**ST. JOHN'S COLLEGE**
**&**
**CHUNDIKULI GIRLS' COLLEGE**

**JOB OPPORTUNITY**

**JOB TITLE: DEVELOPMENT OFFICER**

St. John's College and Chundikuli Girls' College of Jaffna are seeking a highly motivated self-starter, driven and ambitious individual who works well as a part of their team

**The role involves,**

- reporting directly to the Principals,
- working closely with alumni and liaising with external funding agencies in Sri Lanka and abroad.
- Undertaking tasks which assist management with school projects, contract management,organizing fundraising and grant writing,

**Required competencies & skills:**

He or she

- must possess strong written and verbal communication skills in English and be confident in writing professional project proposals, and fundraising and grant requests,
- needs to be able to clearly articulate the vision of the schools and what they are striving to achieve *and*
- must be computer savvy in Microsoft Office suite and competent in promoting initiatives on multiple social media platforms.

**If you think you have the required skills and attributes to fulfill the role, please send your application to reach St. John's College, on or before 10th September 2020 by post or email.**

The Principal,
St. John's College,
Main Street, Jaffna.

Tel.No : 0 21 222 2432
Fax No : 0 21 222 5795
Email : stjohns@sltnet.lk

# கல்வி அமைச்சுக்கு கீழ் பௌத்த பல்கலைகள்

மகா சங்கத்தினரின் வேண்டுகோளின் அடிப்படையில் இலங்கை பௌத்த, பாலி பல்கலைக் கழகத்தையும் புத்த ஷிராவக பிக்கு பல்கலைக் கழகத்தையும் கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இரண்டு பல்கலைக் கழகங்களையும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின்கீழ் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் குறித்தும் ஜனாதிபதி கவனம் செலுத்தினார். இப்பல்கலைக் கழகங்களின் தனித்துவத்தைப் பாதுகாக்கும் வகையில் கண்காணிப்பு நடவடிக்கைகளை இராஜாங்க அமைச்சரின் கீழ் முறையாக மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.


நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற ஜனாதிப்பதி பௌத்த ஆலோசனைக் குழுவின் ஐந்தாவது கூட்டத் தொடரின்போது ஜனாதிபதியால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி ஆலோசனை சபையின் 4ஆவது கூட்டத்தொடரில் மகாசங்கத்தினர் முன்வைத்த முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் அரசு மேற்கொண்டுள்ள செயற்பாடுகள் மற்றும் அவற்றின் முன்னேற்ற நிலைமைகளை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சு கட்டமைப்பை ஏற்படுத்தும்போது பௌத்த ஆலோசனை சபையின் வழிகாட்டல்களை அடிப்டையாகக் கொண்டதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரச கொள்கை வகுப்பின்போது தொடர்ந்தும் மகாசங்கத்தினரின் வழிகாட்டலை தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். அறநெறிப் பாடசாலைகள், பிக்குகளின் கல்வி, பிரிவெனாக்கள் மற்றும் பௌத்த பல்கலைக் கழகங்களின்முன்னேற்றத்திற்காக இராஜாங்க அமைச்சு ஒன்றை நேரடிக் கண்காணிப்புக்காக நியமித்திருப்பதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ம)

## மரண அறிவித்தல்

பிறப்பு 21 12 1957



இறப்பு 21 08 2020

## பரமசாமி ஸ்ரீதரன் (பவன்)

யாழ்ப்பாணம் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் Holland இல் தொழில்புரிந்து தற்பொழுது கொழும்பு வெள்ளவத்தை 36th Lane No.34, வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி ஸ்ரீதரன் (பவன்) அவர்கள் வெள்ளிக்கிழமை காலமானார். இவர் புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பரமசாமி-கனகம்மாவின் பாசமிகு புதல்வனும், காலஞ்சென்ற சரவணமுத்து சந்திரா அவர்களின் மருமகனும் ஆவார். இவர் நிரோஷ், நிலக்ஸ், பிரித்தா, உதேஷ், ஆகியோரின் ஆருயிர் தந்தையுமாவார். இவர் தயாபரன் (ஜேர்மனி), பத்மநிதி (கனடா), ரவிதரன் (கொழும்பு), வினோகரன் (U.K), மனோகரன் (U.K), தயாநிதி (கொழும்பு), சிவகரன் (Holland), ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வாசுதேவன், மகேஸ்வரன், சூரியதேவன், கல்யாணி, ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார். இவரது ஈமைக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் 23.08.2020 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்: மனைவி (புனிதா), பிள்ளைகள்**
**0112502853 / 0772427915**

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச செயலகத்தில் சாரதியாக கடமையாற்றும்
சௌந்தீஸ் குமாரதாஸ் அவர்களின்
பாசமிகு தாயார்

### திருமதி சௌந்தீஸ் பார்வதி

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

**உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்**
**பிரதேச செயலகம் நல்லூர்.**

## கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர் இராசரத்தினம்
மௌலீஸ்வரன் (முகாமைத்துவ சேவை
உத்தியோகத்தர்) அவர்களின்
பாசமிகு தாயார்

### திருமதி யோகம்மா இராசரத்தினம்

அவர்கள் 20.08.2020 அன்று
இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவினால்,
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.




**சாவகச்சேரி நகரசபை ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**நகரசபை அலுவலகம் சாவகச்சேரி**

# கண்ணீர் அஞ்சலி

**SVM** நிறுவனத்தை 25 வருடமாக முன்னேற்ற பாதைக்கு கொண்டு சென்ற
முன்னாள் முகாமையாளரும் தற்போதைய சரவணாஸ் ஸ்ரோர் உரிமையாளரும் ஆகிய

## தம்பையா தியாகலிங்கம்



ஓய்வையே பார்க்காத கால்களும்
ஆய்ந்து ஆய்ந்து பார்க்கும் கண்களும்
உயர்ந்து ஓங்கிய தோற்றமும்
சிறந்த சிவப்பு மேனியும்
களைப்போ காணா உடலும் உழைப்பே
உயிராய் உயர்ந்த வாழ்வும்!
நிலைத்த ஹரியில் உறைந்த பக்தியும்
நிறைய காதில் நீங்கா பூக்களும் - இனி
காணுவமோ கண்ணெதிரே உங்களை!
நிலைக்காது வாழ்வென்று எம்மை நினைக்க வைத்தீரே!

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 10.03.1953
மறைவு 21.08.2020

**SV.முருகேசு நிறுவனத்தின்**
**உரிமையாளரும், ஊழியர்களும்**
**154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**SVM**
**A9 வீதி கரடி போக்குச்சந்தி, கிளிநொச்சி**

**SVM.Pvt Ltd**
**122, டாம் வீதி, கொழும்பு - 12**

## யாழ்.செயலகம்...

ரெனத் தெரியவருகின்றது.
யாழ்ப்பாண மாவட்டத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும், வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களுக்கு, மாவட்டச் செயலகத்தில் ஓர் இடமும், அனுபவம் வாய்ந்த 5 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் 5 அலுவலர்களை நியமிக்குமாறும் ஜனாதிபதியின் செயலர் சுற்றறிக்கை அனுப்பி வைத்துள்ளார்.
யாழ்ப்பாண மாவட்டத்துக்கு இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இரண்டு விசாலமான அறைகளையும், மாநாடு நடைபெறும் ஒரு மண்டபத்தையும் ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருக்குரிய அலுவலகமாக பயன்படுத்த வழங்குமாறு கோரியுள்ளார்.
அந்த கட்டடங்களில் ஏற்கனவே மாவட்டச் செயலக திணைக்களங்கள் இயங்கி வரும் நிலையில் அவற்றை அகற்றி அதனைத் தனக்கு வழங்குமாறு கோரியுள்ளார்.
முதல்கட்டமாக ஓர் அறைக்கு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிறமான 'நீல' வர்ணமும், 'நீல' நிறத்திலான யன்னல் மற்றும் கதவுத் திரைச் சீலையும் போடப்பட்டுள்ளது. அந்த அறையைத் திருத்தும் பணியும் மாவட்டச் செயலகத்தின் நிதியில் மேற்கொள்ளப்படுகின்றது.
இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரின் தந்தையும், அவரது பிரத்தியேக செயலருமான இராமநாதனும், ஓர் இடத்தை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார் என்றும் தெரியவருகின்றது.
மற்றொரு இணைத் தலைவரான வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ், மாவட்டச் செயலகத்திடம் இதுவரையில் எந்தக் கோரிக்கையும் முன்வைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஓ.5)

## டக்ளஸுக்கு...

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்ப்பாண மாவட்டச் செயலருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் சில விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.
அதில் பிரதானமாக, அமைச்சர்கள் அல்லது அமைச்சுக்கள் ஊடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தனது அனுசரணையுடன் மாத்திரமே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். தனது அனுமதியில்லாமல் மாவட்டச் செயலர் அல்லது பிரதேச செயலருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா மாத்திரமே உள்ள நிலையில், அவரைக் கட்டுப்படுத்தும் வகையிலேயே இந்த நடவடிக்கைகளை யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் 'இணைத்' தலைவராக நியமிக்கப்பட்டுள்ள அங்கஜன் மேற்கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.
இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தின் மற்றொரு இணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண ஆளுநர் சாள்ஸ் இவ்வாறானதொரு எந்த அறிவித்தலையும் பிறப்பிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஓ.5)

## பொலிஸின்...

மருத்துவமனையில் நேற்று மதியம் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டு, விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் நேற்றுக் காலை பேருந்தில் வந்திறங்கிய ஒருவரிடம், பயணிப்பதற்கு முச்சக்கர வண்டி தேவையா என்று சாரதி கேட்டுள்ளார். அவர் சிறிது தூரம் சென்று திரும்பி வந்து அந்த முச்சக்கர வண்டிச் சாரதியுடன் தர்க்கப்பட்டுள்ளார். முரண்பாடு முற்றி கைகலப்பு நிலைக்குச் சென்றுள்ளது. இதன் போது அருகிலிருந்த இன்னொரு முச்சக்கர வண்டிச் சாரதி இருவரையும் சமரசப்படுத்த முயன்றுள்ளார். அந்த முயற்சி பயனளிக்காத நிலையில், பொலிஸ் நிலையத்துக்கு முச்சக்கரவண்டிச் சாரதிகள் இருவரும் சென்றுள்ளனர்.
அங்கு நின்ற நடமாடும் பொலிஸாரிடம் விடயத்தை தெரியப்படுத்தியுள்ளனர். அவர்களை நகரப் பகுதிக்கு அழைத்து வந்து, தம்முடன் முரண்பட்டவரை அடையாளம் காட்டியுள்ளனர். நடமாடும் பொலிஸார் அவரிடம் விசாரணை மேற்கொண்ட போது, தான் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர் என்று அந்த நபர் அடையாளப்படுத்தியுள்ளார்.
இதன் பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொலிஸாரிடம், சமரசம் செய்ய வந்த முச்சக்கர வண்டிச் சாரதி தன்னைத் தாக்கியதாக, சாரதிகளுடன் முரண்பட்ட சிவில் உடையில் வந்த பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.
இதனையடுத்து அந்தச் சாரதியை தமது வாகனத்தில் ஏற்றிய பொலிஸார், அவரை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் கொண்டு செல்லும் வரையில் தாக்குதல் நடத்தியுள்ளனர்.
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின், குற்றத்தடுப்பு பிரிவில் அதிகாரிகள் எவரும் கடமையில் இல்லாத நிலையில், முச்சக்கர வண்டிச் சாரதியை அங்கு கொண்டு சென்று, சிவில் உடையில் வந்து முரண்பட்ட பொலிஸ் அதிகாரி மூர்க்கமாகத் தாக்கினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனை முச்சக்கர வண்டிச் சாரதி தனது வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளார்.
முச்சக்கர வண்டிச் சாரதியை கடுமையாகத் தாக்கிய பின்னர் அவரை, சிறைக் கூண்டுக்குள் அடைத்துள்ளனர். கடும் காயங்களுடன் அவர் அவதிப்பட்ட நிலையில் நேற்று மதியத்துக்குப் பின்னரே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஓ.5)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் இரத்தினேஸ்வரி



தும்பளையைப் பிறப்பிடமாகவும் ஆத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினேஸ்வரி நேற்று (21.08.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆனந்த நடராஜா மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.திருமதி சபாபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தங்கேஸ்வரி, காலஞ்சென்ற சிதம்பரநடராஜா மற்றும் ஞானேஸ்வரி, விஜயலட்மி, சிவகுமாரன், காலஞ்சென்ற மகாலட்மி மற்றும் சங்கரநாதன், கலாநிதி, நந்தகுமார், கனகசபை, ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுஜந்தினி, சுஜந்தன், ஜஜந்தன், அஜந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரதாஸ், சிவாஜினி, சுதர்சினி, நாமலி ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருசாந், நிஷாந், சுஜீவினி, சுஜீவன், சஜீவன், விதீஷன், தஸ்வின், அஜானா, வினிஷா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2020) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக் கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**குடும்பத்தினர்.**

பாபா பனை
ஆத்தியடி, பருத்தித்துறை.

# மரண அறிவித்தல்



## திருமதி கணபதிப்பிள்ளை சரோஜா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை சரோஜா நேற்று (21.08.2020) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் கணபதிப்பிள்ளையின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம் பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் பத்தினிப்பிள்ளையின் அன்பு மருமகளும், தவசீலன் (ஜேர்மனி), உதயசீலன் (ஜேர்மனி), பத்மசீலன் (ஜேர்மனி), மோகனா (ஜேர்மனி), திருமதி சுதேந்திரன் சுமதி, ஜெயசீலன் (ஜெயா-பிரதேச சபை, சுழிபுரம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், திருமதி த.கமலம் (ஜேர்மனி), திருமதி உ. சசிகலா (ஜேர்மனி), திருமதி ப.சுதர்சினி (ஜேர்மனி), பா.சுதேந்திரன் (S.P.N மோட்டார்ஸ்), திருமதி ஜெ.சியலதா ஆகியோரின் அன்பு மாமியும், தக்ஷிகா, கௌசிக், விருஷா, விருஷாந், விதுசன், அபிசன், மயூரிக்கா, சுகானா, ஜதீபன், ஹரிஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற சாந்தாமணி, காலஞ்சென்ற மனோலயம், திருமதி த. வசந்தா (டென்மார்க்), திருமதி சி. சாரகேசி, திரு.க. பாரி (ஜேர்மனி), திருமதி வி. பௌளி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2020) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவடி வைரவர் வீதி,
சிவன்கோவிலடி, சித்தன்கேணி.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## விக்கியின்....

வர்த்தன தெரிவித்தார்.

விக்னேஸ்வரனின் உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்காரவால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளித்தபோதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பில் சபையில் கேள்வி எழுப்பிய மனுஷ நாணயக்கார தெரிவித்ததாவது,

இந்த நாட்டில் தனி நாடொன்றை நிறுவுவதற்கோ, அவ்வாறான முயற்சிக்கு ஒத்துழைப்பு மற்றும் நிதி பங்களிப்பு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம் என்று இந்த சபையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்தனர்.

ஆனால், போர் முடிவடைந்து, பூர்வீக கோட்பாடு உள்ளிட்ட விடயங்கள் எல்லாவற்றையும் ஒருபுறம் ஒதுக்கிவைத்துவிட்டு அனைவரையும் இலங்கையராக ஏற்கும் நிலைக்கு முழு நாடும் வந்துள்ள நிலையில் இந்த நாடாளுமன்றத்தில் விக்னேஸ்வரன் சர்ச்சைக்குரிய வகையில் உரையாற்றியுள்ளார்.

இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ் என்று இந்த நாடாளுமன்றத்தில் அவர் கருத்து வெளியிட்டுள்ளார். அவ்வாறான கருத்து ஹன்சாட்டில் இடம்பெறுவது தவறு. சிலருக்கு தனிப்பட்ட ரீதியில் சில நிலைப்பாடுகள் இருக்கலாம். இந்நாட்டின் பூர்வீக குடிமக்கள் யார், மொழி எது என்று தனிப்பட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால், அவ்வாறான கருத்து இலங்கை நாடாளுமன்றத்தின் ஹன்சாட்டில் இடம்பெறுவது தவறு. எனவே, ஹன்சாட்டில் இருந்து இக்கருத்தை நீக்குமாறு கோருகின்றேன், என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், இது தொடர்பில் தேடி ஆராயப்படும் என்று குறிப்பிட்டார். (எ,ஒ,44)

## மோசமான...

எனவே, நாட்டின் இறையாண்மையை முதன்மைப்படுத்தி மிக மோசமான போர்க் குற்றங்களை மறைக்கவோ அல்லது சர்வதேச பொறுப்புக்களைக் கைவிடவே முடியாது. இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் கொள்கைப் பிரகடன உரை மீதான முழு நாள் விவாதம் நேற்று சபையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் 'மக்கள் தமக்கு வழங்கிய மக்கள் ஆணையை நாம் நன்றாக விளங்கிக் கொண்டுள்ளோம். எக்காரணம் கொண்டும் அதனை நாம் மீற மாட்டோம்' என்று தெரிவித்திருந்தார். இந்தக் கொள்கை தனது கட்சிக்கு மாத்திரம் பொருந்துமாக இருந்தாலும் வடக்கு, கிழக்குக்கு அது பொருந்தாது என்பதை அவர் கூறியுள்ளாரா எனக் கேள்வி எழுகின்றது. வடக்கு, கிழக்கு மக்கள் ஏகமனதான தீர்மானம் ஒன்றை வழங்கியுள்ளனர். தமிழ்ப் பிரதிநிதித்துவமும் உள்வாங்கப்பட வேண்டும் என்பதே அதுவாகும். தமிழர் உரிமை என்பது அவர்களது அடையாளம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இலங்கை என்பது தேசிய நாடு. இங்கு இரு தேசிய இனங்கள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இவ்விரு இனங்களின் உரிமைகள் சமமானவை. அரசமைப்பு ரீதியில் இந்த உரிமைகள் உறுதிப்படுத்தப்படுகின்றன.

இந்த ஆட்சியில் உள்ள தமிழ்த் தலைமைகள் தமது தேர்தல் கொள்கையில் 'தமிழர் தேசம் தலைநிமிர' என பிரசாரம் செய்துள்ளனர். அப்படியென்றால் தமிழர் தேசம் பலமடைய வேண்டும் என்ற ஏகமனதான நிலைப்பாடு வடக்கு, கிழக்கு மக்களால் விரும்பப்பட்டுள்ளது. அந்த ஏகமனதான தீர்மானம் நிராகரிக்கப்பட முடியாது. தமிழ் மக்களுக்கு இந்த உரிமைகளை தடைகளின்றி வழங்கப்பட வேண்டும்.

அதேபோல் ஜனாதிபதி இறையாண்மை குறித்தும் பேசியுள்ளார். இந்த நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் என அவர் கூறியுள்ளார். அது சரியானதே, ஆனால், அந்த இறையாண்மை நிச்சயமாக சமரசத்துக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

இந்த நாட்டில் போர் ஒன்று இடம்பெற்றது. இந்தப் போரில் போர்குற்றங்கள் இடம்பெற்றன என்று ஒட்டுமொத்த உலகமுமே கூறுகின்றது. சர்வதேச மட்டத்தில் உள்ளடக்கிய பிரதான விடயங்களை அரசு பாதுகாக்கத் தவறிவிட்டது. போர்க்குற்றதில் இன்றைய பிரதான கட்சியே குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. போரில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பதற்கு ஆதாரங்கள் உள்ளன. எனவே, இறையாண்மையை முதன்மைப்படுத்தி இந்த விடயங்களை மறைக்கவோ அல்லது சர்வதேச பொறுப்புக்களை கைவிடவோ முடியாது. மிக மோசமான போர்க்குற்றங்களை எக்காரணம் கொண்டும் மறைக்க முடியாது.

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்தில் பல நல்ல விடயங்கள் உள்ளன. வேறு நாட்டு மீனவர்கள் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைவது தடுக்கப்படுவது, காணி இல்லாதவர்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறும் விடயங்கள் அனைத்துமே முக்கியமானதான விடயமாகும். அதேபோல் வடக்கு, கிழக்கு பூமி கடந்த முப்பது ஆண்டுகள் போருக்கு முகங்கொடுத்துள்ளது என்பதை ஜனாதிபதி மறந்துவிடக்கூடாது. இந்த முப்பது ஆண்டுகால போரினால் வடக்கு, கிழக்கு மக்கள் முப்பது ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுள்ளனர். அவர்களைச் சமமாக நடத்த வேண்டும். அவர்களை நிராகரிக்க முடியாது. அவர்களின் பொருளாதாரத்தை முன்னெடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார். (ஒ,5,22,44)

## 2 ஆண்டுகளின்..

கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கு இடையிலான நேற்றைய கலந்துரையாடலிலேயே மேற்படி இணக்கம் காணப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்த ஒரேயொரு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்ட முறைமை தொடர்பில், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராசா கடும் அதிருப்தியை வெளியிட்டார். பங்காளிக் கட்சித் தலைவர்களும் அதிருப்தி வெளியிட்டனர். கலையரசனுக்கு வழங்கப்பட்ட பதவியை ஓராண்டின் பின்னர் மாவை.சோ.சேனாதிராசாவுக்கு வழங்கலாம் என்று பங்காளிக் கட்சித் தலைவர்கள் கருத்து வெளியிட்டனர். எனினும் மாவை.சோ.சேனாதிராசா அதனை மறுத்து விட்டார்.

இரண்டு ஆண்டுகளின் பின்னர் கலையரசனிடமிருந்து பதவியை மீளப் பெறுவது என்றும், அதன் பின்னர் அதனை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் ஆராயலாம் என்றும் கொள்கையளவில் நேற்று இணக்கம் காணப்பட்டது.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தொடர்பில் மாவை. சோ.சேனாதிராசா நீண்ட குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

சுமந்திரன் ஏற்பாடு செய்த நிகழ்வு ஒன்றில் ஊடகவியலாளர் ஒருவரை அழைத்து தன்னை அவமதிக்கும் வகையில் உரையாற்றச் செய்தமை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைச் சுட்டிக்காட்டிய மாவை.சோ.சேனாதிராசா, நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் சுமந்திரன் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் கட்சித் தலைமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்தமையும் குறிப்பிட்டார். இவ்வாறு தனக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதி தொடர்பில் சேனாதிராசா குற்றம்சாட்டிய போது, கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் எந்தவித மறுதலிப்புமின்றி கேட்டுக் கொண்டிருந்தார் என்பது குறிப் பிடத்தக்கது. (ஒ,5)

## பேச்சாளராக...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை இடம்பெற்றது. சந்திப்பு முடிவடைந்த பின்னர், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில், கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களான மாவை.சோ. சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன் ஆகியோர் சந்திப்பு நடத்தினர். இந்தச் சந்திப்பில் ரெலோவின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரமும் பங்கேற்றார். சுமார் ஒன்றரை மணி நேரம் இந்தச் சந்திப்பு நீடித்தது.

கூட்டமைப்பின் அண்மைக்கால சறுக்கல்கள் மற்றும் மாற்று நடவடிக்கைகள் குறித்து ஆராயப்பட்டது. இதன்போது, கூட்டமைப்பின் பேச்சாளர் பதவியிலிருந்து சுமந்திரன் நீக்கப்பட வேண்டிய தேவை குறித்து விவாதிக்கப்பட்டது. 'பேச்சாளரை உடனே மாற்றலாம்' என்று கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பின் கொறடாவாக சி.சிறிதரன் செயற்பட்டு வருகிறார். கொறடா என்ற ரீதியில் கூட்டமைப்பின் சார்பில் உரையாற்றுபவர்கள் விவரத்தை சிறீதரனே தீர்மானித்து, பெயரை வழங்கி விடுவார். அடிக்கடி தனது பெயரையே அவர் வழங்கி விடுவார். கூட்டமைப்புக்கு நேற்று வழங்கப்பட்ட 18 நிமிடத்தையும், தனது உரையென முதலில் பதிவு செய்திருந்தார். நீண்ட இழுபறியின் பின்னரே 9 நிமிடத்தை கோவிந்தன் கருணாகரத்துக்கு வழங்கியிருந்தார். கொறடாவாக செயற்படும் சிறீதரன் நேர்மையாக செயற்படுவதில்லையென்ற அதிருப்தி கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து வந்த நிலையில், இது குறித்தும் ஆராயப்பட்டது.

அதனையடுத்து கொறடாவிலும் மாற்றம் செய்ய சம்பந்தன் இணக்கம் தெரிவித்துள்ளார். அதற்கு புளொட் தலைவர் சித்தார்த்தனை நியமிக்க கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது.

இரண்டு நியமனங்களையும், கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தை கூட்டி அறிவிக்கலாம் என்று இரா.சம்பந்தன் இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கும் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதால் கூட்டமைப்புக்குள் சுமுகமாக இணக்கமான நிலை ஏற்பட்டுள்ளது. (ஒ,5,22)

## ராஜபக்சக்கள்...

வாங்கப்பட்டுள்ளார்.

கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, நாடாளுமன்றத் தேர்தலில் பெரு வெற்றியீட்டியது. அதன் பின்னர் அமைக்கப்பட்ட அமைச்சரவையில் ஒரு தமிழரும், ஒரு முஸ்லிமும் அமைச்சர்களாக உள்வாங்கப்பட்டிருந்தனர். அமைச்சுக்களுக்கான செயலர்கள் நியமிக்கப்பட்டபோது எந்தவொரு தமிழரோ, முஸ்லிமோ உள்வாங்கப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில் 36 இராஜாங்க அமைச்சுக்களுக்கான செயலர்கள் நியமனம் நாளை மறுதினம் திங்கட் கிழமை வழங்கப்படவுள்ளது. அதில், கிளிநொச்சி மாவட்ட முன்னாள் மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம் உள்வாங்கப்பட்டுள்ளார். அவர் ஒருவரே அதில் இடம் பெற்றுள்ள தமிழராவார். (ஒ,5)

## தீர்வு...

கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள், இலங்கைக்கான இந்தியத் தூதுவரை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று சந்தித்துப் பேசினர். மாலை 5.30 மணி முதல் 7 மணி வரை நடைபெற்ற இந்தச் சந்திப்பில் தமிழ் மக்களின் கரிசனைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

விசேடமாக நடந்து முடிந்த பொதுத் தேர்தலின் பின்னரான தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.

இதன்போது மீண்டும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களுக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்த இந்தியத் தூதுவர், இலங்கையில் தமிழ் மக்களின் தேசிய பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் பணியில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்ந்தும் இருக்கும் என்று உறுதியளித்தார்.

இந்தப் பொறுப்பிலிருந்து இந்தியா ஒரு போதும் விலகாது எனவும், இலங்கை அரசும் இந்தக் கடமையிலிருந்து நழுவ முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் 19ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்படுவது தொடர்பிலும், புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலும் இந்தியத் தூதுவர் கவனம் செலுத்தினார். புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் போது, 13ஆவது திருத்தச் சட்டத்தை இல்லதொழிக்கும் வகையிலான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுமா என்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ,5,22)

## இணக்க சபை அமர்வுகள்

பளை, ஓக. 22

வலிகாமம் மேற்கு (சங்கானை) இணக்க சபை அமர்வு மீண்டும் இன்று சனிக்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணம் வட்டு மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக பொதுமக்களை சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வருகை தருமாறு சபைத் தவிசாளர் தி. உதயசூரியன் அறிவித்துள்ளார்.

இம்மாதத்துக்கான இணக்க சபை அமர்வுகள் இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை மற்றும் 29 ஆம், 30 ஆம் திகதிகளிலும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

✦ ✦ ✦

யாழ்ப்பாண இணக்க சபை அமர்வு இன்று சனிக்கிழமை தொடக்கம் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக பொதுமக்கள் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வருகை தருமாறு சபைத் தவிசாளர் ம.மேர்சி கஜந்தினி அறிவித்துள்ளார்.

இம் மாதத்துக்கான அமர்வுகள் இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்றும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

✦ ✦ ✦

கோப்பாய், ஓக. 22

கோப்பாய் பிரதேச செயலக பிரிவு இணக்க சபை அமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் புத்தூர் சோமஸ்கந்தா ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும் என்று தவிசாளர் இ. கிருஷ்ணப்பிள்ளை அறிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட சுகாதார நடைமுறைகளைப் பிற்பற்றி பொதுமக்கள் இணக்க சபை அமர்வுகளில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-11)

✦ ✦ ✦

பளை, ஓக. 22

பச்சிலைப்பள்ளி பிரதேச இணக்க சபை அமர்வு மீண்டும் நாளை ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக நிறுத்தப்பட்டிருந்த பிணக்குகளுடன் தொடர்புபட்ட இருசாராரும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக வருகை தருமாறு சபைத் தவிசாளர் வ.ஜீவரத்தினம் அறிவித்துள்ளார். (ஐ-9)

## கசிப்பு வைத்திருந்த மூவருக்கு தண்டம்

சாவகச்சேரி, ஓக. 22

கசிப்பு வைத்திருந்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றால் 70 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் தனித்தனியாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அதையடுத்து இருவருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதமும், மற்றவருக்கு 20 ஆயிரம் ரூபாவும், தண்டம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## இன்று கொடியேற்றம்

வவுனியா, ஓக.22

வவுனியா பூந்தோட்டம் அருள்மிகு ஸ்ரீ லக்ஸ்மி சமேத நரசிங்கர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறவுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 31 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்ததிருவிழாவும் நடைபெறும் என்று ஆலய பரிபாலசபையினர் அறிவித்துள்ளனர். (ஐ-110)

# முப்படைத் தலைமையகங்களையும் ஒரே இடத்தில் அமைத்தமை தவறு!

## ஏவுகணைக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்கிறார் பொன்சேகா

**கொழும்பு, ஓக. 22**

**இலங்கை இராணுவத் தலைமையகத்தின் பாதுகாப்பை அரசாங்கம் மேலும் பலப்படுத்த வேண்டும். ஏவுகணைக் கட்டமைப்பையும் உருவாக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் கொள்கை விளக்கஉரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இலங்கையில் முப்படைகளின் தலைமையகமும் ஒரே இடத்தில் அமைக்கப்பட்டுள்ளன. உலகில் வேறு நாடுகளில் இவ்வாறு அமைக்கப்படுவதில்லை. அமெரிக்க பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன்மீது தாக்குதல் நடத்தப்பட்ட பிறகு உலக நாடுகள் இந்த நடைமுறையை மாற்றின. ஒரே இடத்தில் இருந்தால் இலக்குவைப்பதற்கு அது இலகுவாக அமைந்துவிடும். எனவே இலங்கையில் பாதுகாப்புத் தலைமையகம் அமைந்துள்ள பகுதியை அரசாங்கம் பலப்படுத்த வேண்டும். ஏவுகணைக் கட்டமைப்பு, விமானத் தாக்குதல் ஆயுதங்கள் போன்றன கொண்டுவரப்படவேண்டும். எனவே, இது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதியின் கொள்கை விளக்கஉரையில் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. 7 வரிகள் மாத்திரமே உள்ளன. எனவே. நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்தாமல் அபிவிருத்தி இலக்கை அடையமுடியாது. என்றார். (ஐ-44)

## ஹெரோய்னுடன் மூன்று பேர் கைது

தங்க ஆபரண கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் உள்ளிட்ட மூவர் ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்தது.

கொடவில பகுதியில், 2 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோய்னுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர்கடந்த புதன்கிழமை வீடொன்றில் தங்கநகை கொள்ளை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர்.

அவரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட தங்க ஆபரணங்கள் மற்றும் 2 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் என்பன மீட்கப்பட்டுள் என. கம்புறுகமுவ பகுதியைச் சேர்ந்த 27 வயதானவரே கைது செய்யப்பட்டுள்ளார். (து)

**விற்பனைக்கு**

TOYOTA TOWNACE VAN

51 - தொடரிலக்க 1983 வருட உற்பத்தி நல்ல நிலையில் உள்ளது

077 451 8980

**பணியாளர்கள் தேவை**

பளையில் /கிளிநொச்சியில் அமைந்துள்ள

**சிறிய பண்ணைக்கு**

தங்கியிருந்து வேலை செய்ய மரக்கறி பயிர்ச்செய்கையில் அனுபவம் உள்ள 35-60 வயதிற்குட்பட்ட ஆண்கள் தேவை.


தங்குமிடம், உணவு தரப்படும்.

சம்பளம் 30000-50000 வரை திறமைக்கேற்ப பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு

071 018 1140

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 10. 03. 1953 | 21. 08. 2020 |

### தம்பையா தியாகலிங்கம் (காரைநகர்)

(சரவணாஸ் மல்ரி சென்ரர்)

திக்கரை களபூமி காரைநகரைப் பிறப்பிடமாகவும் 187/ 29. ஜீனியன் லேன். ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தியாகலிங்கம் நேற்று (21.08.2020) வெள்ளிக் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா (ஓய்வுபெற்ற - ஆசிரியர்) நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும். சுப்பிரமணியம் - சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும். விஜயலட்சுமியின் அன்புக் கணவரும். கஸ்தூரி (கனடா). ஸ்ரீரங்கா (உதவி பொலிஸ் பரிசோதகர் - களுத்துறை). வைகுந்தன் (ஆசிரியர்). வைதேகி (கணிய அளவியலாளர்). நாராயணன் (சரவணாஸ் மல்ரி சென்ரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும். கயூகரனின் (மென் பொறியியளாளர்) அன்பு மாமனாரும். இந்திராணி. காலஞ்சென்ற யோகராணி மற்றும் அம்பிகைபாகன் (ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் - கனடா). நடேசலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும். காலஞ்சென்ற ஆறுமுகம் (ஆசிரியர்) மற்றும் பரமானந்தம். இராசலோகினி. பரமேஸ்வரி. காலஞ்சென்ற சிவசோதி (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி முகாமையாளர்) மற்றும் விமலாதேவி. சறோஜினிதேவி. ஜெகசோதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்துமானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

**187/29, ஜீனியன் லேன்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
குடும்பத்தினர்
077 592 1176, 077 628 0685**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.08.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 24

Registered as a Newspaper

# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2051 ஆவணி 7 சனிக்கிழமை (22.08.2020) சிகரம் : 10

தமிழென்பார் தாய்த்தேசமென்பார் எதுவரினும்
அமிழாதெம் கொள்கையென்பார் மேடையிலே = குமிழான
கோட் சூட்டும் போட்டு இங்கித இங்கிலிஷிலே விளாசி
நாட்டாமை காட்டுவார் நாடாளுமன்றிலே பார்!

–ஒட்டுக்குழு சுவாமிகள்



# கூட்டமைப்பு: அப்போதும் இப்போதும்

○ சோமீதரன்

**2004** ஆம் ஆண்டுப் பொது தேர்தல் முடிவுகள் வெளியாகியிருந்தன. கொழும்பின் மேட்டுக்குடிகள் அதிகம் வசிக்கும் பகுதியில் உள்ள குயீன் வீதியில் அமைந்திருக்கும் குமார் பொன்னம்பலத்தின் இல்லம். தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவராக வருகிறார்கள். நாங்கள் பத்திரிகையாளர்கள், உயர்ந்த மதில்களும் பெரிய இரும்புக் கதவுகளும் கொண்ட அந்த வீட்டுக்கு வெளியே நிற்கிறோம். அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியை தோற்றுவித்த ஜீ.ஜீ.பொன்னம்பலம் காலத்தில் இருந்து அரசியல் பரபரப்பு மிகுந்த அந்த வீட்டில் குமார் பொன்னம்பலத்தின் மகன் கஜேந்திரகுமார் அப்போது எம்.பியாகியிருந்தார். தமிழ்தேசியக் கூட்டமைப்பின் அவசரக் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. அப்போது சமாதானப் பேச்சுவார்த்தைக்காலம். ஆனாலும், அசாதாரண நிலையில் அந்த கூட்டம் ஏற்பாடாகியிருந்தது. அது புலிகளின் கிழக்குத் தளபதி கருணா அம்மான் புலிகளிடமிருந்து பிரிந்திருந்த நேரம் என்று சொன்னால், அந்த நேரச் சூழலைப் புரிந்து கொள்வதில் சிரமம் இருக்காது.




**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தோற்றமும் வெற்றியும்**

இந்தத் தேர்தலில்தான் இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ் அரசியல் கட்சியொன்று அதிகூடிய இடங்களில் வெற்றிபெற்றிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 ஆசனங்களைப் பெற்றிருந்தது. அதற்கு முன்னர், 1977ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி 18 ஆசனங்களைப் பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழக் கோரிக்கையை முன்னிறுத்திய அந்த தேர்தலில் கிடைத்த வெற்றிக்குப் பிறகு, 2004 இல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த வெற்றிபெருவெற்றியாக இருந்தது. கிட்டத்தட்ட இந்த தேர்தலின் மூலம் புலிகளுக்கான மக்கள் ஆதரவைத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியின் ஊடாக உலகுக்குப் பறைசாற்றும் எண்ணம் மறைமுகமாக இருந்தது. வேட்பாளர் தெரிவுகளை தன்னிச்சையாக கூட்டமைப்பு மேற்கொள்ளவில்லை. புலிகளின் ஏகப் பிரதிநிதித்துவ நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள மறுத்த ஆனந்த சங்கரி வெளியேற்றப்பட்டு, சம்பந்தன் தலைமைப் பொறுப்புக்குக் கொண்டுவரப்படுகிறார். 1977ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம் தேர்தலில் வெற்றிபெற்ற சம்பந்தன், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவான பின்னரே திருகோணமலையில் மீண்டும் வெற்றி பெற்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தையும் சங்கரி தூக்கிக் கொண்டு போய்விட்டதால், அவசர அவசரமாக தமிழரசுக் கட்சியைத் தேடி எடுத்து அதன் வீட்டுச் சின்னத்தில் கூட்டமைப்பு தேர்தலைச் சந்தித்தது. மாவை சேனாதிராஜா தமிழரசுக் கட்சியின் முக்கிய புள்ளியாக முன்னிறுத்தப்பட்டார். 70களில் இளைஞராக, தமிழரின் உரிமைப் போராட்டத்தில் இணைந்த மாவை, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் புலிகளால் கொல்லப்பட்ட பின்னர் வெற்றிடமான தேசியப்பட்டியல் எம்பிப் பதவி மூலம் நாடாளுமன்றத்துக்குள் பிரவேசித்தவர். 2004ஆம் ஆண்டுத் தேர்தலில், மட்டக்களப்பு மாவட்டத்தில் நீண்ட இடைவெளிக்குப் பிறகு மொத்தமுள்ள ஐந்து ஆசனங்களில் நான்கைத் தமிழ்தேசிய கூட்டமைப்பு வென்றிருந்தது.

இப்போது அந்த வீட்டுக்குள் இருந்த எம்.பிக்களும் வெளியே இருந்த பத்திரிகையாளர்களும் மட்டக்களப்பு எம்.பிக்களுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தார்கள். நானும் பத்திரிகையாளர்களோடு பத்திரிகையாளராக அப்போது அங்கே உட்காந்திருந்தேன். மட்டக்களப்பு எம்.பிக்கள் கருணா பேச்சைக் கேட்கப் போகிறார்களா? புலிகளின் பேச்சைக் கேட்கப் போகிறார்களா? என்பதுதான் அன்றைய நாளின் பரபரப்பான கேள்வியாக இருந்தது. கடைசியில் கிழக்கு எம்.பிக்களும் புலிகளையே ஆதரித்தார்கள். உண்மையில் மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் கிடைத்த ஆசனங்கள்தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட ஆரம்பகால நோக்கத்துக்குக் கிடைத்த வெற்றி. ஆனால் அது ஒரு இக்கட்டான காலகட்டத்தில் நடந்துவிட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவான கதையைப் பலரும் எழுதிவிட்டார்கள். விருப்பு வெறுப்புகள், உள்ளும் புறமுமாக ஒவ்வொருவருக்கும் தெரிந்த தகவல்களை வைத்து இந்தக் கதைகள் எழுதப்பட்டன. 90 களின் இறுதியில் சந்திரிக்கா அரசு மீதான நம்பிக்கையீனங்கள் பரவலாக இருந்தது. இது தமிழ்க் கட்சிகள் இணைய வேண்டிய தேவையை, அரசுடன் நேரடியாக இணைந்திருக்காத தமிழ் அமைப்புகளுக்கு உருவாக்கியது. 90களின் ஆரம்பத்தில் புலிகளை விமர்சித்து எழுதிய சிவராம் போன்றவர்கள் பின்னாளில் புலிகளை ஆதரிக்கும் நிலைக்கு வந்ததை இந்த பின்னணியில் இருந்துதான் நாம் பார்க்க வேண்டும். இப்படித்தான் 80 களில் புலிகளோடு முரண்பட்டு நின்றவர்கள், படிப்படியாக புலிகளோடு இணக்கமாக செயற்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். புலிகளும் தங்களுடைய பழைய முரண்பாடுகள் மற்றும் கடுமையான முகத்தை மாற்றி இணக்கமான தொடர்புகளை ஏற்படுத்துவற்கான கதவுகளைத் திறந்திருந்தார்கள். இந்தக் காலப்பகுதியில் சரிநிகர் பத்திரிகையின் ஒரு தலையங்கம் முக்கியமானது " புலிகளின் வெற்றி தமிழ் மக்களின் வெற்றியாக இல்லாமல் இருக்கலாம் ஆனால் புலிகளின் தோல்வி தமிழ் மக்களின் தோல்வி" என்பதே அது.

(20ஆம் பக்கம் பார்க்க)



17

டோனி! ஓய்வில்லா ஒரு தலைவன்




22

தடயத்தை தேடி...



18

ஆப்பும், அர்த்தமும்



போல் டிராக்

அறிவியல் தொடர் 2

# கடவுளும், சாத்தானும்

○ ராஜ்சிவா

போல் டிராக்' (Paul Dirac) என்னும் கணிதமேதையால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு விந்தை முடிவைக் குறித்துச் சொல்வதற்காகவே இந்தத் தொடருக்கு 'கடவுளும், சாத்தானும்' என்று பெயரிட்டு ஆரம்பித்தேன். ஆனால், அதைச் சொல்ல ஆரம்பித்தபோதுதான் சற்று விளக்கிச் சொன்னால்தான் புரியுமென்ற நிலையில், கடந்த பகுதியை எங்கேயோ கொண்டுசென்றுவிட்டேன். அது என்னைக் கொண்டுபோய்க் கிணற்றில் தள்ளிவிட்டிருக்கிறது. இப்போது, அறிவியல் என்னும் சுழலில் என்னையும், உங்களையும் மாட்டியும் விட்டிருக்கிறது. கடந்த பகுதியில் நான் எழுதியவற்றுக்கு நீங்கள் கொடுத்த பெரிய ஆதரவையும், ஆர்வத்தையும் பார்த்தால், இதை முழுமையாகப் புரியும்படி சொன்னதன் பின்னரே நிறுத்த முடியும்போலத் தோன்றுகிறது. அதனால், கொஞ்சம் அறிவியலைத் தொட்டுச் செல்கிறேன், வாருங்கள்.



குவாண்டம் இயற்பியல் ஆரம்பித்த காலமது. பாரம்பரிய இயற்பியலிலிருந்து, கோட்பாட்டு இயற்பியல் (Theoretical Physics) நோக்கி அறிவியல் வலதுபுறம் சிக்னல் போட்டு இடதுபுறம் திரும்பிக்கொண்ட காலம். பாரம்பரிய இயற்பியலுக்கும், கோட்பாட்டு இயற்பியலுக்கும் இடையில் அகப்பட்டுக்கொண்டவர் ஐன்ஸ்டைன் அவர்களே! குவாண்டம் இயங்கியலின் கோட்பாடுகளில் சிலவற்றை ஏற்றுக்கொள்ளவும் முடியாமல், தூக்கியெறியவும் முடியாமல் அவர் தவித்தார். ஆனால், இந்தக் குவாண்டம் இயங்கியலுக்கான விதையைப் போட்டவர்களில் முக்கியமானவர் அவர். அன்றிருந்த இளம் இயற்பியல் வல்லுநர்கள் அனைவருமே ஐன்ஸ்டைனால் வெளியிடப்பட்ட சார்புக் கொள்கைபால் வசீகரிக்கப்பட்டிருந்தார்கள். அதில் முக்கியமான ஒருவராக போல் டிராக் இருந்தார்.

1928 ஆம் ஆண்டு, E=MC^2 என்னும் ஐன்ஸ்டைனின் சமன்பாட்டை முன்வைத்து அவரால் பல கணிதச் சமன்பாடுகள் உருவாக்கப்பட்டன. அடிப்படை நுண்துகள்கள் (Elementary particles), ஒளியின் வேகத்தில் இயங்கும்போது, எப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன என்பதைக் கணிதச் சமன்பாடுகளின்மூலம் கணிக்க விரும்பினார். குறிப்பாக, ஒரு எலெக்ட்ரோன், ஒளிவேகத்தின் அண்மைக்குச் செல்லும்போது, எப்படி நடந்துகொள்கிறது என்பதை ஆராய்ந்தார். காரணம், அடிப்படை நுண்துகள்களில் எலெக்ட்ரோனும் ஒன்றாக இருந்தது. "அப்படியென்றால், புரோட்டோனும், நியூட்ரோனும்கூட அடிப்படை நுண்துகள்கள்தானா?" என்று அவசரப்பட்டு நீங்கள் கேட்டீர்களென்றால், "இல்லை" என்பதே பதில். "அது எப்படி?" என்று இப்போது பதில் சொன்னால், தலையெல்லாம் குழம்பிப்போய் மொபைலைத் தூக்கியெறிந்துவிட்டுச் சுவருடன் தலையை மோதிக்கொள்வீர்கள். அந்தப் பாவம் எனக்குத் தேவையில்லை. அனைத்தையும் சொல்கிறேன். மெல்ல மெல்ல நிதானமாகச் சொல்கிறேன். இப்போது, டிராக்குடன் பயணிப்போம்.

### சிக்கலால் வந்த நோபல் பரிசு

ஒளியின் வேகத்தில் எலெக்ட்ரோன் போன்ற அடிப்படை நுண்துகள்கள் பயணிக்கும்போது, அவற்றுக்கு என்ன நடக்குமென்று கணிக்க, டிராக் ஒரு கணிதச் சமன்பாட்டை உருவாக்கியபோதுதான் அந்தப் பிரச்சினை தோன்றியது. டிராக்குக்குப் பிரச்சனை ஒன்றும் புதிதல்ல. மிகக்கடுமையான கட்டுப்பாட்டுடன் இருந்த அப்பாவின் கீழ் வளர்ந்ததால், எவருடனும் எதுவும் பேசுவதில்லை அவர். மாபெரும் மௌனியாகவே டிராக் அதிக காலங்கள் வாழ்ந்திருக்கிறார். அப்பாவின் கட்டுப்பாட்டினால், தமையனார் தற்கொலை செய்திருந்ததும் அவருக்குப் பெரும் பின்னடைவாக இருந்தது. ஆனால், இயற்கையின் அதிசயமோ தனியானது. டிராக், ஹக்கிங் போன்ற துயரர்களையே, சாதனையாளர்களாக மாற்றியிருக்கிறது. பேரண்டத்தின் மாபெரும் இரகசியங்கள் எல்லாம் இவர்களாலேயே விடுவிக்கப்பட வேண்டுமென்று இயற்கை என்றோ தீர்மானித்திருந்தது. எத்தனை பிரச்சனைகள் வந்தாலும், தடைகள் முன்னால் நின்றாலும், அவற்றை உடைத்தெறிந்து அறிவியலுக்கு அள்ளித்தந்தார்கள். ஆனாலும், டிராக்கின் கணிதச் சமன்பாட்டால் ஏற்பட்ட பிரச்சனை இனிமையானது. அறிவியலை அடுத்த கட்டத்துக்குத் தாவிப்பாய வைத்தது. எலெக்ட்ரோனின் ஆற்றலைக் கணிப்பதற்கான கணிதச் சமன்பாட்டை விடுவிக்கும்போது, டிராக்குக்கு வந்த விடையானது, வர்க்கமூலத்தில் (square root) இருந்தது. வர்க்கமூலம் என்னும் கணித அடையாளத்தை நீங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள். உதாரணமாக, 4 இற்கான வர்க்கமூலம் 2 என்பதாகும். 2X2=4 என்பதிலிருந்து, 4 இன் வர்க்கமூலம் 2 ஆகிறது. இவையெல்லாம் உங்களுக்கு ஏற்கனவே தெரிந்தவைதான். ஆனாலும், ஒருசிலர் மறந்திருக்கலாம் என்பதால் சொல்கிறேன். இப்படித்தான், போல் டிராக்குக்கும் முடிவு வர்க்கமூலத்தில் கிடைத்தது. சிக்கலொன்றும் அதனுடன் சேர்ந்து வந்தது. அந்தச் சிக்கலே போல் டிராக்குக்கு நோபல் பரிசையும் வாங்கிக் கொடுத்தது.

### கணிதம் சொல்வதெல்லாம் உண்மையா?

"சமன்பாட்டின் இறுதியில் வர்க்கமூலம் வந்தால், அதில் என்ன சிக்கல் வரமுடியும்?" என்றுதானே யோசிக்கிறீர்கள்? நிச்சயம் யோசிப்பீர்கள். காரணம் அறிவியலின் காதலர்களல்லவா நீங்கள். அந்தச் சிக்கல் என்னவென்று கணிதம் தெரிந்தவர்களுக்குத் தெரிந்திருக்கும். உண்மையில், ஒரு எண்ணின் வர்க்கமூலமாக ஒரேயொரு விடை வருவதில்லை. நேரெதிரான இரண்டு விடைகள் கிடைக்கும். 4 இன் வர்க்கமூலம் 2 என்று சொன்னேனல்லவா, அது தப்பில்லை. ஆனால் 2 என்னும் இன்னுமொரு விடையும் அதற்கு உண்டு. அதாவது, 2X2=4 என்பது மட்டும் விடையில்லை. 2X2=4 என்பதும் அதற்கான விடைதான். 4 இற்கான வர்க்கமூலம், +2, 2 என்னும் இரண்டு விடைகளைக் கொண்டது. இப்படிக் கணிதத்திலுள்ள அனைத்து வர்க்கமூலங்களுக்கும் நேரான (+) விடையும், எதிரான () ஒரு விடையும் கிடைக்கும். உங்களுக்குப் புரிந்திருக்குமென்று நினைக்கிறேன். டிராக்கின் சமன்பாட்டில் வந்த வர்க்கமூலத்துக்கு ஒருவிடை கிடைத்தாலும், அதற்கு எதிரான இன்னுமொரு விடையும் இருந்தது. ஒரு துகளுக்கான ஆற்றலைப் பரிசோதிக்கும்போது, அதே துகள் எதிர் ஆற்றலைக் கொண்டதாகவும் இருக்கிறது என்று தெரியவந்தது. ஒரு துகளுக்குச் சமமான, ஆனால் எதிரான ஏற்றத்துடன் துகள் (Anti particle) இருக்கிறது என்று டிராக்கின் சமன்பாடு நிறுவியது.

அதாவது, எலெக்ட்ரோனுக்கு எதிரான ஏற்றத்துடன், அதேபோன்ற எதிர் எலெக்ட்ரோன் (Anti electron) இருந்தே ஆகவேண்டுமென்று டிராக் கணித்துக் கொண்டார். பேரண்டத்திலுள்ள ஒவ்வொரு அடிப்படைத்துகளுக்கும் எதிரான இன்னுமொரு துகள் இருந்தே ஆகவேண்டுமென்ற முடிவுக்கு அவர் வந்தார். "அது எப்படி? இவர் மேசையில் உட்கார்ந்துகொண்டு எந்தவொரு ஆராய்ச்சியும் செய்யாமல், கணிதத்தால் ஒரு சமன்பாடு போடுவாராம். அந்தச் சமன்பாடு வர்க்கமூலத்தில் முடியுமாம். வர்க்கமூலத்துக்கு +, - என்ற இரண்டு விடைகள் வருமாம். அப்படி வந்ததால், துகள்களுக்கு எதிர்த்துகள்கள் பேரண்டத்தில் இருக்குமாம். என்ன விளையாடுகிறீர்களா? நீங்கள் கணிதத்தால் கணித்துச் சொன்னால், அவையெல்லாம் இயற்கையில் இருக்க வேண்டுமா என்ன? நீங்கள் அப்படியென்ன கடவுளா?" என்றுதான் இப்போது கேட்கத் தோன்றும். ஆனால், கணிதத்தாலேயே இயற்கையை அளந்தார்கள் மேதைகள் என்பது உண்மைதான்.


### கண்டறியாதன காணல்

கண்ணால் காணாத ஒன்றை, இயற்கையில் அப்படியொன்று இருக்கிறது என்ற தகவலே இல்லாத ஒன்றை, கணிதம்மூலம் கணித்துச் சொல்வதென்பது எப்படிச் சாத்தியம்? இப்போது, 'பிரிஸ்பா' என்றொரு பூ, ஜெர்மனியில் இருக்கிறது. அருமையான மணம். மிக அழகாக இருக்கும் என்று நான் சொன்னால், நீங்கள் அதை எப்படிப் புரிந்துகொள்வீர்கள்? அதன் மணத்தையும், அழகையும் எப்படி உங்களால் கற்பனை செய்யமுடியும்? கண்ணால் காணாத ஒன்றைக் கணித்துச் சொல்வது என்பது ஆச்சரியமானதென்று புரிகிறதா? கருந்துளையென்ற ஒன்றைக் கேள்வியேபடாதபோதும், அப்படியொன்று இருக்கிறதென்று கணிப்பதும், அதைப் பின்னர் கண்டுபிடிப்பதும் எவ்வளவு மாபெரும் அதிசயம் சொல்லுங்கள்? வெறும் கணிதத்தினால் ஈர்ப்பலைகளையும் (Gravitational wave), ஹிக்ஸ் போஸான்களையும், எதிர்த்துகள்களையும் (Antimatter) கணித்துச் சொல்லி, அவை உண்மையென்று நிரூபிக்கப்படு வது எத்தனை ஆச்சரியம் சொல்லுங்கள்? அதுவரை ஒவ்வொரு துகளாகத் தேடிப்பிடித்து, வரிசைப்படுத்திவந்த ஆராய்ச்சியாளர்களுக்கு, ஒவ்வொரு துகளுக்கும் எதிர்த்துகள் இருக்கிறது என்ற டிராக்கின் முடிவினால், துகள்களின் எண்ணிக்கைகள் இரட்டிப்பாகிப் போயின.

துகள்கள் அனைத்துக்கும் எதிர்த்துகள்கள் இருக்கின்றன என்ற முடிவு எங்கு கொண்டுபோய் நம்மை விடும் தெரியுமா? எதிர்த்துகள்கள் இருந்தால், அவற்றால் உருவாக்கப்படும் அணுக்களாக, எதிர் அணுக்களும் இருக்கவேண்டும். எதிர் அணுக்கள் இருந்தால், அவை உருவாக்கும் எதிர் மூலக்கூறுகளும் இருக்கும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# மாற்று அணியின் முன்னாலுள்ள பணி



நிலாந்தன்

இம்முறை தமிழ் மக்கள் கூட்டமைப்பின் ஏகபோகத்தை நிராகரித்து இரண்டு மாற்று அணிகளுக்கு மூன்று இடங்களை வழங்கியிருக்கிறார்கள். கடந்த பதினொரு ஆண்டுகளாக தமிழ் அரசியலில் கூட்டமைப்பு ஏக பிரதிநிதிகளாக வீற்றிருந்தது. கூட்டமைப்பிலிருந்து விலகிச் சென்றவர்கள் வெல்ல முடியாது என்றும் மார் தட்டியது.

ஒரு தும்புத்தடியை மக்கள் முன் வைத்து அதற்கு வாக்களியுங்கள் என்று கேட்டாலும் தமிழ் மக்கள் வாக்களிப்பார்கள் என்று இறுமாப்பு இருந்தது. ஆனால் அந்த இறுமாப்பு இந்த முறை சோதனைக்கு உள்ளாகியிருக்கிறது. மாற்று அணியைச் சேர்ந்த மூவர் இம்முறை நாடாளுமன்றத்துக்குச் செல்கின்றார்கள். மாற்று அணியைப் பொறுத்தவரை இது வெற்றியின் தொடக்கம். தமிழ் அரசியலைப் பொறுத்தவரை இது மாற்றத்தின் தொடக்கமாக அமையுமா?

முதலில் மாற்று என்றால் எதுவென்பதை அதன் சரியான பொருளில் விளங்கிக்கொள்ள வேண்டும். கூட்டமைப்புக்கு எதிராக நிற்பது மாற்று அல்ல. கூட்டமைப்பு செய்யும் எல்லாவற்றையும் விமர்சிப்பதும் மாற்று அல்ல. நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ளும் எல்லாவற்றையும் எதிர்ப்பதும் மாற்று அல்ல. அல்லது நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் நண்பர்களுக்கு எதிராக வாக்களிப்பது மாற்று அல்ல. மாற்று இவை எல்லாவற்றையும் விட ஆழமானது. அது ஒரு புதிய பண்பாடு. அது ஒரு புதிய அரசியல் செயல் வழி. 2009க்கு பின்னரான தமிழ் அரசியலை அதன் அடுத்தடுத்த கட்டங்களுக்கு முன்னெடுப்பதற்குத் தேவையான ஓர் அரசியல் செயல் வழி. தமிழ் மக்களிடம் இப்பொழுது ஆயுதப் போராட்டம் இல்லை. மக்கள் இயக்கங்களும் இல்லை. இருப்பதெல்லாம் தேர்தல் அரசியல் தான். எனவே மாற்றத்தை அங்கிருந்தே தொடங்கலாம். எப்படித் தொடங்கலாம்?

மாற்றத்தை விரும்பும் தரப்புக்கள் தேர்தல் மூலம் மக்கள் ஆணையைப் பெறவேண்டும். அதை அதன் சரியான பொருளில் சொன்னால் மக்கள் அதிகாரத்தைப் பெற வேண்டும். அந்த மக்கள் அதிகாரத்தை வைத்துக்கொண்டு அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டும். இந்த இடத்தில் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும். தமிழ் மக்கள் தமது பிரதிநிதிகளுக்கு கொடுக்கும் அதிகாரம் எனப்படுவது நாடாளுமன்றத்தில் பெருமளவுக்குச் செல்லுபடியாகாது. அது பெரும்பான்மையினரின் நாடாளுமன்றம்.

அங்கே தமிழ் மக்களுக்கு மிக அரிதாகவே பேரம் பேசும் சக்தி கிடைக்கும். ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் அப்படி ஒரு பெரிய பலம் கிடைத்தது. ஆனால் இப்போதுள்ள ராஜபக்சவின் அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கு அவ்வாறான பலம் இருக்கப் போவதில்லை. அதனால் நாடாளுமன்றத்தின் தீர்மானங்களை மாற்றும் சக்தி தமிழ்மக்களுக்கு இருக்கப்போவதில்லை. எனவே இந்த நாடாளுமன்றத்தையும் அதன் இயல்பையும் தமிழ் பிரதிநிதிகளுக்கு அதில் இருக்கக்கூடிய வரையறைகளையும் முதலில் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். அப்படி என்றால் நாடாளுமன்றத்துக்கு போய் ஒரு பயனும் இல்லையா? அப்படியும் சொல்ல முடியாது. பயன் உண்டு. நாடாளுமன்றத்தை ஒரு மேடையாகப் பயன்படுத்தலாம். தமிழ் பிரதிநிதிகள் தமது கருத்தை உலகத்துக்கு எடுத்துரைப்பதற்கு நாடாளுமன்றம் ஒரு மிகச் சிறந்த மேடை. எனவே குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தை ஒரு பிரச்சார மேடையாக ஆவது பயன்படுத்தலாம். ஆனால் அதற்குமேல் ஆசைப்படும் அளவுக்கு இப்போது இருக்கும் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களுக்கு பேரம் இல்லை. எனவே நாடாளுமன்றத்தில் ஒரு கட்டத்துக்கு மேல் எதையும் செய்ய முடியாது. ஆயின் அடுத்த கட்டம் என்ன?

அடுத்த கட்டம் எது என்பதனை மாற்று அணியின் இறுதி இலக்கு எது என்பதே தீர்மானிக்கின்றது. மாற்று அணியைச் சேர்ந்த இரண்டு கட்சிகளும் சமஸ்டித் தீர்வை

முன்வைக்கின்றன. அப்படி என்றால் அந்த சமஸ்டியை எப்படி அடைவது? சமஸ்டிக்கு அரசாங்கம் ஒத்துக்கொள்ளாது. மாகாண சபைக்கு எதிரானவர்களில் ஒருவரான ஓய்வுபெற்ற ரியல் அட்மிரல் சரத் வீரசேகர அதற்குப் பொறுப்பான ராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பதவியேற்றதும் அவர் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்.. " நான் 13 ஆவது திருத்தத்தை மிகக் கடுமையாக எதிர்த்தவன். மாகாண சபைகள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதை விதியின் நகைச்சுவையாகவே கருதுகின்றேன். எந்த சந்தர்ப்பத்திலும் காணி பொலிஸ் அதிகாரங்களை வழங்கப் போவதில்லை என்பதை தெளிவாகக் கூறிக்கொள்கிறேன்" ஆயின் இனப் பிரச்சினைக் கான தீர்வாக ஒரு சமஸ்டிக் கட்டமைப்பை ராஜபக்சக்கள் தரப்போவதில்லை. அப்படி என்றால் அதை எப்படிப் பெறுவது?

இக் கேள்விக்கு விடை காண்பது என்றால் இலங்கைத் தீவில் இதுவரையிலும் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளைப் பற்றி ஒரு பிரேத பரிசோதனை வேண்டும். கடந்த தசாப்தங்களில் மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. இரண்டு சமாதான முயற்சிகள்தான் ஒப்பீட்டளவில் வெற்றி பெற்றன. அவற்றின் விளைவுகளும் நீண்ட காலத்துக்கு நீடித்திருந்தன. இவ்வாறு இரண்டு சமாதான முயற்சிகளை இனங்காணலாம். முதலாவது இந்திய - இலங்கை உடன்படிக்கை. இரண்டாவது நோர்வேயின் அனுசரணையுடனான ரணில்பிரபாகரன் உடன்படிக்கை.

இதில் முதலாவது இந்திய-இலங்கை உடன்படிக்கை. அதன் பிரகாரம் தான் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. இன்று வரையிலும் நடைமுறையில் உள்ளன. மற்றது நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானம். இது கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் நீடித்தது. தமிழ் மக்களை ஒரு தரப்பாக ஏற்றுக்கொண்டு எழுதப்பட்ட ஓர் உடன்படிக்கை இது. இந்த இரண்டு உடன்படிக்கைகளுக்கும் ஒரு பொது இயல்பு உண்டு. அது என்னவெனில் இவை இரண்டும் வெளித் தரப்புகளின் அழுத்தங்களால் அல்லது கண்காணிப்புகளால் நிறைவேற்றப்பட்டவைதான். இந்திய-இலங்கை உடன்படிக்கையை அமுல்படுத்துவதற்கு இந்திய அமைதி காக்கும் படை நாட்டிற்குள் இறக்கப்பட்டது.


ரணில்- பிரபாகரன் உடன்படிக்கையை கண்காணிப்பதற்கு இணை அனுசரணை நாடுகளின் தலைமையின் கீழ் ஸ்கண்டிநேவிய போர் நிறுத்த கண்காணிப்புக் குழு இறக்கப்பட்டது. அதாவது இந்த இரண்டு உடன்படிக்கைகளையும் கண்காணிக்கவும் நடைமுறைப்படுத்தவும் வெளி அழுத்தம் அல்லது அனுசரணை அல்லது படைப் பிரசன்னம் அல்லது யுத்த நிறுத்த கண்காணிப்பு குழுக்களின் பிரசன்னம் போன்றன தேவைப்பட்டன. எனவே தொகுத்துப் பார்த்தால் வெளி அழுத்தங்களின் பின்னணியில்தான் இவ்விரு உடன்படிக்கைகளும் நிறைவேற்றப்பட்டன. அல்லது குறிப்பிடத்தக்க காலம் உயிர் வாழ்ந்தன.

இவ் இரண்டையும் தவிர மற்றொரு ஆகப் பிந்திய தீர்வு முயற்சியையும் இங்கு சுட்டிக்காட்டலாம். ஐ.நா.வின் அனுசரணையோடு முன்னெடுக் கப்பட்ட ஒரு தீர்வு முயற்சி அது. 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட முப்பதின் கீழ் ஒன்று தீர்மானமே அது. இத் தீர்மானத்தின் மூலம் இலங்கைத் தீவில் நிலைமாறுகால நீதியை ஸ்தாபிப்பதற்கு அப்போது இருந்த ரணில்-மைத்திரி அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. நிலைமாறு கால நீதியின் மீள நிகழாமை என்ற பிரிவின் கீழ் இலங்கைத் தீவின் யாப்பை மாற்றவும் ஒப்புக்கொண்டது. புதிய யாப்பு இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கியிருக்கும். அதன்படி நாடாளுமன்றத்தில் சாசனப் பேரவை மாற்றப்பட்டு யாப்புருவாக்க முயற்சிகள் தொடக்கப்பட்டன. இந்த முயற்சிகளை ஐ.நா. தொடர்ச்சியாகக் கண்காணித்தது. இலங்கைத் தீவை தன்னுடைய செல்வாக்கு வளையத்துக்குள் ஐ.நா. தொடர்ச்சியாகப் பேணியது. ஐ.நா.வின் சிறப்புத் தூதுவர்களும் ஏனைய தூதுவர்களும் இலங்கைக்குள் அடிக்கடி வந்து போயினர். தவிர ஐ.நா.வை பின்னிருந்து இயக்கிய மேற்கு நாடுகளின் தலைவர்களும் தூது வர்களும் இராஜதந்திரிகளும் நிலைமாறுகால நீதியை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தின் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் அழுத்தங்களைப் பிரயோகித்தார்கள். ஆனால் அம் முயற்சிகள் அனைத்தையும் மைத்திரிபால சிறிசேன 2018 ஒக்ரேபர் மாதம் தோற்கடித்து விட்டார்.

இலங்கைத் தீவின் நாடாளுமன்றம் நிலைமாறுகால நீதியை ஐ.நா. பரிந்துரைக்கும் அதன் முழுமையான வடிவத்தில் ஏற்றுக்கொள்ளாது என்பதே கடந்த ஐந்து ஆண்டுகால அனுபவம் ஆகும். அதிலும் குறிப்பாக ரணில்-மைத்திரி அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மை எனப்படுவது ஒப்பீட்டளவில் பல்

(20ஆம் பக்கம் பார்க்க)

மாற்று அணியைப் பொறுத்தவரை இது வெற்றியின் தொடக்கம். தமிழ் அரசியலைப் பொறுத்தவரை இது மாற்றத்தின் தொடக்கமாக அமையுமா? முதலில் மாற்று என்றால் எதுவென்பதை அதன் சரியான பொருளில் விளங்கிக்கொள்ள வேண்டும். கூட்டமைப்புக்கு எதிராக நிற்பது மாற்று அல்ல. கூட்டமைப்பு செய்யும் எல்லாவற்றையும் விமர்சிப்பதும் மாற்று அல்ல. நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளும் எல்லாவற்றையும் எதிர்ப்பதும் மாற்று அல்ல. அல்லது நாடாளுமன்றத்தில் கூட்டமைப்பின் நண்பர்களுக்கு எதிராக வாக்களிப்பது மாற்று அல்ல. மாற்று இவை எல்லாவற்றையும் விட ஆழமானது. அது ஒரு புதிய பண்பாடு. அது ஒரு புதிய அரசியல் செயல் வழி.




# ஜனநாயகமா? இறைமையா?

○ ஆர்.பிரகாஷ்

ஜனநாயகம் என்றால் என்ன?. ஜனங்களை (மக்களை) நாயகர்களாகக் கொண்டு நடத்தப்படும் ஆட்சிதான் ஜனநாயகம் என்று பொருள் கொள்ளப்படுகின்றது. இதற்குப் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்கள் பல்வேறு அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட போதிலும் ஜனநாயகம் என்ற எண்ணவோட்டம் மக்கள் நலனைச் சார்ந்ததாகத்தான் இருக்கும். அதேபோல் இறைமை என்பதற்கும் பல்வேறுபட்ட விளக்கங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் அதன் சாராம்சம் 'நிறைவான அதிகாரம்' என்பதாகத்தான் அமையும். ஒருநாட்டில் நிறைவான அதிகாரம் உள்ளவர்கள் மக்கள். அந்த வகையில் ஜனநாயகமும் இறைமையும் ஒன்றுடன் இன்னொன்று நெருங்கித் தொடர்புறுகின்றன. ஆனால் தற்போது மாலியில் இடம்பெற்



றிருப்பது ஜனநாயத்துக்கான சம்மட்டி அடியா அல்லது இறைமையைக் காப்பாற்றுவதற்கான நகர்வா என்பதில் முன்பின் முரண்கள் ஏற்பட்டுள்ளன.

### இராணுவப் புரட்சி

இர்ராணுவப் புரட்சி மூலம் ஆட்சிமாற்றம் இடம்பெறுவது உலக நாடுகளைப் பொறுத்தவரையில் பல நூற்றாண்டுகளாகத் தொடர்கதைதான். மாலியைப் போன்று இன்னொரு ஆபிரிக்க நாடான சிம்பாப்வே 2017ஆம் ஆண்டு இராணுவப் புரட்சியை எதிர்கொண்டது. இதன்மூலம் பல தசாப்தங்களாக அங்கு ஜனாதிபதியாக இருந்த முகாபே வீழ்த்தப்பட்டு ஆட்சியதிகாரம் எமர்சனிடம் ஒப்படைக்கப்பட்டது. சிம்பாப்வேயில் தேர்தல் முறைகேடு இடம்பெற்றது, முகாபேயின் ஆட்சி சர்வாதிகார ஆட்சி என்றதன் அடிப்படையில் அந்த இராணுவப் புரட்சிக்கு நியாயம் கற்பிக்கப்பட்டது. அதை சர்வதேச அரங்கும் ஏற்றுக்கொண்டது. ஆனால் தற்போது மாலியில் இடம்பெற்றுள்ளது சிம்பாப்வே போன்றதான இராணுவப் புரட்சியல்ல. மாலி இராணுவப் புரட்சி உள்நாட்டில் கொண்டாடப்பட்டாலும் வெளிநாடுகளில் அதற்குப் பெரும் எதிர்ப்பலை ஏற்பட்டுள்ளது.

### ஜனயநாகமா?

மாலியில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தலில்தான் இப்ராஹிம் பபுபக்கர் ஜனாதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்தத் தேர்தலில் 'ஆபிரிக்காவுக்கேயான' அத்துமீறல்கள் இருந்தபோதிலும் ஒப்பீட்டளவில் அது ஜனநாயகத் தேர்தல் என்று முத்திரை குத்தப்பட்டது. ஆக, மாலியில் அமைந்திருந்த ஆட்சி ஏலவே குறிப்பிட்டதைப்போன்று ஜனங்களை நாயகர்களாகக் கொண்ட மக்களாட்சி என்று ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. அவ்வாறிருக்கையில் நடைபெற்றுள்ள இந்த இராணுவப் புரட்சி ஜனநாயக விரோத நடவடிக்கை என்று கொந்தளிக்கின்றன சர்வதேச நாடுகள் சில. குறிப்பாக மேற்கத்தேய நாடுகள் இவ்வாறான நிலைப்பாட்டில் உள்ளன.

### காப்பாற்றப்பட்ட இறைமை

சர்வதேசத்தின் கருத்துக்கள் ஒருபுறம் இருக்கையில் உள்ளூர் மக்களில் ஒரு தொகுதியினர் மாலியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை கொண்டாடத்தான் செய்கின்றனர். "இப்ராஹிம் மேற்கத்திய நாடுகளின் கைக்கூலி. அவரின் நடைமுறைகள், கட்டளைகள், சட்டங்கள், செயற்பாடுகள் மாலிக்கு உகந்தவையாக இல்லை. ஆதலால் இராணுவம் மேற்கொண்ட புரட்சி சரியானதுதான்" என்கின்றனர் உள்ளூர் மக்கள். அதுமட்டுமல்லாமல் மாலியில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவந்த அடிப்படைவாத தாக்குதல்கள் மற்றும் இனத்துவேசச் செயற்பாடுகளை கட்டுப்படுத்தவும் இப்ராஹிம் தவறிவிட்டார் என்ற இமாலய குற்றச்சாட்டும் அவர் மீது உள்ளது.

### புதிதல்ல

மாலிக்கு இராணுவப் புரட்சி புதிய விடயமல்ல. இதற்கு முன்னரும் அந்த நாடு இராணுவப் புரட்சியால் ஆட்சிமாற்றங்களைக் கண்டுள்ளது.
1968, 1991, 1992 ஆகிய ஆண்டுகளில் மாலியில் இராணுவப் புரட்சி ஏற்படவே செய்திருந்தது. அதிகாரத்தில் இருந்தவர்கள் பதவியில் இருந்து அகற்றப்பட்டுள்ள நிலையில், மாலி இராணுவம் கூடிய விரைவில் பொதுத் தேர்தலை நடத்தி ஆட்சியை ஜனநாயக சித்தாந்தத்தின் கீழ் ஒப்படைக்குமா? என்பதே தற்போதுள்ள மில்லியன் டொலர் கேள்வி. ■

# காக்க காக்க கனகவேல் காக்க...



## அலட்டல் அப்புத்துரை

கனநாளைக்குப் பிறகு சந்திக்கிறம். எண்டைக்கு இந்தக் கோதாரி கொரோனாப் பூச்சாண்டி தலைகாட்டிச்சோ அண்டைக்குக் குழம்பினதுதான் எங்கடை மாலை நேரச் சந்திப்பு. எனக்கென்னமோ பின்னேரம் மைம்மல் பொழுதிலை கொஞ்ச நேரமாகிலும் எங்கடை பெடியள் கூடுகிற இடத்துக்குப் போய் அவங்களோடை பம்பல் அடிக்காட்டி அண்டைக்கு ராச் சாப்பாடு ஏறாது . மனம் கேளாமல் ரெண்டாருநாள் எங்கடை பெடியள் வழக்கமாய்க் கூடுற அந்தப் புளியடிப் பக்கம் போனனான் தான். அவனவன் முகத்திலை மூக்கையும் வாயையும் மூடி காதிலை இழுத்து துணியொண்டை மாட்டிக் கொண்டு "அப்புத்துரை அண்ணை, கிட்ட வாறதெண்டால் வாயையும் மூக்கையும் மூடி 'மாஸ்க்கோ' அதில்லாட்டில் லேஞ்சியாது கட்டிக்கொண்டு வா. இல்லாட்டில் சிவனே எண்டு வீட்டுத் திண்ணையில் குந்தியிரு" எண்டிட்டாங்கள்.

கொரோனாத் தொற்று உலகம் முழுதையும் ஆட்டிப் படைக்கிற செய்திகளை ஒவ்வொரு நாளும் அண்டை அயல் வீட்டுக்காரர் சொல்லுற புதினமாய்க் கேட்டு மூளையிலை நான் கிரகிச்சு வைச்சுக் கொண்டிருந்ததாலை பெடியளின்ரை சொல்லுக்குக் கட்டுப்பட்டு நானும் ஒட்டுமொத்தமாய் புளியடிப் பக்கம் போறதைக் கை விட்டிட்டன்.

முந்திய காலத்திலை உலகத்திலை தொற்று நோய்கள் காலத்துக்குக் காலம் வெவ்வேற நாடுகளிலை பரவி அதுகளால கோடிக் கணக்கான சனங்கள் செத்துப் போச்சினம் எண்டு என்ரை சின்ன வயதிலை கனபேர் சொல்லக் கேட்டிருக்கிறன். எங்கடை நாட்டிலை கூட சுத்தி வளைப்பு எண்டு ஆமிக்காரர் தமிழர் பகுதிகளிலை வீடு வீடாய்ப் பூந்து பெடியளைப் பிடிச்சுக்கொண்டு போனது போலை வெள்ளைக்காற ராணுவம் வீடு பூந்து இளம் பெடியளைத் தேட வாற வேளையிலை தங்கடை பிள்ளையளை அவங்களிட்டை இருந்து காப்பாத்த எங்கடை சனம் புத்திசாலித் தனமாய் கையாண்ட ஒருமுறைதான் வீட்டு வாசலிலை வேப்பிலையைக் கட்டித் தொங்க விடுற விளையாட்டு.


அம்மை நோய் ஒரு காலத்திலை எல்லாரையும் ஆட்டிப்படைச்சுதாம். எதுக்கும் பயப்பிடாத வெள்ளைக்கார ராணுவம் அம்மை நோய்க்கு அத்தனை தூரம் அஞ்சுமாம். அம்மை நோய்த் தொற்றுள்ள ஒரு நோயாளி இந்த வீட்டிலை இருக்கிறார் எண்டதை மற்றவைக்குத் தெரியப்படுத்த எங்கடை தமிழ்ச் சனம் அந்தக் காலத்திலை வேப்பிலையை வீட்டு வாசலிலை கட்டித்தொங்க விட்டு எச்சரிக்கைச் 'சிக்னல்'விடும் வழக்கம் இருந்ததாம். பிறகென்ன அதைக் கண்டால் ஆளைவிட்டால் காணும் எண்டு வெள்ளைக்கார இராணுவத்தினர் ஓடித் தப்பி விடுவினம் எண்டு எங்கடை அப்பர் எங்களுக்குக் கதை சொன்னதாக ஞாபகம் இருக்கு. அந்த அளவுக்கு தொற்று நோய்கள் பலப்பல ரூபங்களிலை காலத்துக்குக் காலம் தலைதூக்கி கொத்துக் கொத்தாய் உயிர்களைப் பலியெடுத்திருக்குதுகள். அந்த வரிசையில இப்போ கொரோனா.

கொரோனா ஏதோ காலச்சூழலிலை சீனாவிலை முதலிலை துவங்கி நாட்டுக்கு நாடு பரவி உலகம் முழுக்க பரவிச்சுது எண்டுதான் நான் நம்பினன். ஆனால் எங்கடை பெடியளோ இல்லையில்லை, சீனா தன்ரை ஆதிக்கப் போட்டியிலை, உலகத்தில முன்னுக்கு நிக்கிற மற்ற நாடுகளை மசிய வைச்சு ,தான் உலகத்திலை முன்னுக்கு வரத் திட்டமிட்டு கொரோனாக் கிருமிகளை உருவாக்கினதெண்டும், அதுகளை உலக நாடுகளிலை பரவவைச்சு அழிவுகளை ஏற்படுத்த திட்டம் போட்டு செயற்பட்டு அதிலை வெற்றியும் கண்டிட்டுது எண்டும் சொல்லுறாங்கள்.

எது எப்பிடியோ? எங்கடை ஈழத் தமிழினம் இந்த நாடு சுதந்திரமடைஞ்ச நாள் தொட்டு அரசியல் ரீதியில் புறமொதுக்கப்பட்ட இனமாய், பேரினவாத சிங்கள அரசுகளால் பல்வேறு வகையளிலை பாதிப்பைச் சந்தித்து நலிவடைஞ்சு போயிருக்குது. இந்த நிலையிலை கொரோனா எங்கடை பக்கம் வராமல் இருக்க எங்கடை சித்திரவேலாயுதர் தான் அருள்புரிய வேணும்.காக்க காக்க கனகவேல் காக்க ■



# சொற்சிலம்பம் போட்டி 9




அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..............................................................

கையொப்பம்:...............................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

### இடமிருந்து வலம்

1. நவரத்தினங்களுள் ஒன்று, 5. எழு 7. ஒருவகை நோவு 8. தூக்க 9. ஓரெழுத்தைக் குறிப்பது. 10. திருவடித்தாமரை 12. விலகுதல் 13. வழி 15. படி 16.ஈடேற 17. தாங்குதல் 18. ஈகை 19. அசைச் சொல்.

### மேலிருந்து கீழ்

1. சினம் 2. கீழ் அல்ல 3. நடப்பதற்கு முன் குழந்தை செய்வது 4. யுகங்களுள் ஒன்று 5. மெய்வன்மை விளையாட்டுகளுள் ஒன்று. 6. நாள் 8. அனைத்து 9. மீன் கொள்வனவு செய்ய பயன்படுத்தப்படும் ஓலைப் பை 10. ஒரு மரக்கறி 11. பல மலர்கள் ஒன்று சேர்வதால் வருவது 12. ஒரு கீரை வகை 14. பெண் 16. தந்திரம் 17. விடாய்.

### சொற்சிலம்பம் போட்டி 07 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1.முகப்பரு, 5.பாதி, 6.துரு, 7.கசிதல், 9.கும்பல், 12.புகை, 13புராணம், 15வரலாறு, 17.நுகர்தல், 19.சுடு, 20.பதி, 21.கத்த, 22.விரைவு, 23.மலிதல்,

**மேலிருந்து கீழ்**

1.முதுகு, 2.கரும்பு, 3.பகல், 4.ருசி, 5.பால், 8.தகராறு, 10பகை, 11.கும்பிடுதல், 13. புலால், 14. அநுபவி, 16.ரதம் , 18.கதிரை, 19.சுத்த , 21.கலி

**சொற்சிலம்பம் போட்டி இல.09**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்

**உதயன் சஞ்சீவி**

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு

**28.08.2020** இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

**போட்டி இலக்கம் 06இல் வெற்றி பெற்றோர் விபரம்**

**1 ஆம் பரிசு**
செ.சாருஜா
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

**2 ஆம் பரிசு**
மு.கந்தையா
தபாலக வீதி, சாவகச்சேரி.

**3 ஆம் பரிசு**
சி.பாலசுந்தரம்
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்

**4 ஆம் பரிசு**
ரா.ராஜசந்திரன்
42, கண்ணபுரம்,
நாவாந்துறை

**5 ஆம் பரிசு**
பி.ஆரணி
புலோலி தெற்கு மேற்கு, புலோலி

## பாண்டியாட்டம் / நொண்டி



கிராமங்களில் சிறுமிகளால் விளையாடப்படும் பிரபலமான விளையாட்டு இதுவாகும்.

ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டிருக்கும் எட்டு தொடர்ப் பெட்டி உருக்களை தரையில் வரைந்து கொள்ள வேண்டும்.

போட்டியாளர்கள் முதல் பெட்டியில் கல்லைப் போட்டு அந்த பெட்டியின் கோடுகளைத் தொடாமல் நொண்டி அடித்து கடைசிப் பெட்டி வரை சென்று, மீண்டும் ஆரம்பித்த இடத்திற்கே திரும்ப வர வேண்டும். இவ்வாறு ஒருவர் பின் ஒருவராக விளையாடுவர்.

## நீர் வளம் காப்போம்

நீர் நிலைகள் நிறை நாடெம் ஈழ வளநாடு
நீர் அதனை வளமொடு பேணிடுதல் சிறப்பு

நீரோடை,ஆறுகள்,அருவி,நீர்வீழ்ச்சி
நீரோடும் கால்வாய்கள்,கிணறு,குளம்,குட்டை

நீர் செய்யும் தவறாலே நீர் நிலைகள் இனிமேல்
நீர் வற்றி நிறம் மாறி நீர் மாசு அடையும்

ஆழ்துளைக் கிணறுகள் ஊர் மனைக்குள் புகுந்து
அறியாமல் எம் கிணற்றில் உவர் நீரைச் சேர்க்கும்

உவர் நீரை நன்னீராய் மாற்றிட எம்மரசு
உவந்து பல திட்டங்கள் வகுக்கும் பணச் செலவில்

வான் நின்று மொழிகின்ற மழை நீரைச் சேர்த்து
மாண்புடனே நாமும் நீர் வளமதனை காப்போம்.

அங்கத்துவ இல 017,
க.கனிமொழி,
தரம் - 8, யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

## கறுப்புப் பூனையும் காவல் வீரனும்...!



வீட்டுக் கரசன் நான்தானே
வீட்டைக் காக்கும் காவல்காரன்
வெளியே இருந்து காக்கின்றேன்
வீரன் யாரு தெரியாதோ... ..

காவல் காரப் பெரியவரே
கனக்க வீரம் காட்டுகிறீர்
நானும் வித்தையில் வல்லவனே
நீரும் என்னை அறிவீரோ... ..

வீட்டுக் குள்ளே புகுந்திருப்பீர்
வேளை முழுதும் உறங்கிடுவீர்
அடுப்பங் கரையில் படுத்திருக்கும்
உமக்கு என்ன வீரம்தான்... ..

பெரிதாய் புளுகும் நாயண்ணா
பக்குவம் வேண்டும் மனதினிலே
மற்றோரை மதித்திடப் பழகிடுவீர்
மனதில் அமைதி கொண்டிடுவீர்...

எதிரே நின்று சீறுகின்றீர்
எலியைப் பிடித்து தின்னுகிறீர்
என்ன திறமை கொண்டுள்ளீர்
எதுவோ சொல்லும் பூனையாரே... ..

இவ்வளவு சொல்லும் நாயண்ணா
என்னை வெல்ல முடிந்திடுமோ
சின்னப் பூனை நானண்ணா
செயலில் பெரியவன் தானண்ணா...

இந்தா பாரும் என்னைத்தான்
உம்மால் முடிந்தால் காட்டிவிடும்
ஓடி மரத்தின் உச்சியிலே
ஏறும் அணிலைப் பிடித்திட்டேன்...

அதிகம் பேசிப் பயனென்ன
எதையும் செயலில் காட்டிவிடும்
அணிலைப் பிடித்த வீரன்யார்
அண்ணாந்து என்னைப் பாரண்ணா...

சிறியவர் என்று மற்றோரை
சிறிதும் ஏளனம் செய்யாதீர்
செயலில் வீரம் காட்டுகின்ற
சிறியவர் எல்லாம் பெரியவரே..!

பத்மா இளங்கோவன்

சிறுகதை

# உயிர்

பா.பாலாஜினி
பளை.



டாருகாவுக்கு மதியத்தில் இருந்தே தலை சுற்றிக் கொண்டிருந்தது. உணவு உண்ணவோ ஓய்வெடுக்கவோ அவளுக்கு அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. தொடர்ச்சியாக நான்கு நாட்கள் உடலை முழுவதும் மூடியபடி இருக்கும் பாதுகாப்பு ஆடைகளுடனும் முகக்கவசங்களுடனும் அவள் பணியாற்றிக் கொண்டிருக்கிறாள்.

"மிஸ் டாரு இன்று எத்தனை பேருக்கு கொரோனா ரெஸ்டிங்கில் பொஸிட்டிவ் என்று கணக்கெடுத்துவிட்டீர்களா?"

"அட கடவுளே, இந்த முதியவருக்கு பொருத்துவதற்கு ஒக்ஸிஸன் சிலிண்டர் ஏதேனும் மீதமிருக்கின்றதா?"

'மிஸ் என்னுடைய மகனுக்கு தற்போது எப்படி இருக்கின்றது? "

யாருக்கு என்ன பதிலைச் சொல்வது? வைத்தியர்களினதோ தாதிகளினுடைய எண்ணிக்கையோ சொற்பமாக இருக்கும் அதேவேளை, நாளாந்தம் நோய்த் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தபடியே இருந்தது. தன் நிலையை பற்றி கவனிக்க முடியவில்லை அவளால். நோயாளர்களின் ஆடைகளை மாற்றுதல் ,உணவு வழங்குதல் ஆகிய வேலைகள் அவளுக்கு இன்னும் மீதமிருந்தன. இன்று இரவு சிறிது நேரமாவது கண் உறங்கச் சந்தர்ப்பம் கிடைக்காதா என்ற ஏக்கத்தில் இருந்தார்கள் அனைத்துப் பணியாளர்களும்.

டாருகா 23 வயது மட்டுமே நிரம்பியவள். இத்தாலியின் அரச மருத்துவமனையில் மருத்துவத் தாதி. நோய்த் தொற்றுக்கு ஆளாகியோரைக் கவனிக்கும் பொறுப்பு அவளுக்கு. தாய் இல்லை. தந்தை மட்டுமே. ஏனைய தாதிகளை விடவும் டாருகா அக்கறையோடு நோயாளிகளைக் கவனிப்பாள். இருப்பினும் நோயின் தீவிரமும், நோயாளர் இறப்பும் அவளையும் அச்சத்துக்கு உள்ளாக்கி இருந்தது.

"டாருகா சற்று வேகமாக வருகிறாயா? இறந்தவர்களின் எண்ணிக்கையை கணக்கிடும் நேரம் வந்து விட்டதல்லவா?"

" ம்ம். வருகிறேன் மோனிகா" என்றவாறே டாருகா அவசரமாக சக தாதியின் பின்னே ஓடினாள். தினமும் மாலை 6 மணியளவில் அன்றைய தினம் இறந்தவர்களினதும் சுகப்பட்டவர்களினதும் எண்ணிக்கை கணக்கெடுக்கப்படுவதுண்டு. அயல்வைத்தியசாலைகளில் இந் நோய்த்தொற்றால் இறந்தவர்களின் விபரங்களும் இங்குதான் பதிவு செய்யப்பட்டு, சுகாதார அமைச்சகத்துக்கு அனுப்பப் படும்.

டாருகாவின் காதலன் நிஸானுக்கும் கொரோனா தொற்றியிருந்தது. வேறோர் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுக் கொண்டிருந்த காதலனைப் பற்றி விசாரிக்கவோ, அவனுக்காகப் பிரார்த்திக்கவோ அவளுக்கு நேரம் கிடைப்பதில்லை. அவனைப் பார்த்தே நான்கு வாரங்களாகி விட்டன. கைவிரல் கோர்த்து , கண்சிமிட்டி, புன்னகைத்து, அழகாக முத்தமிட்டு அவளைக் குதூகலிக்க வைப்பவன். அவனைக்கூட பார்க்க முடியாத நிலை டாருகாவுக்கு. விழிகளில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தபடி நிமிர்ந்த அவளுக்கு ஓர் யோசனை தோன்றியது.

> யாருக்கு என்ன பதிலை சொல்வது? வைத்தியர்களினதோ தாதிகளினுடைய எண்ணிக்கையோ சொற்பமாக இருக்கும் அதேவேளை நாளாந்தம் நோய்த் தொற்றுக்கு உள்ளாகுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்தபடியே இருந்தது. தன் நிலையை பற்றி கவனிக்க முடியவில்லை அவளால்.

"மோனிகா, நோயாளர் எண்ணிக்கையைக் கொஞ்சம் பார்த்துக் கொள் ,இதோ வருகிறேன்" என்று கூறியவாறே நோயாளர்களால் நிறைந்திருந்த 'வார்ட்டுகள்' யாவற்றையும் தாண்டி படபடக்கும் இதயத்துடன் அவள் ஓடிச் சென்றாள். தினமும் ம்ாலையில் அனைத்து வைத்தியசாலைகளில் இருந்தும் கொரோனாவில் இருந்து பூரண சுகமடைந்து வீடு சென்றவர்களினுடைய பெயர் விபரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். டாருகாவின் கைகளும் விழிகளும் ஒவ்வொரு பெயராகத் தடவி தடவி நிஸானினுடைய பெயரைத் தேடிக் கொண்டிருந்தன. 'இல்லையே. இன்றைக்கும் வரவில்லையே. என்ன நடந்திருக்கும்? ' அவள் தனக்கு தானே சொல்லிக் கொண்டாள். நிஸானினுடைய நினைவுகள் அவளை ஆக்கிரமித்துக்கொண்டன. எப்படியாவது இன்னும் சில தினங்களில் அவன் குணமடைந்து விடுவான் என்ற நம்பிக்கை அவளுக்கிருந்தது. அவன் நினைவுகளிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்ட டாருகா வேகவேகமாக தனது பணியிடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

"மோனிகா, நீ எல்லா விபரங்களையும் கணக்கெடுத்துவிட்டாயா?"

"இல்லை டாருகா. இன்று வேறு வைத்தி சாலைகளில் இருந்தும் இறந்த உடலங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனவாம் சற்று என்னுடன் வா" என்றது மோனிகாவின் குரல்.

தகுந்த பாதுகாப்புடன் பெட்டியிடப்பட்டு தகனத்துக்கென அனுப்பி வைக்கப்பட்டிருந்தன உடலங்கள். பெட்டிகளின் வெளிப்புறத்தில் இறந்தோரின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொருவராக மோனிகா சொல்லும் பெயர்களைக் குறித்துக் கொண்டிருந்தாள் டாருகா.

"என்ன மோனிகா சீக்கிரமாக அடுத்த பெயரைச் சொல்லு .நேரமாகிறதல்லவா?" என்று நிமிர்ந்த டாருகாவின் விழிகள் அந்தப் பெயரைக் கண்டுமருண்டன.

"எஸ்.நிஸான் " என்ற எழுத்துக்களை தாங்கியிருந்தது ஒரு சவப்பெட்டி. ஒட்டு மொத்த உணர்வுகளும் செயலிழக்க,

விழிகளில் நீர் வழிந்தோட,

மயங்கி விழப்போனவளை அவளை தூக்கிநிறுத்தியது ஓர் அவலக் குரல்.

"நேர்ஸ், யாராவது ஓடி வாருங்கள், இந்தச் சின்னப் பையனுக்கு மூச்சு இழுக்குது"

ஒருமுறை நிஸானின் உடலைத் தாங்கிய சவப்பெட்டியைப் பார்த்து, கடைசிக் கண்ணீர்த்துளியை துடைத்தபடி, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்தச் சிறுவனைக் காப்பாற்ற ஓடத் தொடங்கினாள் டாருகா. சிலவேளைகளில், அந்தச் சிறுவனின் மூச்சிலும் நிஸானின் உயிரை அவள் காணக்கூடும்.

> டாருகாவின் காதலன் நிஸானுக்கும் கொரோனா தொற்றியிருந்தது. வேறோர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த காதலனைப் பற்றி விசாரிக்கவோ, அவனுக்காகப் பிரார்த்திக்கவோ அவளுக்கு நேரம் கிடைப்பதில்லை.



# வட்டவிதானையார் வலம்புரிநாதன்

O இராகன்



கிராமத்து மனிதர்கள் என்ற இந்தத் தொடர் தனித்துவமான கிராமத்து மனிதர்களை மீள நினைவுபடுத்துவதன் மூலமாக அருகிப்போன கிராமத்து வாழ்வின் செழுமைகளையும் சிறப்புக்களையும் வெளிக் கொண்டு வருகின்றது.

முதலியார், உடையார், விதானையார் என்று அந்தக்காலத்து சமூகத்தில் பதவி அடிப்படையில் மிகுந்த அதிகாரமுடையவர்கள் இருந்து வந்துள்ளனர். 'நிலதாரி' என்பது 'கிராம நிலதாரி' என்றாகி, இன்று மக்கள் சேவையின் அமுல் படுத்தல்நிலைப் பதவியாகிப்போனது. சில வேளைகளில் கிராம 'அலுவலராகவும்' இன்னும் சில வேளைகளில் கிராம'சேவகராகவும்' பணியாற்றிவரும் அவரது கையொப்பத்துக்கும் பதவி முத்திரைக்கும் உள்ள 'பவர்' அப்படிப்பட்டது! உதவிப் பணத்துக்கான வருமான உறுதிப்படுத்தல், உணவு முத்திரைக்கான சிபார்சு, வதிவிடத்தை உறுதிப்படுத்தலும் நற்சான்றிதழும் என்று சாதாரணமாகத் தொடங்கும் சிபார்சு, வீட்டுத்திட்ட உதவிவரை நீள்வதை அனுபவரீதியில் உணராதார் இல்லை.

யுத்த காலத்தில் கிராம சேவகரின் பங்கும் பணியும் அத்தியாவசிமானதாக அமைந்தது. கூட்டுறவுச் சங்கத்தில் 'கியு' வரிசையில் நின்று நிவாரணம் வாங்குவது முதல், இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதுவரை பல்வேறு காரியங்களுக்கும் அவர்களின் நெஞ்சில் தொங்கிக் கொண்டிருந்த நாட்டின் அரசாங்க இலச்சினை பாதுகாப்புக் கவசமாக அமைந்திருந்தது. அரசாங்க இலச்சினையை நெஞ்சில் சுமந்து திரியும் 'ஜனநாயகமயப்பட்ட' விதானைமாரைத் தெரிந்தவர்களுக்கு 'சர்வவல்லமையும்' பொருந்திய 'வட்ட விதானையார் வலம்புரிநாதனை' தெரிந்திருக்க வாய்ப்புக் குறைவு தான். வட்டவிதானையார் வலம்புரிநாதன் 'வேலிக்கு மூத்தான் வேலும்மயிலுவின்' மகன். வேலும் மயிலும் என்ற பெயரோடு

அடைமொழியாய் ஒட்டிக்கொண்ட 'வேலிக்கு மூத்தான்' என்பது காரண இடுகுறியாகி வேலும்மயிலும் இல்லாமலே தனித்துப் பொருள் தரவல்ல சொல்லாகிப்போனது! வேலும்மயிலும் ஒரு நிலப்பிரபு போல வாழ்ந்தவர். கல்லெறிந்து காணி பிடிப்பதில் வல்லாளன். வன்னிப்பகுதியில்கூட கல்லெறிந்து அவர் பிடித்த காணிகள் கணக்கிலடங்காதவை என்றொரு பேச்சிருந்தது! அவர் ஒரு திருக்கல் வண்டில் வைத்திருந்தார். எப்போதாவது வீதியில் இறங்கி நடந்தால், வீதியோர வளவுகளிலுள்ள வீடுகளில் இருந்தபடியே அவரின் வழுக்கலாகிப் போன உச்சி மண்டையிலிருந்து தலையை நெஞ்சோடு பொருத்திவைத்துள்ள நீண்ட கழுத்தையும் சேர்த்து வேலிக்கு மேலாக தூலமாகத் தரிசிக்கலாம். தூல லிங்கமான கோபுரம் அவர். அவர் ஒரு 'ரவர்'!

கிராம சபை எலக்சன் வந்துவிட்டால் வேலிக்கு மூத்தானின் வீடு களைகட்டும். தொண்டர்கள் புடைசூழ வெள்ளை வேட்டி உத்தரியத்தோடு தலைவர்கள் வந்துபோவர். தலைவர்களுக்காக பின்வளவு எல்லையில் 'கிடாய்' தூக்கப்படும். இரத்தம் வறுத்து 'ரேஸ்ட்' தயாராகும். புகையிலை புகைப்போடும் 'தீராந்தி'யில்(போறணை) உள்ளூர் வெள்ளையும் வெளியூர் கறுப்புமாக 'அயிற்றங்கள்' மறைத்து வைக்கப்பட்டிருக்கும். கிராம சபைக்குத் தலைவராக வரத்தக்க உறுப்பினர் ஒருவரைக் கொண்டுவந்து நிறுத்தும் வல்லமை வலம்புரிநாதனின் தகப்பனாரின் அதிகாரச் சொல்லுக்கிருந்தது. அவரது நிலபுலங்களில் வாழ்பவர்களும் வேலை செய்பவர்களும் வாக்குப் போட்டாலே எலியை நிறுத்தினாலும் எலக்சனில்வெல்லும். அவரின் ஒரு சொல் ஒரு ஷெல்! ஊரில் தந்தையின் அதிகாரத்துக்குக் கிடைத்த பேறுதான் 'வட்டவிதானை' பவிசு.

'வட்ட விதானை வலம்புரிநாதன்' வேலிக்கு மூத்தானின் மகன் என்பதற்குச் சற்றும் குறைவில்லாதவர். தந்தையின் காலத்தின் பின்னரும் 'வெள்ளை வேட்டிகளோடு' தன் தொடர்பை வலு வாகப் பேணி வந்தார். 'சர்க்கரை மூடையை மொய்க்கும் ஈக்களைப்போல' வலம்புரிநாதனை வாக்குக்காக மொய்ப்பர். அது வலம்புரிநாதனின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்தியிருந்தது.

அதிகாரம் துப்பாக்கிக் குழலிலிருந்து பிறக்கிறது என்று சொன்னவர்களுக்கு 'தீராந்தி'யிலிருந்து பிறப்பது தெரியாதிருந்தது. பாவம்!

வட்டவிதானையாரின் வீடு, ஏக்கர்களாக விரிந்த எல்லையற்ற வளநிலத்தின் முதல் கால்வாசிப் பகுதியில் இருந்தது. வளவின் பிரதான வாயிலிலிருந்து அவரது வீட்டை அடைய ஏறத்தாழ நூற்றைம்பது மீற்றர் நடக்கவேண்டியிருந்தது. நூற்றைம்பது மீற்றர் தூரத்துக்கும் இருபக்கமும் குலையாய்க் காய்த்திருக்கும் கமுகுகளால் எல்லைப்படுத்தப்பட்ட பாதை. பாதையின் வலது புறத்தில் எல்லைவரை விரிந்திருக்கும் வாழைத் தோட்டம். இடது புறத்

## கிராமத்து மனிதர்கள்... 10

தில் மா பலா மாதுளை எலுமிச்சை தோடை என்று பழமரங்கள். அவற்றைச் சுற்றி அமைக்கப்பட்ட 'கிளிசீறியா' கிடுகுவேலி. வீட்டைச்சுற்றி நடந்து பின்னே சென்றால் வள வின் மீதி முக்கால் பகுதியிலும் ஒரு புறத்தில் குரக்கன் விளைந்தி ருக்கும். மறுபுறத்தில் மிளகாய், கத்தரி, வெண்டி, பாவல் என்று பலதையும் உள்ளடக்கிய மரக்கறித் தோட்டம். அடிவளவில் இருபது முப்பது காய்த்துக் குலுங்கும் தென்னைகள். தென்னைகளின் நிழல் கூடாரத்தின் ஒரு புறத்தில் ஆங்காங்கே அமைக்கப்பட்ட தொழுவங்களில் தனித்தனிப் பட்டிகளாக மாடுகளும் ஆடுகளும். வெறு வெளிகளாக வீட்டைச் சூழ்ந்திருந்த வெயில்படும் பகுதிகளில் பெரிய பினாட்டுப் பாய் விரித்து காயப்போடப்பட்டிருக்கும் மிளகாய்ப்பழங்கள் காயும் மணம் மூக்கில் எரிவைத்தரும். வளவு முழுவதும் அந்தந்தப் பகுதியைப் பராமரிக்கும் வேலையாட்கள். வட்டவிதானையாரின் வீடு ஒரு பண்ணை வீடு!

வட்டவிதனையார் பல்வேறு விசயங்களுக்குப் பஞ்சாயத்துப் பண்ணுவார். தங்கள் பிரச்சினை தீர்க்கச் சந்திக்க வருபவர்கள் தேவையைச் சொல்லி அனுமதி பெற்றுத்தான் கிளிசீறியா வேலியைத் தாண்டி உள்ளே வரமுடியும். வட்டவிதானையாரிடம் வரும் பிரதான 'கேஸ்' ஆடுமாடுகள் பற்றியதுதான். கட்டையிலிருந்து அவிழ்த்து விடப்பட்ட ஆடுமாடுகள் விரும்பிய இடமெல்லாம் மேயும். மாடுகளுக்குத் தண்ணீர் வைக்கவும் பிண்ணாக்குக் கரைத்து வைக்கவும்தான் அவிழ்த்துவிட்டவர்கள் தேடி வருவார்கள். மற்றபடி ஆடுமாடுகள் சுதந்திரமாயும் சுயாதீனமாயும் மேய்ந்து திரியுமாறு விடப்படும். பொழுதுபடும் வேளைகளில் ஆடுமாடுகள் தாமாகவே வீட்டுவாயிலுக்கு வரும். பிடித்துக்கட்டி பால் கறக்கத் தயாராவார்கள். சுதந்திரமாக மேயும் கால் நடைகள் மேய்ச்சல் ஆர்வத்தின் மேலீட்டால் கால்போகிற போக்கிற்குப் போவதும் உண்டு.

அப்படிப் போனால்கூட மாலையில் தம்பாட்டில் திரும்பிவராமல் விடுவதில்லை. வாடிக்கையாக பால்வாங்க வருபவர்கள் வருவதற்கு முன்னர் சொல்லி வைத்தாற்போல் வீடுவந்து சேர்ந்துவிடும் 'பங்சுவாலிட்டி' அவற்றுக்குத் தெரிந்திருந்தது!

மாலைவேளையில் ஆடுமாடுகள் வீட்டுக்குத் திரும்பி வரவில்லையென்றால் அடுத்தநாள் வட்ட விதனையாரிடமிருந்து அழைப்பு வரும் என்று அவர்கள் தீர்மானித்துவிடுவார்கள். வேலையாட்களில் ஒருவரை அனுப்பி ஆடுமாடுகளின் உரிமையாளர்களை வருமாறு கட்டளை அனுப்பிவைப்பார் வட்டவிதானையார்.

மேய்ச்சல் ஆர்வத்தால் ஆடுமாடுகள் சில சமயங்களில் தனிப்பட்டவர்களின் வீடுகளின் வேலிப் பொட்டுகளின் வழியாகச் சென்று வீட் டுத் தோட்டங்களையோ அல்லது வீட்டில் வளர்க்கும் பயன் தரு மரங்களையோ பதம்பார்த்துவிடும்.

அ.முத்துலிங்கத்தின் கதையில் வரும் அம்மாவின் பாவாடையைத் தின்ற மாட்டைப்போல அனாயசமாக மேய்ந்துவிட்டுப் போகும். மாடுகள் தனிப்பட்டவர்களின் வீடுகளிலுள்ள பயிர் பச்சையை மாத்திரமன்றி சிறியளவில் தோட்டங்களாக ஊரில் செய்யப்படும் பயிர்களையும் மேய்ந்து ஏப்பம்விட்டுவிடும். அந்த வேளைகளில் வீட்டுக்காரர்களும் தோட்டக்காரர்களும் ஆடுமாடுகளைப் பிடித்து தங்கள் வீட்டுவளவில் கட்டிவைத்துவிடுவார்கள். சேதம் அதிமாயின் கோபம் மேலிட ஆடுமாடுகளைப் பிடித்து கொறகொறவென்று இழுத்துக் கொண்டுபோய் வட்டவிதானையார் வீட்டில் கட்டிவிட்டு நீதி கேட்பார்கள். அடிக்க ஆராய்ச்சி மணி இருப்பதில்லை! பயிரழிவின் பெறுமதியைக் கணித்து நட்டஈட்டின் அளவை நிர்ண யித்துக் கொண்டு கால்நடை உரிமை யாளருக்கு 'அழைப் பாணை' அனுப்பிவைப்பார்.

விழுந்தடித்துப் போகின்ற உரிமையாளருடன் தன் குரலை இறுக்கமாக்கிப் கண்டிப்பாகப் பேசுவார். பயிரழிவுக்குட்பட்டவரின் சார்பில் குற்றம் சுமத்துவார். நட்டஈட்டுத் தொகையைக் கூறி அதைத் தம்முன்னிலையில் செலுத்துவதற்கான காலாவகாசத்தையும் கொடுப்பார். குற்றமிழைத்த ஆடுமாடுகள் கறவைகளாக இருந்தால் உள்நோக்கத்தோடு நட்டஈட்டுத் தொகையை சற்று அதிமாகவே சொல்லிவைப்பார்.

தொகை அதிகமானால் செலுத்த நாள் எடுக்கும். நாள் எடுக்குமானால் வலம்புரியாரின் வேலைக்காரர்களுக்கு புதிய ஆடுமாட்டில் பால் எடுக்கும் வேலையும் மேலதிகமாக இருக்கும்! சில ஆடுமாடுகள் குறித்த காலக்கெடுவைத் தாண்டியும் வட்ட விதனையார் வீட்டில் நின்று பால் கறக்கும். விதானையாரின் மனைவி தயிர் போடத் தொடங்கிவிடுவாள். பின்வளவுத் தொழுவத்தில் நிற்கும் ஆடுமாடுகளில் சில காலக்கெடுவைக் கடந்து பல நாட்கள் சென்றவை என்ற கதையும் அரைசல் புரசலாக இருந்தது!

# 9 இற்கான கவிதைகள்



விலங்கிடப்பட்டு நீ உள்ளே
விலாங்குகளிடம் அகப்பட்டு
விலங்குகளாய் நாம் வெளியே
விளங்கிக்கொள் - தமிழா
எம் பார்வையில் நீ கைதி
உன் பார்வையில் நாம் கைதி
உலகிற்கு சொல்வோம் ஒரு செய்தி
மாறட்டும் தமிழன் தலைவிதி

*இ.சிவசிறிதரன்,*
*அல்பா மிக்சர் கடை, சங்கானை*

இளைஞனே!
போகும் பாதையில்
தடைகள் இருக்கலாம் – அவை

தடைகள் அல்ல, தடங்கள்
தகர்த்து நீ முன் செல்
தரணியில் தன்னம்பிக்கையுடன்.

*வி.விசாகன், ஏரம்பு வீதி,*
*மீசாலை மேற்கு*

வீண் வார்த்தை பேசி விடிந்தது - நம்
வாழ்க்கை, இப்போ நோய் ஒன்று வந்து
ஊமையாக்கி போயிற்று
அனுமதி இன்றி அலைந்து திரிந்த
நாம் இப்போ முடங்கி இருக்கிறோம்
விடுதலைக்காக.

*ETP சரூபன்.S*
*சங்கரத்தை*

**பரிசு பெறும் கவிதை**

ஆட்சி மாற்றத்தின்
தோற்றமோ இக்காட்சி
காற்று மாறியது காண் - விச
நாற்று மாறவில்லை ஏன்
நேற்றோடு போனது
நிமிர்ந்த எம் வாழ்வு - இதன்
சாட்சியாக நீயே
காட்சி தருகிறாய்

*சி.பாவனா,*
*யா/அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை.*

வாய்க்குச் சிறை
வாழ்விடத்திற்குச் சிறை
வையகம் முழுதும் சிறை
வைத்தது ஒரு சிற்றுயிர்.
கொரோனா என்பதே அதன்
கொடிய பெயர்!

பரணிகன்.
சென். ஜோன்ஸ் கல்லூரி

வாழ வழியும் இன்றி
வாதாட வாய்ப்பும் இன்றி
வாய் மூடி வரம்கேட்டு
வருஷக் கணக்காய்
தவமிருக்கும்
வரலாற்று நாயகனோ
இவன்...

*க.தில்லை, மட்டுவில்*

பத்துத் திங்கள் நாம்
அன்னையின் சிறையில்
என்ன ஒரு நிம்மதி அங்கே!
எங்கே தேடியும் கிடைக்காத நிம்மதி


இன்று கொரோனா நோயால்
ஆயுள் கைதி போன்று வீட்டிலே...
மீறி தப்ப முயன்றால் மீளாத
துன்பத்தில் வீழ்வோம்

*மோ.ஜெனனி*
*உருத்திரபுரம்*

தனிமைப்படுத்தப்படடேன்
தன்னம்பிக்கை இழக்கவில்லை
முகக் கவசம் அணிந்து
முடக்கப்பட்டவன் நான்...
ஊர் உலகு அடங்க
ஊமையாய் பூட்டினுள்ளே
வெளியே நோயின் அச்சம் – இனி
வெல்வோம் புதுமனிதர்களாய்

*சிவரம்யா, யாழ்ப்பாணம்.*

# மௌன மொழி 10



தனிமை என்ற உணர்வு!
வெறுமை என்ற வெறுப்பு!
கனவுகளுடன் கைகோர்த்து – வாழ்ந்த
உன் வாழ்க்கையில்...
குற்றம் செய்யா குற்றவாளியாய் – உன்னை
கூண்டில் அடைத்தனரோ? சோர்ந்து போகாதே...
விழித்திடு உன் விடியலைத் தேடி
நம்பு உன் நம்பிக்கையை அல்ல.
உன்னைப் படைத்த உண்மையான கடவுளை...

*தவரூபன் ஜினுஷா, ஸ்ரான்லி கல்லூரி, தரம் 10 B.*

தனிமைப்படுத்தல் சிறைக்குள்
வாடும் மனிதா!
விஞ்ஞானத்தில் உச்சம் கண்ட
உன்னால் என்ன பயன்
இன்று நம் உலகைப் புரட்டி எடுக்கும்
கொடிய கொரோனாவிலிருந்து உன்னால்
தப்ப முடியவில்லையே

*சுப்பிரமணியம் ஜெயரூபன்,*
*பருத்தித்துறை*

மனமிங்கு சோகமாய்
குற்றங்கள் காரணமாய்
ஏதோ ஒரு காரணத்தால்
என்னை நான் தரம் தாழ்த்தி
எங்கோ என் அலட்சியத்தால்
கை விட்டேன் என் இலட்சியத்தை
சிலகாலம் அங்கே நான் தாய் வயிற்றில்
ஒருகாலம் இங்கே என் தலைகயிற்றில்

*ரமணன் கோபிசன்,*
*யா/மகாஜனக் கல்லூரி,தரம் 9*

கறையின்றி- மன
நிறைவுடன்- போர்ப்
பறைசாற்றி
மறையின்றி
துறை பல கொண்டு
வாழ்ந்தது ஒரு காலம்- வீண்
கறை சுமந்து சிறை
செல்வது நிகழ்காலம்

*சி.விஜயராணி, அராலி மத்தி*
*வட்டுக்கோட்டை*

*ஓடும் நீரோடையாய்*
*சல சலத்து சங்கீதமிசை*
*தேங்கி விட்டால் நீ*
*குப்பை போடும் குட்டையாகி விடுவாய்*
*தவறுகள் தவிர்த்திடு*
*தனி வழி நடந்திடு*
*எததடை வரினும்*
*அத்தடை உடைத்தெறி*

பிரபாகரன் வேதிகா.

இந்த ஒளிப்படத்தைப் பார்த்ததும் உங்கள் சிந்தனையில் உதிக்கும் கவிதைகளை 8 வரிகளுக்கு மேற்படாமல் உடனே எழுதி அனுப்புங்கள். மிகச் சிறப்பான ஒரு கவிதைக்கு ரூபா. 1000/ பரிசாகக் காத்திருக்கிறது: பாராட்டுப் பெறும் ஏனையவை மௌனமொழி பகுதியில் பிரசுரமாகும்.

**உங்கள் கவிதைகள் எங்கள் கதவைத் தட்ட வேண்டிய கடைசி நாள்: 28.08.2020**

கவிதைக்கு பரிசு 1000/=

அனுப்ப வேண்டிய முகவரி:
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
மின்னஞ்சல் முகவரி: *uthayansanjeevi@gmail.com*

0773165555




# புதிர்மலை மர்மங்கள்

எந்தப் பாதையை நோக்கி ராகு கைகாட்டினானோ, அதற்கு எதிரான பாதையில் வருமாறு துவாரகன் சைகை காட்டிவிட்டு, தன்பாட்டில் முன்னே விரைந்தான்.

“இப்படித் தவறான பாதையில் செல்வதற்காகவா இப்படி மூளையைக் கசக்கி யோசித்தோம்?' என்று பரிவழுதி தனக்குள் கேட்டுக்கொண்டான். ஆனாலும் துவாரகன் மீதிருந்த நம்பிக்கையால் வேண்டாவெறுப்பாக அனைவரும் அவன் காட்டிய பாதையால் சென்றனர். ஒரு காத தூரம் நடந்தபின் அவர்கள் கண்டகாட்சியை அவர்களாலேயே நம்ப முடியவில்லை

ஆம், அவர்கள் கண்ணெதிரே ஒரு செழிப்பான நகரம் . இதுவரை அவர்கள் அடைபட்டுக் கிடந்தகுகை முடிவுக்கு வந்திருந்தது. அந்தப் பயங்கரக் குகையில் இருந்து தங்களை விடுவித்த துவாரகனை எல்லோரும் இறுக அணைத்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

7 புதிர்

“துவாரகா, உண்மையிலேயே நீ சிறந்த விவேகிதான். எவராலும் அவிழ்க்க முடியாத இந்தப் புதிரை நீ சுலபமாகக் கண்டுபிடித்து எல்லோரையும் காப்பாற்றிவிட்டாய்” என்று காக்கைகுப்தன் துவாகரனைப் புகழ்ந்து பாராட்டினான்.

துவாரகன் இதழோரம் புன்னகையை படரவிட்டபடி,

“ இதொன்றும் அவ்வளவு கடினமான புதிரல்ல. கொஞ்சம் வித்தியாசமாக யோசிக்க வேண்டும்” என்றான்.

“சரி, நீ ராகுவிடம் என்ன கேள்வி கேட்டாய்? ஏன் அவன் சொன்ன பாதைக்கு எதிரான பாதையில் வந்தாய்?” என்று ஆர்வத்தை அடக்கமுடியாமல் இளஞ்சந்திரன் கேட்டான்.

> **சமையல்வாசனை இளவரசர்களின் மூக்கைத் துளைத்தது. நால்வரும் அந்த வாசனையைப் பின் தொடர்ந்தனர். ஆனால் அது அவர்களுக்காக வைக்கப்பட்ட பொறி என்பதையும், நிகழப்போகும் ஆபத்தையும் அப்போது அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.**

துவாரகன் விளக்கத் தொடங்கினான்.

“ இருவரில் ஒருவன் உண்மையைத் தவிர வேறேதும் சொல்லமாட்டான்,. மற்றவனோ பொய்யை மட்டுமே சொல்வான். அவர்களில் யார் உண்மை சொல்பவன், யார் பொய் சொல்பவன் என்று எங்களுக்குத்தான் தெரியாதே தவிர, ராகுவுக்கும் , கேதுவுக்கும் நன்கு தெரியும் தானே. அதனால் நான் ராகுவிடம் சென்று, ' புதிர்மலைக்குச் செல்லும் சரியான பாதை எதுவென்று கேதுவிடம் கேட்டால் அவன் எந்தப் பாதையைக் காட்டுவான்?' என்று கேட்டேன். அதற்கு ராகு ஒரு பாதையைக் காட்டினான். ஒருவேளை ராகு பொய் சொல்பவனாக இருந்தால், உண்மை சொல்லக்கூடிய கேது எந்தப் பாதையைக் காட்டியிருப்பானோ அதற்கு எதிரான பாதையைத் தானே காட்டுவான். அதே போன்று கேது பொய் சொல்பவனாக இருந்தால் அவன் தவறான பாதையைக் காட்டியிருப்பான் என்பதால், உண்மை சொல்லக்கூடிய ராகுவும் என் கேள்விக்கு தவறான பாதையையே காட்டுவான், எப்படிப் பார்த்தாலும் தவறான பாதையைத்தான் ராகு காட்டுவான். எனவேதான் அவன் சொன்ன பாதைக்கு எதிர்ப்பாதையைத் தெரிவு செய்தேன்' என்று அந்தப் புதிரின் ரகசியத்தை உடைத்தான் துவாரகன்.

“ பலே,பலே!, இப்படியெல்லாம் யோசித்திருக்கிறாயே, நீ கெட்டிக்காரன் தான்.” என்று பரிவழுதியும் தன் பங்குக்கு துவாரகனைப் புகழ்ந்தான்.

இவர்கள் இப்படி உரையாடிக் கொண்டிருக்கையில், நகரத்து மாந்தர்கள் இவர்கள் நால்வரையும் விநோதமாகப் பார்த்தபடி சென்று கொண்டிருந்தனர்.

“ நீங்கள் இந்த நகரத்துக்குப் புதியவர்கள் தானே அதனால்தான் இப்படிப் பார்க்கிறார்கள். வாருங்கள் முதலில் உணவருந்திவிட்டு புதிர்மலைக்குச் செல்வது பற்றி ஆலோசிப்போம்” என்று காக்கைகுப்தன் கூறினான்.

அப்படி அவன் சொல்லி முடிக்கமுன்னர் , சமையல்வாசனை இளவரசர்களின் மூக்கைத் துளைத்தது. நால்வரும் அந்த வாசனையைப் பின் தொடர்ந்தனர். ஆனால் அது அவர்களுக்காக வைக்கப்பட்ட பொறி என்பதையும், நிகழப்போகும் ஆபத்தையும் அப்போது அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.

சமையல்வாசனை இளவரசர்களின் மூக்குகளைத் துளைத்தது. நால்வரும் அந்த வாசனையைப் பின்தொடர்ந்தனர். ஆனால் அது அவர்களுக்காக வைக்கப்பட்ட பொறி என்பதையும், நிகழப்போகும் ஆபத்தையும் அப்போது அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.

(புதிர்கள் தொடரும்)

சஞ்சீவி

# மாணவர் கழகம்

61



**பெயர்:** அசோக்குமார் ரஜிஷன்
**முகவரி:** இல. 254, பாரதி நகர், யோகபுரம்
**பி. திகதி:** 2009.07.01
**பாடசாலை:** மு/ யோகபுரம் ம.வி.

62



**பெயர்:** சந்திரகுமார் பவிதரன்
**முகவரி:** மாசிவன் சந்தி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி
**பி. திகதி:** 2008.09.10
**பாடசாலை:** யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

63



**பெயர்:** பாலச்சந்திரன் பாணுஜன்
**முகவரி:** சுஜீவா வீதி, பாலிநகர், வவுனிக்குளம்.
**பி. திகதி:** 2008.01.12.
**பாடசாலை:** மு. பாலிநகர் ம.வி.

64



**பெயர்:** நிந்துஜா திலீபன்
**முகவரி:** கரந்தன் மேற்கு, நீர்வேலி.
**பி. திகதி:** 2007.06.23
**பாடசாலை:** வேம்படி பெண்கள் உ.த. பாடசாலை.

65



**பெயர்:** தேவராசா கோகுலரூபன்
**முகவரி:** இராஜ வீதி, நீர்வேலி மேற்கு.
**பி. திகதி:** 2010.06.23
**பாடசாலை:** யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.

66



**பெயர்:** சுதாகர் கார்த்திகன்
**முகவரி:** பலாலி வீதி, கோண்டாவில், கிழக்கு
**பி. திகதி:** 2008.12.04
**பாடசாலை:** யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

67



**பெயர்:** தரண்யா சுதாகர்
**முகவரி:** பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு.
**பி. திகதி:** 2001.12.05
**பாடசாலை:** யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

68



**பெயர்:** ஜெயக்குமார் அனுசாந்
**முகவரி:** 84/1, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2011.12.23
**பாடசாலை:** யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

69



**பெயர்:** ஜெயானந்தன் நவாசினி
**முகவரி:** 83/16, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2009.12.14
**பாடசாலை:** யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

70



**பெயர்:** ஜெயானந்தன் நவாஜினி
**முகவரி:** 83/16, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
**பி. திகதி:** 2009.12.14
**பாடசாலை:** யாழ். இந்து மகளிர் கல்லூரி.

சஞ்சீவி

## மாணவர் கழகம்

1. முழுப்பெயர்: ..............................
2. முகவரி: ..............................
..............................
3. பிறந்த திகதி: ..............................
4. கல்வி கற்கும் பாடசாலை: ..............................
5. கற்கும் தரம்: ..............................
6. தொலைபேசி இலக்கம்: ..............................

.............................. ..............................
மாணவர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

*அனுப்ப வேண்டிய முகவரி:*
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

சிக்மலிங்கம் றெஜினோல்ட்

> புலம்பெயர் தேசங்களிலிருந்து கொண்டு றிமோட் கொன்றோலில் அரசியல் செய்யாமல், முதலீடுகளைச் செய்து தங்களை வளப்படுத்திக்கொள்வதற்குப்பதிலாக மற்றவர்கள் வாழ்வதற்கும் வளர்வதற்குமாக உதவிக் கொண்டிருப்பது சாதாரணமானதல்ல. எம்முடைய சமூகத்துக்கு இந்த மாதிரியான பங்களிப்புகளே தேவை.

# இந்த நிலத்தில் இன்னும் ஈரம்

லண்டனில் இருக்கும் நடராஜா விஜயேந்திரன் கிளிநொச்சியில் கோழி வளர்க்கிறார். அதுவும் ஊர்க்கோழிகளை. சிறிய அளவில் தொடங்கப்பட்ட இந்த முயற்சி, இப்பொழுது மெல்ல மெல்ல வளரத் தொடங்கியுள்ளது. எதிர்காலத்தில் இந்தக் கோழி வளர்ப்பு பல்கிப் பெருகிப் பெரியதொரு கட்டமைப்பாக, வலையமைப்பாக மாறும் என எதிர்பார்க்கலாம். அதற்கான திட்டமிடலுடனேயே அந்த முயற்சி நடந்து கொண்டிருக்கிறது.

இந்த முயற்சியில் ஈடுபடும்போது தான் "இந்த மாதிரி ஊர்க்கோழிகளை வளர்ப்போருக்கான ஒரு சங்கத்தை ஆரம்பித்தால் நன்றாக இருக்குமே. கோழி வளர்ப்பில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தருவதற்கு, கோழிவளர்ப்பை மேலும் ஊக்குவிக்க, கோழிகளை வளர்ப்போர் ஒருங்கிணைந்து செயற்பட, வளர்க்கும் கோழிகளைச் சந்தைப்படுத்த, அவற்றின் முட்டைகளைச் சீரான



விலையில் விற்பனை செய்ய, கோழிகளுக்கான தரமான தீவனத்தைப் பெற, அதைச் சீரான விலையில் வாங்க... இப்படி எல்லாவற்றுக்கும் அந்தச் சங்கம் பயன்படும் என்ற எண்ணம் ஏற்பட்டது. இதற்கான ஐடியாவைச் சொன்னது, காவேரிக்கலாமன்ற இயக்குநர் வண. யோசுவா அடிகளார்.

"ஏற்கனவே கால்நடை வளர்ப்போர் சங்கம் என்று பொதுவானதொரு அமைப்பு இருந்தாலும், ஊர்க்கோழி அல்லது நாட்டுக்கோழி வளர்ப்புக்கென்று தனியான சங்கமாக இருப்பது நல்லது. அப்படியிருந்தால்தான் இந்தக் கோழி வளர்ப்பைச் சிறப்பாகச் செய்வதற்கு அது கூடிய ஊக்கத்தைத் தரக்கூடியதாக இருக்கும்" என்றார் யோசுவா.

யோசுவா அவர்கள், ஏற்கனவே ஊர்க்கோழிகளையும் காடைகளையும் வளர்த்துக் கொண்டிருக்கிறார். காடை வளர்ப்பில் அவர் ஒரு சாதனையாளர் என்றே சொல்ல வேண்டும். தான் மட்டுமல்லாமல், வேறு ஆட்களையும் காடை வளர்ப்பில் ஈடுபடுத்தி வருகிறார். அவரே முன்வந்து காடைகளைக் கொடுத்து வளருங்கள் என்று காடைகளை வளர்க்கும் முறையையும் சொல்லிக் கொடுத்து ஊக்கப்படுத்துகிறார். காடைகள் நாளொன்றுக்கு இரண்டு முட்டைகளை இடும். ஐந்து காடைகளை வளர்த்தால் பத்து முட்டைகள். காடை இறைச்சிக்குத் தனி ருசி. தனி மார்க்கெற்.

இதைவிட ஊர்க்கோழிகள் எமது அடையாளத்தின் ஓர் அங்கம். எங்கள் வாழ்க்கைச் சூழலுக்குப் பொருத்தமானவை மட்டுமல்ல, எங்களுடைய பண்பாட்டோடும் கலந்திருப்பவை. அதிலொன்று கோழிச் சண்டை. எம்முடைய கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலனும், தனுஷும் இணைந்து நடித்த "ஆடுகளம்" திரைப்படம் இப்பொழுது உங்களுடைய நினைவில் எழலாம். இன்னொன்று ஊர்க்கோழி இறைச்சியோடிணைந்த விருந்தோம்பல். இன்னொன்று ஊர்க்கோழிக்கறி அல்லது கோழிப்புக்கை.

விடுதலைப்புலிகளுக்கும் கோழிப்புக்கைக்கும் நல்லதொரு பிணைப்பு. தைப் பொங்கல் என்பது தமிழரின் திருநாள். அந்தத் திருநாளில் கோழிப்புக்கையே ஆக்கிப் படையிடுவது என்று சொல்லி, ஒரு கோழிப்புக்கைத் திருநாளைப் புலிகள் வன்னியில் கொண்டாடினார்கள். இது பின்னர் சற்று வில்லங்கமான விசயமாக மாறிய கதையும் உண்டு. நாடு கிடைத்ததற்குப் பிறகு நம்முடைய பண்பாட்டின் வேர்களைத் தேடுவதைச் செய்வோம். இப்போது சமூக நடைமுறைகளை அதிரடியாகக் குழப்ப வேண்டாம் என்று இதைச் சற்று ஒத்திப் போட்டனர் புலிகள். இதை விட வெவ்வேறு விதமான ஏராளம் ஊர்க்கோழி வகைகள் - நாட்டுக் கோழிக்கதைகள் உள்ளன. இவையெல்லாம் கூடியிருப்பதும் வளர்வதும் கோடி அழகு. எனவே "நாட்டுக் கோழிச் சங்கம்" என்பது எமக்கான நல்லதொரு ஏற்பாடே என்றால் யாருக்குத்தான் மகிழ்ச்சி வராது.

இதெல்லாம் விஜயேந்திரனுக்குப் பெரிய உற்சாகத்தைக் கொடுத்துள்ளன. விஜயேந்திரன் கோழி வளர்ப்பு, காடை வளர்ப்பு, இயற்கை வேளாண்மை போன்றவற்றில் ஆர்வமுள்ள பேர்வழி. லண்டனிலேயே காடை வளர்த்திருக்கிறார். சிறிய அளவில் இயற்கை வேளாண்மையில் ஈடுபட்டிருக்கிறார். ஆனால், அது பொழுது போக்காக. கிளிநொச்சியில் கோழி வளர்ப்பது அப்படியல்ல. வாழ்வாதாரத்துக்காக.

இதிலென்ன புதினமிருக்கிறது, லண்டன் போன்ற வெளிநாடுகளில் இருக்கும் ஆட்கள்தானே இங்கே நாட்டில் - ஊரில் - தொழில்களைச் செய்கிறார்கள். எரிபொருள் நிரப்பு நிலையங்கள், பெரிய பண்ணைகள், ஹோட்டல்கள், உணவு விடுதிகள், பல்பொருள் அங்காடிகள், மதுச்சாலைகள் போன்றவற்றில் முதலீடுகளைச் செய்திருக்கிறார்கள். வாகனங்களை எடுத்து வாடகைக்கு ஓட விட்டிருக்கிறார்கள். காணிகளைக் கொள்வனவு செய்து 'றியல் எஸ்ரேட்'டில் முதலிட்டிருக்கிறார்கள். இப்படி அங்கிருந்து கொண்டே இங்கே உழைத்துக் கொண்டிருக்கும்போது, லண்டனில் இருக்கும் ஒருவர் வாழ்வாதாரத்துக்காக ஊர்க்கோழி வளர்த்துக் கொண்டிருக்கிறார் என்றால்..!

விஜயேந்திரன் கோழிவளர்ப்பது தன்னுடைய வாழ்வாதாரத்துக்காகவோ லாபத்துக்காகவோ இல்லை. வறிய குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் அவர்களுடைய கல்வி மற்றும் வாழ்வாதாரத்துக்காகவுமே. இதனால், இந்தக் கோழி வளர்ப்பை அந்தக் குடும்பங்களைக் கொண்டே செய்விக்கிறார். இதற்கான ஊக்குவிப்புகளைத் தானும் தன்னுடைய நண்பர்களுமாக இணைந்து செய்து கொண்டிருக்கிறார். கோழி வளர்க்கக் கூடிய, அதில் ஆர்வமுள்ள குடும்பங்களைத் தெரிவு செய்து அதற்கான நிதியுதவியை வழங்குகிறார்கள். இந்த நிதியை பொருத்தமான முறையில் பயன்படுத்துவதற்கு ஒரு கண்காணிப்பு மற்றும் வழிகாட்டல் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்படி, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் கோழி வளர்ப்பில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இந்தக் கோழி வளர்ப்பின் மூலம் ஒரு தொடர்ச்சியான வருமானத்தையும் முன்னேற்றத்தையும் இந்தக் குடும்பங்கள் பெற வேண்டும் என்பதே திட்டத்தின் நோக்கம். அதைச் சாத்தியப்படுத்தும் வகையில் அதற்கான கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டமைப்பானது, உருவாக்கப்படுகின்ற ஊர்க்கோழி வளர்ப்போர் சங்கத்தோடு இணைந்து செயற்படலாம். விஜயேந்திரனைப்போல எண்ணமுள்ள இன்னொருவர் ஆஸ்திரேலியா - கன்பராவில் இருக்கும் யோகன். 1980 களில் ஈழப்போராட்டத்துக்கு முக்கியமான கலைப்பங்களிப்பை வழங்கிய "மண் சுமந்த மேனியர்" என்ற நாடகத்தில் நடித்தவர் இந்த யோகன். பின்னர் ஏற்பட்ட சூழலால் நாட்டை விட்டு இடம்பெயர்ந்தாலும் தாயகத்தில் உள்ள பாதிக்கப்பட்டோரையும் வறிய நிலையில் அவதிப்படுகின்றவர்களையும் பராமரித்துக் கொண்டிருப்பவர்.

யோகனுடைய ஆர்வம் மாடு வளர்ப்பு. மாடு வளர்ப்பில் ஈடுபடுவதற்காக யோகன் செய்த உதவியினால் சில பிள்ளைகள் ஒழுங்காகப் படித்துக் கொண்டிருக்கிறார்கள். சில குடும்பங்கள் ஒழுங்காகச் சாப்பிடக்கூடியதாக உள்ளது. இப்படியான உதவிகளைச் செய்யும் பலர் உள்ளனர். சிலர் மாடு வளர்ப்புக்கு உதவிகளைச் செய்கின்றனர். சிலர் தோட்டம் செய்வதற்கு. சிலர் சிறிய தொழில்முயற்சிகளில் ஈடுபடுவதற்கு. சிலர் மருத்துவத்துக்கென. சிலர் கல்விக்காக. இப்படிப் பல வகையில்.

இவர்களுடைய இந்தப் பங்களிப்புகள் முக்கியமானவை. பாராட்டப்படவும் நன்றி சொல்லப்படவும் வேண்டியவை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோரைத் தாங்கி நிறுத்துகின்றவை என்ற அடிப்படையில் இவை மிக முக்கியமானதொரு வரலாற்றுப் பணி, காலப்பங்களிப்பு. "இடுக்கண் களைவதாம் நட்பு, அதுவே நற் பணி" என்பதற்கமைய தங்களால் முடிந்த உதவிகளைச் செய்து சமூகத்தைப் பலப்படுத்துகிறார்கள். உக்கிப் போயிருக்கும் தமிழ்ச்சமூகத்துக்கு உயிரூட்டிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் இதுதான் இனப்பற்று. சமூகப்பற்று. மனித நேயமாகும். புலம்பெயர் தேசங்களிலிருந்து கொண்டு 'றிமோட் கொன்றோலில்' அரசியல் செய்யாமல், முதலீடுகளைச் செய்து தங்களை வளப்ப

(11ஆம் பக்கம் பார்க்க)

# பெண்மையை புரிந்து கொள்வோம்

ம.பா.மகாலிங்கசிவம்



தமிழிலக்கியப் பரப்பில் பெண்ணுரிமை தொடர்பான சிந்தனைகள் 19ஆம் நூற்றாண்டிலிருந்தே முளைவிடத் தொடங்கி விட்டன. ஈழத்துக் கவிஞர்களான நி.த.சரவண முத்துப்பிள்ளை, பாவலர் துரையப்பா பிள்ளை மற்றும் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் பெண்ணியச் சிந்தனைகளுக்கு வித்திட்டோராகக் காணப்படுகின்றனர். இவர்களது கவிதைகளில் ஆண் - பெண் சமத்துவம்,பெண்விடுதலை, கற்பு நிலை என்று சொல்ல வந்தால் இரு தரப்பாருக்கும் பொதுவாக வைக்கும் நிலை,பெண் கல்வி,பெண்களின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் அளித்தல் என்பவை விதந்து கூறப்பட்டன. பாரதிதாசன் மேலும் ஒருபடி மேலேசென்று விதவை மறுமணத்தையும் பல கவிதைகளில் வலியுறுத்தினார். இவையெல்லாம் ஆண் கவிஞர்கள் பெண்களுக்காகக் குரல்கொடுத்த நிலையின் வெளிப்பாடுகள்.

ஆனால் பிற்காலத்தில் பெண்ணியச் சிந்தனை வளர்ச்சியடைந்து, பெண்களே பெண்களுக்காகக் குரல் கொடுக்கும் நிலை ஏற்பட்டபொழுது, ஆண்களே கற்பனை செய்து பார்க்கக் கூட முடியாத அளவுக்குப், பெண்களின் கவித்துவமும் அடிமை நிலையிலிருந்து விடுபடத் துடித்த அதீத சுதந்திர தாகமும் பீறிட்டுக் கொண்டு மேற் கிளம்பின. தமிழர்கள் மரபு என்று கட்டிக்காத்துவந்த பல பேசப்படாத விடயங்கள், இரகசியமாகப் பேசப்பட்ட விடயங்கள் பெண் கவிஞர்களால் உரத்துப் பேசப்பட்டன. ஈழத்துப் பெண் கவிஞர்களில் சங்கரி, ஆழியாள்,அனார்,ஔவை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

மதுமாஷினி ரகுபதி என்ற இயற்பெயர் கொண்ட ஆழியாள் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் ஆங்கில



விரிவுரையாளராகப் பணியாற்றியவர். தற்போது புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியாவில் வசித்து வருகின்றார். உரத்துப் பேச, துரிதம், கரு நாவு ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகளையும் ஆஸ்திரேலிய 'ஆதிக்குடிகளின் கவிதைகள்' பற்றிய மொழி பெயர்ப்பு நூலையும் தந்தவர். அவரது 'உரத்துப் பேச' என்றும் கவிதை நூலிலுள்ள 'மன்னம் பேரிருள்' என்னும் தலைப்பில் உள்ள கவிதை இங்கே தரப்படுகின்றது.

காலைப் பொழுதுகள் பலவற்றில்
வீதி வேலி ஓரங்களில்
நாற்சந்திச் சந்தைகளில்
பிரயாணங்கள் பலவற்றில் கண்டிருக்கிறேன்

நாய் கரடி ஓநாய்
கழுகு பூனை எருதாய்ப்
பல வடிவங்கள் அதற்குண்டு.

என்னை உற்றுக்கிடக்கும்
அம்மிருகம் தூயின்று
நாட்கள் பலவாகியிருக்கும்

அதன் கண்கள்
நான் அறியாததோர்
மிருகத்தின் கண்களைப் பறைசாற்றிற்று
அவற்றின் பாலைத் தாகம்
அறியாப் பாஷையை
எனக்குள் உணர்த்திற்று.

அழகி மன்னம்பேரிக்கும்
அவள் கோணேஸ்வரிக்கும்
புரிந்த வன்மொழியாகத்தான்
இது இருக்குமென
அவதியாய் எட்டிக் கடந்து போனேன்

அன்றைய அலைச்சலும்
மனக்குமைச்சலும் கூடிய
தூக்கத்தின் இடையில் - நானும்
அவள்களுக்குப் புரிந்த
அதே ஆழத்திணிக்கப்பட்ட
பாஷையைப் புரிந்து கொண்டேன்

அருகே கணவன்
மூச்சு ஆறிக்கிடக்கிறான்.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை எதிர்க்கும் தளைகளை அறுத்தெறியத் துடிக்கும் ஒரு கலைத்துவம் நிறைந்த பெண்குரல் இக்கவிதைகளினூடு வெளிப்படுகின்றது. வீதியின் வேலி ஓரங்களிலும் நாற்சந்தைச்சந்திகளிலும் "பாதுகாப்புக்கு"என்ற சாட்டில் சீருடையுடன் நின்று பெண்களை வெறித்து நோக்கும் பார்வைகளுடன் கவிதை தொடங்குகிறது.

நாய் கடி ஓநாய்
கழுகு பூனை எருதாய்ப்
பல வடிவங்கள் அதற்குண்டு

என்னும் பாடலடிகள் அந்தச் சீருடை அணிந்த மனித உருவங்களுள் வேட்டைக்காக விழித்துக் கொண்டிருக்கும் பல்வேறு மிருகங்களை இனங்கண்டு நுட்பமாகச் சித்திரிக்கின்றன.

அவற்றின் பாலைத் தாகம்
அறியாப் பாஷையை
எனக்குள் உணர்த்தியது.

இங்கு இடம்பெறம் (பாலைத்தாகம்) என்றும் சொற்றொடர் மிகவும் ஆழமான பொருளை வெளிப்படுத்தி நிற்கின்றது. தாகம் எடுப்பதும், தாகம் தீர்க்க நீரைத் தேடுவதும் சாதாரணமான விடயங்கள். ஆனால் பாலைவனத்தில் வருகின்ற தாகம் மிக மிகக்கொடுமையானது.உயிர்பிழைக்க எவ்வாறேனும் நீரைப்பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற வெறியை ஊட்டுவது. அது போலக் காம உணர்வு அனைவருக்கும் பொதுவானதொரு விடயம்தான்.

ஆனால் மனைவியரைத் தென்னிலங்கையில் விட்டுவிட்டு வந்து இங்கே பாதுகாப்பிற்காக நிற்பவர்களிடம் ஏற்படும் காம உணர்வு பாலைத்தாகம் என்னும் அடிகள் மூலம் கட்டிப்பாக வெளிப்படுத்தப்படுகிறது.

இந்தப் பாலைத்தாகம் தான் 1971 இல் ஜே.வி.பியினர் மேற்கொண்ட கிளர்ச்சியின் போது ஜே.வி.பி.பெண்கள் அணிக்குத் தலைமைதாங்கிய அழகி மன்னம்பேரியை கூட்டுப்பாலியல் வன்புணர்வு செய்து கொலை செய்யக் காரணமாகியது. 1987இல் அம்பாறையில் கோணேஸ்வரியைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியபின்னர், பெண்ணுறுப்பினுள் கைக்குண்டை வைத்து வெடிக்கச் செய்து கொல்லவும் காரணமாகியது. இவ்வாறு பாதுகாப்புப் படையினரை நோக்கியே மெல்ல மெல்லக் கட்டமைக்கப்பட்டு வந்து மன்னம் பேரியுடனும் கோணேஸ்வரியுடனும் உச்சம் பெற்று வந்த குற்றச்சாட்டு வெறுப்புணர்வு என்பவை கவிதையின் இறுதிப்பகுதியில் சடுதியாக வீட்டினுள்ளே திரும்புகின்றன.

அன்றைய அலைச்சலும்
மனக்குமைச்சலும் கூடிய
தூக்கத்தின் இடையில் நானும்
அவள்களுக்குப் புரிந்த
அதே ஆழத்திணிக்கப்பட்ட
பாஷையைப் புரிந்து கொண்டேன்
அருகே கணவன்
மூச்சு ஆறிக்கிடக்கிறான்

பாலியல் வல்லுறவு என்பது யாரே ஒருவரால் இன்னொருவர் மீது மேற்கொள்ளப்படுவது மட்டுமல்ல மனைவியின் சம்மதமில்லாமல் கணவனால் மேற்கொள்ளப்படும் உடலுறவும் கூடத்தான் என்கிறார் ஆழியாள். இந்த நிலையில், பாதுகாப்புப் படையினருடன் கணவர் மாரும் ஒரே தரத்தில் நோக்கப்படுகின்றனர். ■

# இந்த நிலத்தில்...

டுத்திக் கொள்வதற்குப் பதிலாக மற்றவர்கள் வாழ்வதற்கும் வளர்வதற்குமாக உதவிக் கொண்டிருப்பது சாதாரணமானதல்ல.

நம்முடைய சமூகத்துக்கு இந்த மாதிரியான பங்களிப்புகளே தேவை. அரசாங்கம் இன்னும் சீராக யுத்தப்பாதிப்புகளை ஈடுசெய்யாதிருக்கும்போது, அதில் ஆர்வக்குறைவாக இருக்கும்போது, நம்மவர்களே இதைச்செய்ய வேண்டும். இதற்கான ஊக்கத்தை வழங்குவது யார் என்பது நீளும் கேள்வி. யுத்தம் முடிந்து பதினொரு ஆண்டுகள் கடந்த பிறகும், இதுவரையில் இந்த மாதிரியான உதவித் திட்டங்களை ஒருங்கிணைக்கக் கூடிய கட்டமைப்பு எதுவும் முறையாக உருவாக்கப்படவில்லை. அதற்கு அரசாங்கத்தின் இடைஞ் சல்கள் நேரலாம் என்றொரு சாட்டை யாரும் சொல்லக் கூடும். இங்கே இல்லாது விட்டாலும் புலம்பெயர் நாடுகளிலாவது அதை உருவாக்கியிருக்க முடியும் அல்லவா. அப்படி நிகழாதது கவலையே. அப்படி நிகழக்கூடிய - ஒரு கட்டமைப்பை உருவாக்கக்கூடிய, அதற்குத் தலைமைப் பொறுப்பை வகிக்கக்கூடிய நம்பிக்கையான ஆளுமை, ஆற்றல் உள்ள எவரும் தென்படவில்லை என்பதே உண்மை. அரசியலில் மட்டுமல்ல இந்த மாதிரியான பொதுப்பணிக்கும் ஒரு பேராளுமை நம்மிடமில்லை என்பது கவலையே. நம்மிடம் இருப்போரெல்லாம் விட்டுக் கொடுப்புகளைச் செய்யத் தயாரால்லாத, மற்றவர்களை அங்கீகரிக்க மனமில்லாத தலைவர்களே. விருப்பு வாக்குகளுக்காகவும் தேசியப் பட்டியலுக்காகவும் அடிபடுகின்ற ஆட்களே நம்மிடம் மலிந்து கிடக்கிறார்கள்.

அண்மையில் நடந்த விருப்பு வாக்குச் சங்கதிகள் உங்கள் எல்லோருக்கும் தெரியும். தேசியப்பட்டியல் விவகாரத்தையும் அறிவீர்கள். இவ்வளவுக்கும் இவர்களெல்லாம் போராளிகளையும் அவர்களுடைய தியாகத்தையும் வாய்க்கு வாய், வார்த்தைக்கு வார்த்தை உச்சரித்துக் கொண்டிருப்போர். ஒரு சிறிய அபிப்பிராயம், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தன்னுடைய தேசியப்பட்டியலை அந்தக் கட்சியின் இளந்தலைவரான மணிவண்ணனுக்கு வழங்கியிருக்கலாம். அப்படிச் செய்யுமாறு அதனுடைய தலைவர் கஜேந்திரகுமாரிடம் கஜேந்திரன் கோரியிருக்க வேண்டும். அப்படிக் கஜேந்திரன் கேட்டிருந்தால் அது அவருடைய மதிப்பையும் மாண்பையும் மேலுயர்த்தியிருக்கும். மட்டுமல்ல, கஜேந்திரனுக்காக மணிவண்ணன் தொடக்கம் மணிவண்ணனின் ஆதரவாளர்கள் வரையில் பின்னர் வேலை செய்திருப்பார்கள். அது கஜேந்திரனின் அரசியல் எதிர்காலத்தை மேலும் சிறப்பாக்கியிருக்கும். கட்சிக்குள்ளும் நெருக்கடிகள் ஏற்பட்டிருக்காது. இளையதலைமுறை மேலும் ஈடுபாட்டோடு இயங்கியிருக்கும். ஆற்றலும் புதிய குரலையும் உடைய மணிவண்ணன் நாடாளுமன்றத்தில் செயற்படுவதற்கான வாய்ப்பும் கிடைத்திருக்கும். இதெல்லாம் நடக்கவே இல்லை. இவ்வளவுக்கும் மக்களுக்காகத் தம்மை அர்ப்பணித்த பல்லாயிரக்கணக்கான போராளிகளை நன்கறிந்தவர் கஜேந்திரன். அப்படியென்றால் அவர் போராட்டத்திலிருந்தும் போராளிகளிடத்திலிருந்தும் எதைக் கற்றார்? எதைப் பெற்றார்? என்ற கேள்வியே எழுகிறது. இப்படித்தான் ஏனையோரும். உயிரையும் வாழவேண்டிய இளமைக்காலத்தையும் மக்களுக்காகவும் மண்ணுக்காகவும் தியாகம் செய்த பல்லாயிரக்கணக்கானவர்கள் சிந்திய இரத்தம் இன்னும் காயவில்லை. அதற்குள் இந்தத் தலைகீழ் மாற்றங்கள்.

கோழி வளர்ப்புக்கும் இந்த அரசியலுக்கும் என்ன சம்பந்தம்? முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடுகிறீர்களே" என்று நீங்கள் கேட்கலாம். அரசியலின் விளைவுகளால்தான் ஏதிலிகள் உருவாகினர். அவர்களைப் பார்க்கவும் பராமரிக்கவும் வேண்டியவர்கள், அரசியல் ஆதாயங்களுக்காக அடிபடுகிறார்கள். கண்டம் விட்டுப் புலம் பெயர்ந்தோர் இதையெல்லாம் கடந்து தங்கள் அகக் கண்களைத் திறந்து உதவிக் கரம் நீண்டுகிறார்கள். இந்த நிலத்தில் இன்னமும் ஈரம் உள்ளது. சிலருடைய மனங்களில்தான் அதில்லை. ■

**கடந்த சில வருடங்களாக எந்தவொரு அரசியல்வாதிக்கும் இல்லாத அளவுக்கு மக்களிடத்தே 'மிஸ்டர் தூய்மை அண்ட் துணிச்சல்' என்ற பெயரோடு 'கெத்தாக' வலம் வருபவர் தான் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய. அரசியல் தலையீடுகளுக்கு இடமளிக்காமல் நீதியான முறையில் தேர்தல்களை நடத்தமுடியும் என்று நிரூபித்தவர் அவர். எதிர்வரும் நவம்பரோடு அவர் தன் பணியில் இருந்து ஓய்வு பெறவுள்ளார். இந்த நிலையில் கடந்த வார ஞாயிறு லங்காதீப இதழுக்கு அவர் வழங்கிய பேட்டியின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகிறது.**




நேர்கண்டவர்: பிரியந்த கொடிப்பிலி

தமிழில்: வீ.எஸ்.ரீ.


# என் அரசிய அழைக்கி

## மஹிந்த தேசப்

**கே: ள்வி:சிரமமான தேர்தல் பணி இப்போது தான் முடிவடைந்துள்ளது. தற்போது கூட உங்கள் பரபரப்பு தணியவில்லையா?**

ப: தில்: சூடு தணிய வாய்ப்பு ஏற்படவில்லை. இதுவரை ஒரு சில கட்சிகள் தமது தேசியப்பட்டியல் நியமன உறுப்பினர் பதவிக்கு எவரை நியமிப்பதென்ற முடிவை எமக்குக் கையளிக்கவில்லை. இவற்றின் மத்தியில் இடம்பெற்ற தேர்தல் தொடர்பான முறைப்பாடுகள் குறித்து ஆராய வேண்டியுள்ளது. மொத்தத்தில் இன்னமும் சிறிது காலத்துக்கு ஓய்வு கிடைக்கப் போவதில்லை.

**கே: இதுவரை இடம்பெற்ற தேர்தல்களுடன் ஒப்புநோக்கும்போது. தற்போது இடம் பெற்ற தேர்தலில் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க நேர்ந்ததாகக் கருத முடிகிறது. தற்போதைய தேர்தல் நடத்தப்பட்ட விதம் தொடர்பாக நீங்கள் திருப்தியடைந்துள்ளீர்களா?**

ப: நூற்றுக்கு நூறு வீத திருப்தி இல்லாவிட்டாலும்,நாம் எமது உச்சபட்சச் சேவையை வழங்கியுள்ளோம் என்ற உணர்வு ஏற்படுகிறது. ஆனாலும் எம்மால் நிறைவேற்ற முடியாமல் போன விடயங்கள் குறித்து கவலை உள்ளது. தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருந்த சிலருக்கு வாக்களிக்க இயலாது போயுள்ளது. வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் ஈடுபட்டிருந்த சிலருக்கும் வாக்களிப்பில் கலந்துகொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டிருந்தன. இவை குறித்து நாம் கலந்துரையாடியிருந்தோம். வாக்களிக்கத் தகுதிபெற்ற அனைவருக்கும் வாக்களிக்க வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய எமது கடமையைப் பூரணமாக நிறைவேற்றவே நாம் முயன்றோம்.ஆயினும் நடைமுறைச் சிக்கலால் அந்த இலக்கைப் பூர்த்தி செய்ய முடியாமை கவலையானதொன்றே.

**கே: கொரோனா பரவக்கூடிய நிலையிலும் பொதுத் தேர்தல் நடத்தப்பட்டமை முக்கியத்துவம் வாய்ந்ததொன்றல்லவா?**

**இம்முறை தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் எதிர்பார்க்கப்பட்டதை விட மிகக் கூடியளவான நிராகரிக்கப்பட்ட வாக்குகள் பதிவாகியுள்ளன. ஏன் இப்படி ஏற்பட்டது? உண்மையில் தற்போதும் கூட வாக்காளர்களில் பெரும்பாலானோர் தேர்தல் நடைமுறை பற்றி, குறிப்பாக வாக்களிப்பது எப்படி என்று தெளிவான புரிதல் அற்ற நிலையிலேயே உள்ளனர்.**

**கொரோனா அச்சுறுத்தலுக்கு எதிராகக் கைக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வெற்றியளித்துள்ளனவா?**

ப: வாக்களிப்பு நிலையங்களில் சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறைப்படி செயற்படுத்த எம்மால் முடிந்தது. கை கழுவும் திவரம் உட்பட சுகாதார பாதுகாப்புக்குத் தேவையான சகல பொருள்களையும் குறைவின்றி எம்மால்வழங்கமுடிந்தது. ஆனால்கொரோனா வைரஸ் பரவல் குறித்து எமது அரசியல் வாதிகள் அக்கறை செலுத்தத் தவறியமை கவலைக்குரியதொன்றே.

**கே: எதை வைத்து அப்படிக் கருதுகிறீர்கள்?**

ப: அவர்கள் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களை நடத்திய விதத்தைப் பார்த்தீர்கள்தானே? நாம் எவ்வளவு தூரம் எடுத்துக் கூறிய போதிலும் இடைவெளிபேணல் ,தனிமைப்படுத்தல் ஒழுங்குமுறை,என்பவை குறித்து அரசியல்வாதிகள் கொஞ்சமேனும் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

**கே: வாக்களிப்பு நிலையங்களின் மூலம் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை என உறுதிப்படுத்த இயலுமா?**

ப: இன்னமும் இரு வாரங்கள் கடந்த பின்னரே அது குறித்து உறுதியாக நம்பமுடியும்.இன்னமும் இரு வாரகாலத்துள் சமூக மட்டத்தில் கொரோனா நோயாளிகள் எவரும் இனம்காணப்படாவிட்டால் அது குறித்து மகிழ்ச்சியடைய முடியும்,அத்தகைய நிலையொன்று ஏற்படுமென நாம் நம்பாதவரை, தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் கலந்து கொண்ட பொது மக்கள் குறித்து எம்மால் எதுவும் உறுதிப்படுத்த இயலாது.

**கே: அரசியல் தலைவர்களது கைகளிலேயே கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பு தங்கியுள்ள நிலையில் அவர்கள் நடைமுறைவிதிமுறைகளுக்கமைய செயற்படாததேன்?**

ப: தமது பொறுப்புக்களை முறைப்படி நிறைவேற்றும் அரசியல் வாதிகள் எம்மத்தியில் இருப்பார்களானால், எமது நாடு இத்தகையதொரு இக்கட்டான நிலைக்கு உட்பட நேர்ந்திருக்குமா? தமது பொறுப்பை அலட்சியப்படுத்திச் செயற்படும் அரசியல் தலைவர்களது பாதையைப் பின்பற்றியே அவர்களது ஆதரவாளர்களும் பயணிப்பாளர்களல்லவா? இந்த நிலையில் நாடு எவ்வாறு முன்னோக்கிப் பயணிக்க முடியும்?

**கே: இத்தகைய பொறுப்பற்ற அரசியல்தலைவர்களே நாட்டு மக்களுக்கு வழி காட்டுகின்றனர் எனில் மக்கள் எப்படி சரியான முடிவெடுக்க முடியும்?**

ப: இம்முறை தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் எதிர்பார்க்கப்பட்டதை விட மிகக் கூடியள வான நிராகரிக்கப்பட்ட வாக்குகள் பதிவாகியுள்ளன. ஏன் இப்படி ஏற்பட்டது?உண்மையில் தற்போதும் கூட வாக்காளர்களில் பெரும்பாலானோர் தேர்தல் நடைமுறை பற்றி, குறிப்பாக வாக்களிப்பது எப்படி என்று தெளிவான புரிதல் அற்ற நிலையிலேயே உள்ளனர். குறித்த சில அரசியல்வாதிகள் வாக்காளர்களுக்கு அது பெற்றுத் தருவோம்,இது பெற்றுத் தருவோம் எனக் கூறினாலும் சரியாக வாக்களிப்பது எப்படி என்பது குறித்து வாக்காளர்களுக்குத் தெளிவு படுத்தியதில்லை. ஆனால் நாங்கள் எங்களால் இயன்ற அளவுக்கு வாக்களிக்கும் முறை குறித்து பல்வேறு வகைகளில் வாக்காளர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியிருந்தோம். அச்சு ஊடகங்களோ இலத்திரனியல் ஊடகங்களோ இதுவிடயத்தில் திருப்தி தரும் அளவுக்கு பொது மக்களுக்கான தெளிவுபடுத்தல்களை வழங்கியதில்லை. வேட்பாளர்களது பிரசார விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கே அவை முன்னுரிமை வழங்கிச் செயற்பட்டன.இதனாலேயே பெரும் அளவிலான வாக்காளர்கள் தெளிவின்மை காரணமாக தமது வாக்குகளைத் தவறான விதத்தில் பயன்படுத்தி செல்லுபடியற்றதாக்கி விட்டுள்ளனர்.

**கே: தேர்தல் விதிமுறை மீறல் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் இம்முறை அதிகம் பதிவாகவில்லை என்று கூறப்படுகின்றதே?**

ப: முன்னைய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் அவை குறிப்பிடத்தக்க அளவுக்கு இம்முறை குறைவானவையே. முன்னைய சந்தர்ப்பங்களைப் போன்று இம்முறை பாரதூரமான தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் பதிவாகவில்லை.சிறு சிறு வன்முறைச் சம்பவங்கள் குறித்தே முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அந்த வகையில் இம்முறை முன்னேற்றகரமான நிலையை அவதானிக்க முடிந்துள்ளது.

**கே: :தேர்தல் முடிவுகளை நீங்கள் திட்டமிட்டிருந்த விதத்தில் உரிய வேளையில் வெளியிட முடிந்ததா?**

ப: நாம் வி... களுக்க... தாமதம்... தொகுதி... மாவட்ட ரீதியி... யிடுவதில் நாம் வெ... உத்தியோகத்தர்கள்... யத்தில் பொறுப்பு... மைகளை நிறைவே...

**கே: நீங்கள் ... ஓய்வுபெறு... டுள்ளீர்கே...**

ப: உடனடி... ஓய்வுபெ... லாது. எதி... மளவில் தான் பத... இயலும். நான் தொ... வியில் நீடித்திருக்... .சேவையிலிருந்து ... வேளையில் ஓய்வு ... அல்லது அரசியல்வ... ஆகிவிடக் கூடும். ... வேண்டும் என்ற ... டும் வேளையில், ... விடுவதே மதிப்பை... ஏற்படுத்தும்.

**கே: சேவையிலி... மகிழ்ச்சி ... வாழ்க்கை ... றீர்களா?**



# ...ன்னை ...யலுக்கு ...கிறார்கள்

## ...சப்பிரிய

...நாம் விடுத்திருந்த அறிவிப்புக் ...களுக்கமைய உரிய நேரத்தில், ...தாமதமின்றி பெரும்பாலான ...தாகுதிகளின் முடிவுகளை, ...ர்தியிலான முடிவுகளை வெளி ...நாம் வெற்றிகண்டோம். எமது ...த்தர்கள் ஊழியர்கள் இது விட ...பாறுப்புணர்வுடன் தமது கட ...நிறைவேற்றி உதவியுள்ளனர்.

**...நீங்கள் உங்களது பதவிலிருந்து ஓய்வுபெறும் அறிவித்தலை வெளியிட் ...டுள்ளீர்களே?**

...உடனடியாக பதவியிலிருந்து ...ஓய்வுபெற்றுச் செல்ல இய ...லாது. எதிர்வரும் நவம்பர் மாத ...ான் பதவிலிருந்து வெளியேற ...நான் தொடர்ந்தும் இந்தப் பத ...த்திருக்க விரும்பவில்லை. ...ிருந்து ஓய்வு பெற வேண்டிய ... ஓய்வு பெற்றாக வேண்டும். ...ரசியல்வாதிகளின் நிலைபோல ... கூடும். பதவியைத் தொடர ...என்ற கோரிக்கை விடுக்கப்ப ...ளயில், பதவியிலிருந்து நீங்கி ...திப்பையும் மரியாதையையும் ...ம்.

**...சேவையிலிருந்து ஓய்வு பெறுவது ...கிழ்ச்சி தருகின்றதா? அரச துறை ...ாழ்க்கை குறித்து திருப்திய டைகி...**

**ப:** எந்தவொரு அரச பணியாளரும் ஓய்வுபெறும் சமயத்தில், இன்னமும் சிறிது காலம் சேவையாற்ற வாய்ப்பு இருந்தும் ஓய்வு பெறுகிறேனே என எண்ணுவதுண்டே தவிர திருப்தியடைவதில்லை. நான் எனது அரச பணி குறித்து மகிழ்வடைகிறேன். என்னால் நிறைவேற்ற முடியாது போய்விட்ட விடயங்கள் தொடர்பாக கவலை உள்ள போதிலும் சேவையிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

**கே: தங்களது சேவையில் விரக்தி உணர்வு ஏற்பட்டதில்லையா?**

**ப:** நான் எந்தவொரு சவாலையும் மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு செயற்பட்ட ஒருவன். எந்தவொரு செயற்பாட்டையும் விரக்தி உணர்வுடன் மேற்கொண்டதில்லை. எந்தவொருசிக்கல்நிலையில் அரச.பணியை மேற்கொண்டாலும், அதனைத் .தலைவலியாக நான் உணர்ந்ததில்லை. அவ்விதம் அதனைத் தலைவலியாகக் கருதினால் இத்தகைய பொறுப்பான அரச பணியை முன்னெடுப்பது சிரமமே.

**கே: ஓய்வுபெற்றபின்னர் ஓய்வுக்காலத்தை எவ்வாறு கழிப்பதென ஏதாவது திட்டமிட்டிருக்கிறீர்களா?**

**ப:** அரச சேவை வாழ்க்கையில் செய்ய முடியாது போகும் எந்தவொரு விடயத்தையும் ஓய்வின் பின்னர் செய்ய வாய்ப்புண்டு. விசேடமாக எனது பதவி காரணமாக எனது அரசதுறை வாழ்க்கையில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் விடுபட்டுப்போவதால் அரசியல் அடிப்படையிலான எனது கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரம் கூட கிட்டுகிறதல்லவா?

எனது தந்தையாருடன் அரசியலில் ஈடுபட்ட அவரது நண்பர்களில் எவரும் தற்போது உயிருடன் இல்லை. அவர்களது பிள்ளைகள் எனது நல்ல நண்பர்களாக உள்ளனர். அவர்களுடன் இணைந்து சில நல்ல விடயங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளேன். எனது தந்தைமார் காலத்து அரசியல் செயற்பாடுகள் இன்றைய செயற்பாடுகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டவை. எனது சகோதரர் சுனந்த தேசப்பிரியவும் நானும் வீட்டுக்குள்ளேயே அரசியலைக் கண்ட அனுபவம் கொண்டவர்கள்.

**கே: ஓய்வுக்குப் பின்னர் கொழும்பிலா அல்லது உங்களது சொந்த ஊரான அம்பலாங்கொடவிலா வசிப்பீர்கள்?**

**ப:** ஓய்வுபெற்றதும் நேராக அம்பலாங்கொடவுக்குப் போய் விடுவேன். அந்த ஊருக்கும் எனக்கும் நெருங்கிய தொடர்புண்டு. கொழும்பில் அரச பதவி காரணமாக ஏற்பட்ட நண்பர்கள்தொடர்பு மற்றும் முகநூல் ஊடான நண்பர்கள் தொடர்பே உண்டு. ஆனால் சொந்த ஊரில் உள்ள நண்பர்கள் எனது நெடுங்கால நண்பர்கள். ஓய்வின் பின்னர் எனது சொந்த ஊரின் முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் திட்டமுண்டு.

**கே: நீங்கள் தேர்தல்கள் ஆணையாளர் பதவி வகித்த வேளையில் சமூக நலநோக்கில் கொழும்பில் இடம்பெறும் பல நிகழ்வுகளில் பங்கேற்றுள்ளீர்கள். ஓய்வின் பின்னர் அத்தகைய நிகழ்வுகளில் உங்களைச் சந்திக்கும் வாய்ப்பை நாம் இழக்கவேண்டி ஏற்படவுள்ளதல்லவா?**

**ப:** ஏன் அவ்வாறு கருதுகிறீர்கள்? விசேடமாக புத்தக வெளியீட்டு நிகழ்வுகள் பலவற்றில் நான் கலந்துகொள்ளும் வழக்கம் குறித்து நீங்கள் நன்கறிவீர்கள். அம்பலாங்கொடவிலிருந்து பஸ்ஸில் ஏறினால் ஒரு மணித்தியால நேரத்தில் கொழும்பை வந்தடைந்து விடுவேன். பஸ்ஸில் மற்றும் புகையிரதத்தில் பயணிக்கும் பழக்கம் எனக்கு மகிழ்ச்சி தருமொன்று. அரச பதவிக்காக வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வாகனத்தை மிக அண்மைக்காலமாகவே பயன்படுத்தியுள்ளேன். எனவே ஓய்வின் பின்னர் என்னை கொழும்பில் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டாதென நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை.

**கே: உங்களது வாழ்க்கைச் சரிதம் குறித்து நூலொன்றை எழுத உங்களது நண்பர்கள் தயாராகி வருகின்றார்களாமே?**

**ப:** உண்மைதான்: ஆனால் அது தாமதமாகிப் போவது குறித்து அவர்கள் என்மீது கோபம் கொண்டிருக்கிறார்கள். தற்போது அதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

**கே: கடைசியாக ஒரு கேள்வி. ஓய்வின் பின்னர் தங்களுக்கு அரசியலில் பிரவேசிக்குமாறு அழைப்பு விடுவிக்கப் பட்டுள்ளதா?**

**ப:** அத்தகைய அழைப்புகள் கிடைத்தது உண்மைதான் . ஆனாலும் எனக்கு அத்தகைய எண்ணம் எதுவும் கிடையாது. எழுபது வயதை அண்மிக்கும் என்னை, அரசியலுக்கு வருமாறு அழைப்பது வேடிக்கையானது என நான் எண்ணுகிறேன். 67 வயதில் அரசியலுக்கு வந்து என்னதான் செய்ய இயலும்?

**எந்தவொரு அரச பணியாளரும் ஓய்வு பெறும் சமயம் இன்னமும் சிறிது காலம் சேவையாற்ற வாய்ப்பு இருந்தும் ஓய்வு பெறுகிறேனே என எண்ணுவதுண்டே தவிர திருப்தியடைவதில்லை. நான் எனது அரச பணி குறித்து மகிழ்வடைகிறேன். என்னால் நிறைவேற்ற முடியாது போய்விட்ட விடயங்கள் தொடர்பாக கவலை உள்ள போதிலும் சேவையிலிருந்து ஓய்வு பெறுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.**



**உடனடியாக பதவியிருந்து ஓய்வு பெற்றுச் செல்ல இயலாது. எதிர்வரும் நவம்பர் மாதமளவில் தான் பதவிலிருந்து வெளியேற இயலும். நான் தொடர்ந்தும் இந்தப் பதவியில் நீடித்திருக்க விரும்பவில்லை. .சேவையிலிருந்து ஓய்வு பெற வேண்டி-ய வேளையில் ஓய்வு பெற்றாக வேண்டும். அல்லது அரசியல்வாதிகளின் நிலை போல ஆகிவிடக் கூடும். நீங்கள் பதவியைத் தொடர வேண்டும் என்ற கோரிக்கை விருக்கப் படும் வேளையில்,பதவியிலிருந்து நீங்கி விடுவதே மதிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தும்.**

**இந்தக் கட்டுரைத் தொடர் உயர்தரத்துக்குப் பின்னரான உயர்கல்வி தொடர்பில் சில அடிப்படையான விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் வாராந்தம் வெளி வருகின்றது. எமது பிரதேச இளையவர்களைப் பொருத்தமான தடத்தில் வழிப்படுத்துவதற்கான சிந்தனைக் கிளறல்களைப் பல மட்டங்களிலும் ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையாளரின் நோக்கமாகும்.**

# உயர்தரத்துக்கு பின்னான உயர்கல்வி

10



## கவனத்துடன் அணுக வேண்டியது காலக் கடமை



○ இ.சர்வேஸ்வரா

விரிவுரையாளர்,கல்வியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கடந்த வாரம் வாய்ப்பிருந்தும் பிறரின் வற்புறுத்தலின் பேரில் விஞ்ஞானக் கல்வியைத் தவிர்க்கும் மாணவர்கள் குறித்த நிலமைகளை மேலோட்டமாக, சிந்தனைக் கிளர்ச்சி ஒன்றைத் தரத்தக்க விதத்தில் ஆராய்ந்தோம். இவ்வாரம் உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியைக் கற்க விருப்பிருந்தும் வாய்ப்பற்ற மாண வர்கள் தொடர்பான சில விடயங்கள் தொடர்பில் பேச ஆரம்பிக்கலாம்.

**விருப்பிருந்தும் வாய்ப்பற்ற மாணவர்கள்**

சில மாணவத் தொகுதியினர் விஞ்ஞானக் கல்வியை உயர்தரத்தில் தொடர விருப்புக்கொண்டவர்களாகவுள்ளபோதிலும் அதற்கான வாய்ப்புக்

## வடக்கின் விஞ்ஞானக் கல்வியை மேம்படுத்துவோம்


களைக் பெற்றுக்கொள்வதில் பெரும் நெருக்கடிகளைச் சந்திக்கின்றார்கள். குறிப்பாக அவர்கள் சந்திக்கும் நெருக்கடிகளாக பின்வருவனவற்றைப் பட்டியலிட முடியும்.

1. விஞ்ஞானக் கல்வி வாய்ப்புக்களைக் கொண்ட பாடசாலைகளின் கிடைப்பனவு
2. தரமான திறன்மிக்க பாடசாலை ஆசிரியர்களின் கிடைப்பனவு
3. விஞ்ஞானத்துறை சார் தனியார் கல்வி நிலையங்களின் கிடைப்பனவு
4. தனியார் துறைக் கல்விக்கான அதிகரித்த கட்டணங்கள்
5. பிரத்தியேக வகுப்புக்களுக்கான உயர் கட்டணங்கள்
6. குடும்பப் பின்னணி விஞ்ஞானக் கல்விக்கு உடன்படாத்தன்மை
7. விஞ்ஞானக் கல்வி மூலமான உயர்கல்வி வாய்ப்புக் குறித்த போதிய விழிப்பு ணர்வின்மை
8. எதிர்காலத்தில் விஞ்ஞானக் கல்வியின் உயர் கல்வியை, ஆங்கில மொழிமூலமாகத் தொடர வேண்டும் எனும் கருத்தற்ற அச்ச நிலை
9. தன்னம்பிக்கைக் குறைவு
10. குடும்பத்தின் மூத்த சோதரர்களின் விஞ்ஞானக் கல்வி தொடர்பான தோல்விகள்

இவ்வாறான பல கருதத்தக்க காரணங்களின் அடிப்படையில் பல மாணவர்கள் தமது உயர்தர விஞ்ஞானக் கல்வி அவாவுக்கு முளையிலேயே முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றார்கள். இத்தகைய தடைகளை மாணவர்கள் தாண்டுவதற்கான சமூகப் பொறிமுறையொன்றை வடக்கின் கல்விக் கட்டமைப்பில் ஏற்படுத்த வேண்டியது மிக அவசியமானது. விருப்பிருந்தும் விஞ்ஞானக் கல்வியை தொடர வாய்ப்பற்ற மாணவர்களை முதலில் அணுகி அவர்களை விஞ்ஞானக் கல்விநோக்கி அழைத்து வருதலே நாம் உடனடியாகச் செய்ய வேண்டிய பெரும் கல்விப் பணியாகும். மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக சற்று விரிவாக ஆராயலாம்.

**விஞ்ஞானக் கல்வி வாய்ப்புக்களைக் கொண்ட பாடசாலைகளின் கிடைப்பனவு**

வடக்கின் நகரங்களை அண்டிய பகுதிகளைத் தவிர்த்து, கிராம மட்டங்களைச் சேர்ந்த பிள்ளைகள் பெரும்பாலும் உயர்தர விஞ்ஞானத் துறையை கொண்டிருக்காத 1ஏபி தரத்துக்கு குறைவான தரநிலையிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கின்றார்கள். இத்தகையவர்கள் உயர்தரத்தில் விஞ்ஞானத் துறையைத் தொடரவிரும்பின் 1ஏபி பாடசாலையொன்றை நாடவேண்டிய தேவையுள்ளது. அதன்போது ஏற்கனவே தாம் கற்றுக்கொண்டிருக்கும் பாடசாலையிலிருந்து விலகுவதற்கான அனுமதியைப் பெறுவதில் பெரும் சவால்களைச் சந்திப்பதுண்டு. குறிப்பாக திறமையானதொரு மாணவரை இழக்க விருப்பற்ற பாடசாலைச் சமூகம், அவரைத் தொடர்ந்து தக்க வைப்பதற்காக விஞ்ஞானக் கல்வி குறித்த அச்ச நிலையை ஏற்படுத்தி, அம் மாணவரை விஞ்ஞானக் கல்வியிலிருந்து புறந்தள்ளிவிடுகின்ற சமூக விரோதச்செயல்களும் பாடசாலைகளில் நடைபெறுகின்றன. இவை மிகவும் கண்டிக்கத்தக்கவை. இந்த நிலைப்பட்டு ஒரு பாடசாலையின் அதிபர் அல்லது ஆசிரியர் செயற்படுவாராகவிருந்தால் அவர்கள் அச் சொற்களால் அழைக்க தகுதியற்றவர்கள். குறிப்பாக வடக்கு மாகாணத்தில் தற்போது இயங்கு நிலையிலுள்ள 1003 பாடசாலைகளில், உயர்தர விஞ்ஞானக் கல்வியைக் கொண்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 114 மட்டுமே யாகும். குறிப்பாக ஏனைய பிரதேசங்களுடன் தரைவழித் தொடர்பற்ற நெடுந்தீவு



போன்ற இடங்களில் இத்தகைய 1 ஏபி பாடசாலைகள் எதுவுமில்லை என்பது மிகவும் கவனத்துக்குரியது. இருந்தும் அங்குள்ள மாணவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது இது பெரும் சவாலுக்குரிய விடயமல்ல எனக் கருதினாலும், கல்வி என்பது அடிப்படை உரிமைகளில் ஒன்று எனும் கருத்தியலில் ஒரு பிள்ளைதானும் விஞ்ஞானக் கல்வியை கற்ற விருப்புக்கொண்டிருந்தும் பாடசாலையின் கிடைப்பனவின்மை காரணமாக அந்த உயரிய நோக்கை கைவிடுமாகவிருந்தால், அது கவலைக்குரியது மட்டுமன்றி கண்டனத்துக்குமுரியது. அதற்காக பிரதேசங்கள் தோறும் ஏற்கனவேயுள்ள பாடசாலைகள் சிலவற்றை 1ஏபி பாடசாலைகளாக தரமுயரத்துவதிலும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. இவ் விடயம் தொடர்பாக அண்மையில் அவுஸ்திரேலியவிலிருந்து ஒலிபரப்பாகும் சர்வதேச வானொலியான 'தாயகம்' இணைய வானொலிக்கு முன்னாள் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திரு.எம்.எம்.மன்சூர் தெரிவித்த கருத்துக்கள் இவ் விடயத்தில் கவனிக்கத்தக்கவை. "அரசியல் தேவைப்பாடுகளுக்காக மக்களைத் திருப்திப்படுத்தும் நோக்கில் கிராமப்புறங்களில் உள்ள பாடசாலைகள் தரமுயர்த்தப்படுகின்றன. இவ்வாறு பாடசாலைகள் தரமுயர்த்தப்படும்போது, பாடசாலையின் தரத்துக்கு ஏற்ப ஆசிரிய ஆளணியை நியமிக்க வேண்டிய தேவை கல்வித் திணைக்களத்துக்கு ஏற்படுவதுண்டு. ஏற்கனவே ஆசிரிய பற்றாக்குறையுடன் அதுவும் குறிப்பாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் உயர்தர விஞ்ஞானப் பாடங்களுக்கான ஆசிரிய பற்றாக்குறையை எதிர்கொள்ளும் வலயங்களால் இப் புதிய தேவையை நிறைவுசெய்ய முடிவ தில்லை. அவ்வாறு நிறைவு செய்தாலும் மாணவர் ஆசிரியர் விகிதத்தில் கீழ்நிலைச் சரிவு ஏற்படும் வாய்ப்புண்டு. இது ஆசிரியரின் கற்பித்தல் அர்ப்பணிப்பு மற்றும் வினைத்திறனைப் பாதிக்கும். எனவே அவசிய தேவைப்பாடுகள் அற்று பாடசாலைகளை அரசியல் நோக்கங்களுக்காக தரமுயர்த்தும் செயற்பாடுகள் கைவிடப்பட வேண்டும்" என அவர் குறிப்பிட்ட கருத்துக்கள் அனுபவத்தின் வெளிப்பாடானவை. எனவே பாடசாலைகளின் கிடைப்பனவை உறுதிசெய்ய பாடசாலைகளைத் தரமுயர்த்தும் செயற்பாடுகளுக்கு மாறாக வேறு வடிவங்களில் உறுதிசெய்ய வேண்டும். குறிப்பாக பாடசாலைகளைச் சென்றடைவதற்கான போக்குவரத்து மார்க்கங்களில் முன்னேற்றங்களை ஏற்படுத்தல், பாடசாலை விடுதிகளை அமைத்து அவற்றில் மாணவர்கள் தங்கியிருந்து கற்கும் நிலைமையைத் தோற்றுவித்தல், இவ்விடயத்தில் 'அரச தனியார் பங்களிப்பு (Pubilc Pirvate Partnersiup) என அண்மைக்காலமாக பேசப்படும் விடயத்துக்கு அதிக முக்கியத்து வம் கொடுத்து தீர்வுகளைக் காணக் கூடியதாக விருக்கும்.


**தரமான திறன்மிக்க பாடசாலை ஆசிரியர்களின் கிடைப்பனவு**

ஒரு மாணவன் உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியைத் தெரிவு செய்வதில் பாடசாலையில் விஞ்ஞானக் கல்வியை அவனுக்குப் போதிக்கும் ஆசிரியரின் செல்வாக்கு கனதியான வகிபாகத்தைக் கொண்டுள்ளது. இது வெறுமனே உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களை மையப்படுத்திய வகிபாகம் மட்டுமன்றி தரம் ஆறு தொடக்கம் தரம் பதினொன்று வரை கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களையும் மைய்ப்படுத்தியதாகும். இன்று எமது வடக்கு கல்விப் புலத்தில் கணித விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கு கருதத்தக்க பற்றாக்குறை இருப்பதை ஏற்றுக்கொண்டேயாகவேண்டும். அத்துடன் கிடைக்கத்தக்க அத்தகைய ஆசிரிய வளமும் சமச்சீராகப் பங்கிடப்படவில்லை. தேசியப் பாடசாலை, மாகாணப் பாடசாலை எனும் வேறுபாடுகள் என்பவற்றுடன் பாடசாலைகள் மீதான தனிப்பட்ட காரணிகளின் செல்வாக்குக்குட்பட்டுமே இவ் ஆசிரிய வளம் பங்கீடுசெய்யப்பட்டுள்ளது.

அதனால் க.பொ.த சாதாரணத்துக்குட்பட்ட வகுப்புக்களில் பொருத்தமான கணித விஞ்ஞானத் துறை ஆசிரியர்களிடம் அகப்படாத துர்ப்பாக்கிய நிலையின் காரணமாகவும், பல மாணவர்களிடம் உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியைத் தெரிவு செய்வதற்கான அடித்தளம் இடப்படுவதில்லை. இதனால் இயல்பாகவே மீதிறனுள்ள பல மாணவர்களும் உயர்தரத்தில் விஞ்ஞானக் கல்வியைப் புறந்தள்ளும் கவலைக்குரிய சமூகக் களநிலை உள்ளமை கவனித்து தீர்வு காணப்படவேண்டிய ஒன்றாகும்.

ஆசிரிய நியமனங்கள் மற்றும் இடமாற்றங்களின் போது கல்வி நிர்வாகப் புலம் சார்ந்த அதிகாரிகள் விஞ்ஞானக் கல்வியைப் பாதிக்காத வண்ணம் தமது தீர்மானங்களை எடுக்கும் திடசங்கற்பத்தை ஒரு தசாப்த காலத்துக்கேனும் கொண்டிருக்க வேண்டும் என்பது அவசியமானதாகும். வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலரதும் மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும் கவனத்துக்குச் சமர்ப்பணம்.

# யாழ்ப்பாணப் பதிப்புத்துறை



1

○ தில்லைநாதன் கோபிநாத்

நான்கு நாளிதழ்கள், வார இதழ்கள், ஆங்கில இதழ்கள், நூறாண்டுகளைத் தாண்டி வெளியாகிக் கொண்டிருந்த மூன்று சமய மாத இதழ்கள், மாணவர் இதழ்கள், சிறுவர் இதழ்கள், சமய இதழ்கள், சமூக இதழ்கள், பெண்கள் இதழ்கள், இலக்கிய இதழ்கள், மாண வர் இதழ்கள், ஆய்விதழ்கள், இயக்க இதழ்கள், தொகுப்பு நூல்கள், நூல் வெளியீடுகள் என யாழ்ப்பாணத்தின் பதிப்புத்துறை வரலாற்றில் மிகவும் பரபரப்பான காலகட்டம் 1990களின் முற்பகுதி என்றால் அது மிகையாகாது.

1989இல் புலிகளுக்கும் பிரேமதாசா அரசாங்கத் துக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்திய அமைதிப் படை வெளியே றிக் கொண்டிருந்த 1990இன் ஆரம்ப காலம் முதல் 1995 ஒக்ரோபரில் வலிகாமப்பகுதியிலி ருந்து பெரும் இடம்பெயர்வு ஏற்பட்டு அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணக் குடாநாடு முழுமை யான அரச கட்டுப்பாட்டுக்குள் வந்தது வரை யான காலப்பகுதி அதுவாகும். அது யாழ்ப்பா ணத்தைப் போர் சூழ்ந்திருந்த காலம். பெருமளவு பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நூல்களும் வெளியிடுவதற்குப் பொருத்தமான புறச்சூழல் நிலவிய காலமாக அது அமையவில்லை. படை நடவடிக்கைகள், விமானத் தாக்குதல்கள், எறி கணை வீச்சுக்கள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அத்துடன் பொருளாதாரத் தடைகளும் நடைமுறையில் இருந்தன. குறிப்பாக அச்சுச் சாதனங்கள் தடைசெய்யப்பட்டிருந்தன. காகிதத் தட்டுப்பாடு நிலவியது. ஒரு கட்டத்தில் கோடிட்ட அப்பியாசக் கொப்பிகளைக் கழற்றி யும் மணிலாத்தாள், நிற மட்டைகள் போன்ற ஏனைய காகிதங்களிலும் கூட பத்திரிகை களும் சஞ்சிகைகளும் அச்சிடப்பட்டன.

மேலும், அது இணையமும் கணினியும் யாழ்ப் பாணப் பதிப்புத் துறையில் அறிமுகமாகாத காலம் என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். அதாவது செய்திகள் இணையத் தளங்கள்மூலமோ மின்னஞ்சல்கள் மூலமோ வந்தடைவதில்லை. செய்தியாளர்கள் மூலமும் வானொலி மூலமுமே பெரும்பாலும் செய்திகள் கிடைத்தன. உசாத்து ணையாகக் கலைக்களஞ்சியங்களே பயன்பாட் டில் இருந்தன. புதிய தகவல்களுக்கு மிக அரிதா கவே பெறக் கூடியதாக இருந்த ஆங்கில நூல்க ளையே நாட வேண்டியிருந்தது. அத்துடன் எழுத் துக் கோப்பின் அடிப்படையிலான அச்சுத் தொழில் நுட்பமே பயன்பாட்டில் இருந்தது. அதாவது ஒரு கட்டுரையைக் கையால் எழுதிப் பின்னர் திருத்தி எழுதி அச்சுக் கோர்த்து அதில் பிழைகளைச் சரிபார்த்து அச்சுக் கோர்ப்பில் பிழைகளைத் திருத்தியே அச்சிட முடியும். இத்தனை மட்டுப்பாடுகள் இருந்தபோதும் யாழ்ப்பாணப் பதிப்புத்துறை மிகுந்த இயங்கு நிலையிலிருந்த காலம் இதுவாகும். பத்தொன் பதாம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட மூன்று சமய இதழ்களும் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருந்தன. ஈழத்தின் முதலாவது பத்திரி கையான உதயதாரகை (1841), கத்தோலிக்க இத ழான பாதுகாவலன் (1876), சைவ இதழான இந்து சாதனம் (1889) என்பவையே அவையாகும்.

1959இல் வார இதழாக ஆரம்பித்து 1960இல் வாரம் இருமுறை இதழாகிப் பின்னர் 1961 முதல் நாளிதழாக வெளியான ஈழநாடு யாழ்ப்பாணத் தின் மூத்த பத்திரிகையாக வெளிவந்து கொண்டி ருந்தது. 1980களின் நடுப்பகுதியில் தொடங்கப் பட்ட முரசொலி, உதயன் நாளிதழ்களும் தொடர்ந்து வெளியாகி வந்தன. இவற்றுடன் 1990 பெப்ரவரியில் தொடங்கப்பட்ட ஈழநாதம் பத்திரிகையுடன் எல்லாமாக நான்கு நாளிதழ்கள் வெளியாகி வந்தன.

1989 ஜனவரியில் தொடங்கப்படிருந்த திசை வார இதழ் 1990இல் சில மாதங்கள் மட்டுமே வெளியானது. 1990 ஒக்ரோபரில் ஹொட் ஸ்பிறிங் (Hot Spring) ஆங்கில வார இதழ் வெளியாகத் தொடங்கியது. 1993 முதல் இன்சைட் றிப்போட் (Inside Report) எனும் இன்னொரு ஆங் கிலப் பத்திரிகையும் வெளியா னது. இவற்றுடன் புலிகளின் இதழ்களான விடுதலைப் புலி கள், சுதந்திரப் பறவைகள் ஆகி யனவும் வெளியாகின.

1966இல் தொடங்கிய மல் லிகை இலக்கிய மாத இதழ் தொடர்ந்து வெளியானது. 1975இல் தொடங்கிய அலை யின் இதழ் ஒன்று மட்டும் 1990இல் வெளியானது. அலை ஆசிரியரான அ. யேசுராசா 1994இல் இளங்கவிஞர்களுக் கான கவிதை இதழைத் தொடங்கி னார். 1991 புரட்டாதியில் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வெளிச்சம் இதழும் வெளியாகத் தொடங்கி யது. திருமலைக் கலாமன்றத்தின் இலக்கிய இதழான கலைமுகம், நாடக அரங்கியல் சஞ்சிகையான ஆற்றுகை ஆகியனவும் தொடங் கப்பட்டன.

மில்க்வைற் நிறுவனம் சார்ந்து மில்க்வைற் செய்தி மடல் தொடர்ந்து வெளியானது. விநாயகர் தரும நிதியத்தினரால் அறத்தமிழ் ஞானம், அறம்வளர் இளந்தமிழ் போன்ற இதழ்கள் வெளியிடப்பட்டன. சிவதொண்டன் போன்ற சமய இதழ்களும் தொடர்ந்து வெளியாகி வந்தன.




மாதாந்த இளையோர் இதழான சாளரம் 1991இல் வெளியானது. 1992 ஜூலையில் வரதரை ஆசிரியராகக் கொண்டு மாணவர் பொது அறிவு இதழான அறிவுக்களஞ் சியம் தொடங்கப்பட்டது. பாடசாலைகள் ஊடாக விநியோகிக்கப்பட்ட இவ்விதழ் ஒரு கட்டத்தில் மூவாயிரம் பிரதிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் விற்பனையானது.

அதே ஆண்டு ஐங்கரநேசனை ஆசிரியராகக் கொண்டு நங்கூரம் சமூக அறிவியல் இதழ் வெளி யானது. அறிவுக்களஞ்சியம், நங்கூரத்தை முன்மா திரியாகக் கொண்டு மாற்றம், வானோசை, அறி வாயுதம், நெம்பு எனப் பல இதழ்கள் தொடங் கப்பட்டன. இவை பாடசாலை மட்டத்தில் மிகுந்த வரவேற்புப் பெற்றன.

மில்க்வைற் நிறுவனம் சார்ந்து மில்க்வைற் செய்தி மடல் தொடர்ந்து வெளியானது. விநாயகர் தரும நிதியத்தினரால் அறத்தமிழ் ஞானம், அறம்வளர் இளந்தமிழ் போன்ற இதழ்கள் வெளியிடப்பட் டன. சிவதொண்டன் போன்ற சமய இதழ்களும் தொடர்ந்து வெளியாகி வந்தன.

பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரின் ஆதா ரம் இதழ் 1990இல் வெளியாகத் தொடங்கியது. குறித்த கழகத்தினரின் பனை, தென்னை வளப்ப குதி, காப்பரண் எனும் இன்னொரு இதழையும் வெளியிட்டது. நகைச்சுவை இதழான சிரித்திரன், பெண்கள் இதழான நாற்று, ஆசிரியர்களுக்கான இதழான விளக்கு ஆகியனவும் வெளியாகி வந் தன. உலகளாவிய செய்திக் கட்டுரைகளைத் தாங்கி உலக உலா இதழும், தெரிவு செய்யப் பட்ட கட்டுரைகளைக் கொண்டதாக தேர்ந்த கட்டுரைகள் நூல் வரிசையும், தமிழீழ நோக்கு போன்ற ஆய்விதழ்களும் கூட இக்காலத்தில் வெளியாகின. இவை தவிர தனிச்சுற்றுக்கான றோணியோச் சஞ்சிகைகளும் வெளியாகின.

வரதர் வெளியீடு, தமிழ்த்தாய் வெளியீட்டகம், தமிழ் வளர்ச்சிக் கழகம், மீரா பதிப்பகம் உள் ளிட்ட பல்வேறு பதிப்பகங்கள் ஊடான நூல்க ளும் தொடர்ந்து வெளியாகின. செங்கை ஆழி யான் போன்ற எழுத்தாளர்களின் நூல்களும் தொடர்ந்து வெளியாகி வந்தன.

யாழ்ப்பாணத்தில் ஒரே காலப்பகுதியில் இத் தனை இதழ்கள், பத்திரிகைகள், நூல்கள் இதற்கு முன்போ பின்போ வெளியானதில்லை. அவ்வாறு அவை வெளியான பின்புலத்தையும், வெளியான தன் பத்திரிகைகள், சஞ்சிகைகள் பற்றிக் குறிப்பா கவும் , பதிப்புத்துறை தொடர்பில் பொதுவாக வும் புறவயமாக ஆராயும் முயற்சியே இதுவாகும். இந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பதிப்புத் துறையில் இயங்கிக் கொண்டிருந்த பலர் இப் போதும் எம்மத்தியில் உள்ளனர். அவர்களுக்குத் தெரிந்த மேலதிக தகவல்களைத் தெரிவித்தும் தகவற் பிழைகள் இருப்பின் சுட்டிக் காட்டியும் இந்தத் தேடலை முழுமைப்படுத்த உதவ வேண் டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

# வித்துவான் பதில்கள்!

நீங்களும் கேள்விகள் கேட்கலாம்



எழுதி அனுப்புங்கள்

வித்துவான் பதில்கள்
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555





**கொரோனா காலத்தில் மிகவும் கஷ்டமான நிலை என்று எதனைக் கருதுகிறீர்கள்?**

*நிரோ, கொடிகாமம்.*

உயிரிழப்புகள் அதிகரிப்பு, நோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு, உறவினர் தனிமைப்படுத்தப்படல்..... இவை எல்லாவற்றையும் தாண்டி கொரோனா காலத் திருமணங்கள் மிகவும் கஷ்டமானவை. 3 அடிக்கு மேற்பட்ட தனிநபர் இடைவெளி, முகக்கவசம் அணிவது கட்டாயம் என்ற அரசின் கடுமையான அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்தபடியே... எவ்வளவு இடைவெளியில்? எந்தக் கவசத்தை மணமக்கள் அணிந்திருப்பார்கள்...?

**கொரோனா காலத்தில் அரச ஊழியர்கள் வீட்டிலிருந்து வேலை செய்தார்களே? வேலையில் தேர்ச்சி பெற்றிருப்பார்களா?**

*மாலதி, கொடிகாமம்.*

"வேலையில் நிச்சயம் தேர்ச்சி பெற்றிருப்பார்கள்." தமது வினைத்திறன் மிக்க செயற்பாடுகள் மூலம் "விளைதிறனை" பலர் அதிரித்துள்ளனர். இதனால் ஆண் ஊழியர்களின் மனைவியரில் சிலரும், பெண் ஊழியர்கள் சிலரும் 84 நாள் அரச விடுமுறைக்கு உரியவர் என்னும் பதவி உயர்வைப் "பெற" உள்ளனர்.



**ரணிலால் நாடாளுமன்றத்துக்குக் கூடத் தெரிவாக முடியாமற் போய்விட்டதே? முன்னாள் பிரதமரின் நிலைமையைப் பார்த்தீர்களா?**

*செல்வநாயகம், பளை.*

பல பேருக்குக் குழி பறித்த குள்ளநரி, இறுதியில் தானே குழியில் மாட்டுப்படுவதில்லையா ? யானை, தன் தலையில் தானே மண் அள்ளிப் போடுவது இல்லையா?

# அழகுக்கும்; ஆரோக்கியத்துக்கும்...



- காலையில் எழுந்தவுடன் சாதாரண குளிர்ந்த நீரை முகத்தில் அடித்துக் கழுவ வேண்டும். இதேபோல், உள்ளங்கைகளைக் குவித்து நீரைப் பிடித்து, அதற்குள் உங்கள் முகத்தை அமிழ்த்தி கண்களைத் திறந்து திறந்து மூடுங்கள். இப்படிச் செய்வதால் முகத்திலும் கண்களிலும் ரத்த ஓட்டம் அதிகரித்து, நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருப்பதாக உணர்வீர்கள்.
- நன்கு வியர்க்கும்படி உடற்பயிற்சி, யோகா அல்லது நடைப்பயிற்சி செய்ய வேண்டும். இதனால் உடலில் இருக்கின்ற கழிவுகள் வியர்வை வழியாக வெளியேறும்.
- உடலில் கழுத்துப்பகுதியில்தான் சீக்கிரமாக சுருக்கங்கள் விழ ஆரம்பிக்கும். அதனால், கழுத்துக்கான பயிற்சிகளைக் கற்றுக்கொண்டு தினமும் செய்து வந்தால், கழுத்தில் சுருக்கங்கள் வருவது தாமதப்படும். வயதாகிப் போய்விட்டது போன்ற தோற்றம் ஏற்படுவதும் குறைவடையும்.
- வெந்நீரில் எலுமிச்சைச் சாறு, தேன் கலந்து குடிக்கும்போது உடலில் இருக்கிற கழிவுகள் வெளியேறி புத்துணர்ச்சியாக இருப்பதாக உணர்வீர்கள்.
- காலையில் குளிப்பதற்கு முன்னால் உங்கள் சருமத்துக்கு ஏற்ற க்ளென்சிங், டோனிங், மாய்ஸ்ச்சரைஸிங் கட்டாயம் செய்ய வேண்டும். இதற்கு நேரமில்லை என்பவர்கள் பாலேட்டால் முகத்துக்கு மசாஜ் செய்யுங்கள். எண்ணெய்ப்பசை சருமம் என்றால், சோற்றுக்கற்றாழை ஜெல்லை முகத்தில் தடவி மசாஜ் செய்யுங்கள்.
- அழகுக்கும் ஆரோக்கியத்துக்கும் பாதாம் பருப்பு மிக மிக அவசியம். அப்படியே சாப்பிட்டால் செரிமானப் பிரச்னைகள் வரலாம் என்பதால், முதல் நாள் இரவே பாதாம் பருப்பை ஊறவைத்து, காலையில் தோலை உரித்துவிட்டுச் சாப்பிடலாம். ஒரு நாளுக்கு 4 அல்லது 5 பாதாம் பருப்பு போதுமானது.
- வீட்டை விட்டு வெளியே செல்லும்போது தவறாமல், உங்கள் சருமத்துக்கு ஏற்ற, காலநிலைக்கு ஏற்ற சன்ஸ்க்ரீனை முகத்தில் பூசிக் கொள்ளுங்கள்.
- தாகம் எடுக்கும்போதெல்லாம் நிறையத் தண்ணீர் குடிக்க வேண்டும். ஏசி ரூமில் இருப்பவர்களுக்கு தாகம் எடுக்காமல் போகலாம் என்பதால் இதில் கூடுதல் கவனம் தேவை. ஒரு நாளைக்கு இவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டு அருந்துங்கள். உடலில் நீர்ச்சத்து போதுமான அளவு இருந்தால்தான் சருமம் வறண்டு போகாமல் ஈரப்பதத்துடன் பளபளப்பாக இருக்கும். தவிர, உடலில் இருக்கிற கழிவுகளும் முழுமையாக வெளியேறும்.

# முள்ளங்கித் துவையல்

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| முள்ளங்கி | 3 |
| காய்ந்த மிளகாய் | 3 |
| பச்சை மிளகாய் | 2 |
| கடலைப் பருப்பு | 25 கிராம் |
| தேங்காய்த் துண்டு | 3 |
| வெங்காயம் | 1 (பெரியது) |
| தனியாத்தூள் | 1 மேசைக்கரண்டி |
| புளி | நெல்லிக்காய் அளவு |
| பூண்டு | 3 பல் |
| கறிவேப்பிலை | சிறிதளவு |
| எண்ணெய் | 25 மி.லி. |
| பெருங்காயத்தூள் | 1 சிட்டிகை |
| சமையல் உப்பு | தேவைக்கு ஏற்ப |



**செய்முறை:**

முதலில் முள்ளங்கியை நன்றாகக் கழுவித் தோல் சீவி எடுக்கவும். பின்னர் அதை சிறிய துண்டுகளாக மெலிதாக அரிந்து கொள்ளவும்.

அடுப்பை பற்றவைத்து, மெதுவாக எரியவிடவும். அதில் பாத்திரத்தை வைத்து ஒரு மேசைக்கரண்டி எண்ணெய்யை ஊற்றி, எண்ணை காய்ந்தவுடன் காய்ந்த மிளகாய், கடலைப் பருப்பு என்பவற்றை அதில் போட்டு வறுத்து தனியாக எடுத்து வைக்கவும்.

அரிந்து வைத்த முள்ளங்கியுடன் ஒரு பாத்திரத்தில் எண்ணெய் ஊற்றி அடுப்பில் வைத்து சூடாக்கி பச்சை மிளகாய், வெங்காயம் ஆகியவற்றைப் போட்டு பொன் நிறமாக வதக்கி எடுத்துக்கொள்ளவும்.


தேங்காய்த் துண்டுகளை அரிந்து எடுக்கவும். ஏற்கனவே வறுத்த கடலைப் பருப்பு, காய்ந்த மிளகாய் என்பவற்றை மிக்ஸியில் போட்டு அரைக்கவும். இவை மசிந்தவுடன் தேங்காய், முள்ளங்கி, புளி, பச்சை மிளகாய், பூண்டு, வெங்காயம், தனியாத்தூள் இவற்றையும் போட்டு உப்பு கறிவேப்பிலை, பெருங்காயத்தூள் சேர்த்து அரைத்து எடுக்கவும்.

இப்போது மணம் மற்றும் சுவையுடன் கூடிய முள்ளங்கித் துவையல் தயாராகிவிட்டது. சோறு மற்றும் இட்லி தோசையுடன் இதனைச் சேர்த்துச் சாப்பிட நன்றாக இருக்கும்.

ஆர்.லயனல்

# டோனி!

## ஓய்வில்லா ஒரு தலைவன்



கள்ளிச்செடிகள் கதைசொல்லும் இந்தியாவின் ஜார்க்கண்ட் மாநிலத்தில் இருந்துவந்து இந்தியக்கிரிக்கெட்டில் முதுகெலும்பாகத் திகழ்ந்து பல கோடி ரசிகர்களின் கனவுகளை மெய்ப்பித்த அற்புதமான தலைவன் தன் சர்வதேசப் பயணத்தை முடித்துக்கொண்டுள்ளான். ஆம், இந்தியக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் மூவகையான உலகக்கிண்ணங்களையும் வென்ற ஒரே தலைவராகவும் திகழ்ந்த - திகழ்கின்ற எம்.எஸ்.டோனி சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு விடைகொடுத் துள்ளார். கிரிக்கெட் உலகின் கண்ணீருக்கு மத்தியில் அந்தக் கனவு நாயகன் தன் ஓய்வை அறிவித் துள்ளார்.

**'கப்டன் கூல்'.**

வேறெந்தக் கிரிக்கெட் வீரருக்கும் இல்லாத அளவுக்கு டோனிக்கு அதிகளவு ரசிகர்கள் கொட்டிக்கிடக்கக் காரணம், அவரது பொறுமையும் நிதானமும்தான். ஆடுகளத்தில் டோனியை ஆக்ரோசமாகப் பார்க்க முடியாது. எந்த இக்கட்டான நிலையிலும், அவ்வளவு அழகாகப் புன்னகைப்பார். இந்தப் புன்னகைதான் நாள்கள் உருண்டோட அவருக்குக் 'கப்டன்கூல்' என்ற சாதனைப்பெயர் வரக் காரணமானது. கோடிக் கணக்கான ரசிகர்களை அவரின் பின்னால் கட்டிப்போட்டது. 'என் இளமைப் பருவம் வறுமையால் நிறைந்தது. அதனால் எனக்கு உணவு கிடைக்க அல்லது எனது அம்மா உணவு தயாரிக்க அதிக நேரம் காக்க வேண்டி யிருக்கும். அப்படியாக வந்ததுதான் இந்தப் பொறுமை' என்று தனது 'கூல்' குணவியல்பு பற்றித் தானே பலமுறை தெரிவித்துள்ளார்.

**அறிமுகமும் விசித்திரமும்**

2000 - 2007ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிகளில் இந்திய மத்திய வரிசையில் இருந்த துடுப்பாட்டத் தளம்பலை மாற்றயமைத்த பெருமை டோனியைத்தான் சாரும். இத்தனைக்கும் டோனி ஒரு ஜாம்பவானாக கிரிக்கெட்டில் அறிமுகமாகவில்லை. அவரது அறிமுகமே அவரைப்போன்று விசித்திரமானது. 2004ஆம் ஆண்டு டிசெம்பரில் இந்தியா- பங்களாதேஷை எதிர்த்து விளையாடிய தொடரில் டோனி அறிமுகமானார். ஒருநாள் ஆட்டங்களில், டெஸ்ட் ஆட்டங்களுக்குரிய கால் கவசத்தை அணிந்தபடி, 'அனுமன் கதாயுதத்தை ஏந்திச் செல்வது போன்று' துடுப்பு மட்டையை தோளில் சுமந்தவாறு நீண்ட சடைமுடியுடன் வந்த அந்த உருவம்தான் இந்திய கிரிக்கெட்டின் எதிர்காலம் என்றும், இந்திய அணியையே மாற்றியமைக்கப் போகும் சக்தி என்றும் அப்போது எவரும் நினைத்திருக்கவில்லை. நினைக்கக்கூடிய விதத்திலும் அந்த உருவம் இல்லை. 2007ஆம் ஆண்டு இந்திய அணி உலகக்கிண்ணத் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டது. இதையடுத்து புதியதொரு தலைமை இந்தியாவுக்குத் தேவை என்கிற நிலை. கங்குலி என்கிற மகத்தான ஜாம்பவானின் நெறிப்படுத்தலின் கீழ் இந்திய அணியின் சகல அதிகாரங்களும் டோனியிடம் வழங்கப்பட்டன.

**இந்திய அணியின் தலைவராக டோனி!!!.**

2007ஆம் ஆண்டு நடைபெற்ற ரி20 உலகக்கிண்ணம் டோனியின் தலைமையின் கீழ் இந்தியா எதிர்கொண்ட முதலாவது மிகப்பெரிய தொடர். அதே ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா சுருண்டு மடிந்ததால் ரி20 உலகக்கிண்ணத் தொடரில் இந்தியாவின் மீது மிகப்பெரிய எதிர்பார்ப்பு நிலவியது. அந்த உல கக்கிண்ணத் தொடரில், டோனி என்கிற இளங்கன்று தொட்டதெல்லாம் துலங்கியது. அந்தத் தொடரில் மட்டுமல்ல, அதற்குப் பின்னரான தொடர்களிலும்கூட. பாகிஸ்தானுக்கு எதிரான இறுதியாட்டத்தில் இந்திய அணியிடம் இருந்து கிண்ணம் சென்றுவிட்டது என்கிற நிலைப்பாடு இருக்கையில் 'பேக் லோங்' திசையில் சிறிசாந்தை நிற்க வைத்து மிஸ்பா உல்ஹக்கை வீழ்த்திய துணிச்சலும், திறமையும் டோனிக்கு மட்டுமே சொந்தம்.

**அதியுச்ச ஆதிக்கம்**

அதன் பின்னர் டோனியின் ஆதிக்கம் இந்திய கிரிக்கெட்டில் அதி உச்சம் பெற்றது. டோனி தெரிவு செய்வதுதான் அணி என்கிற அளவுக்கு அவரின் முடிவுகள் முக்கியத்துவம் மிக்கனவாக அமைந்தன. இந்த முடிவின் அடிப்படையில்தான் ஜாபர், கங்குலி போன்ற ஜாம்பவான் வீரர்களை இந்தியா இழக்க வேண்டியிருந்தது. இதற்காக டோனிக்கு ஏகப்பட்ட எதிர்ப்பலை இருந்தாலும், அவர் எதையும் கண்டுகொள்ளவில்லை. 1983ஆம் ஆண்டு இந்திய அணி கபில்தேவின் தலைமையில் உலகக்கிண்ணம் வென்றதன் பின்னர் சுமார் 3 தசாப்த காலமாக மற்றொரு உலகக்கிண்ணத்துக்காக இந்தியா தவமிருந்தது. சச்சின், ராவிட், கங்குலி என்று ஜாம்பவான்கள் பலரும் பலதையும் செய்து பார்த்துவிட்டார்கள். ஆனால் மற்றொரு உலகக்கிண்ணம் என்பது சாத்தியப்படாததாகவே இருந்தது.





இந்த ஏக்கமும் டோனியால் போக்கடிக்கப்பட்டது. 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத் தொடரை டோனியின் தலைமையில் கைப்பற்றியது இந்தியா. டோனி இல்லையேல் உலகக்கிண்ணம் என்ற கனவு மெய்ப்படாமலேயே சச்சின் தனது ஓய்வை அறிவித்திருப்பார். இதனால்தானோ என்னமோ 'நான் ஏகப்பட்ட தலைவர்களின் கீழ் விளையாடியுள்ளேன். ஆனால் எவரையும்போல் டோனியில்லை. டோனிபோலும் எவருமில்லை' என்று சச்சின் குறிப் பிட்டிருந்தார்.

> "என் இளமைப் பருவம் வறுமையால் நிறைந்தது. அதனால் எனக்கு உணவு கிடைக்க அல்லது எனது அம்மா உணவு தயாரிக்க அதிக நேரம் காக்க வேண்டியிருக்கும். அப்படியாக வந்ததுதான் இந்தப் பொறுமை."

இந்திய கிரிக்கெட்டுக்கு இன்னொரு சச்சின் சாத்தியம். அது கோக்லியாகக்கூட இருக்கலாம். ஆனால் எவரும் டோனியாகமுடியாது.

**19.29 இன் மர்மம்**

டோனி தன் ஓய்வு முடிவை இந்தியாவின் சுதந்திர தினமான ஓகஸ்ட் 15 ஆம் திகதி இரவு 7.29 க்கு அறிவித்தார். அதாவது 24 மணித்தியாலத்தில் சொல்வதனால் அவர் ஓய்வை அறிவித்த நேரம் 19.29. இந்த 19.19 ஐ ஏன் டோனி தெரிவு செய்தார் என்பது குறித்து பல ஊகங்கள் உலாவுகின்றன, கடந்த 2015 ஆம் ஆண்டு உலகக்கிண்ணப் போட்டியில் நியூசிலாந்துடனான அரையிறுதியில் இந்தியா இறுதி விக்கெட்டை இழந்து தோற்ற நேரம் 19.29 தான்,. அந்தப் போட்டிதான் டோனி விளையாடிய இறுதி ஒருநாள் சர்வதேசப் போட்டி. அதேபோன்று ''பூமியின் தெற்குப்பகுதியின் பெரும்பாலான நாடுகளில் இந்த நேரத்தில்தான் சூரியன் மறையும். அதனால் தான் அவர் அந்த நேரத்தை தேர்வு செய்தார் என்றும் கூறப்படுகின்றது.

**மலைபோல் சாதனைகள்**

ஓர் இலக்குக் காப்பாளர் ஆட்டமிழக்காமல் 183 ஓட்டங்கள் எடுத்தமை, ஓர் இன்னிங்சில் அதிக பிடியெடுப்புக்கள், 50 ஆட்டங்களுக்கும் மேல் விளையாடிய இந்திய வீரர்களில் அதிகபட்ச சராசரி, ஒருநாள் ஆட்டங்களில் 7 ஆவதாகக் களமிறங்கி அதிகபட்சமாக ஓட்டங்கள் குவிப்பு, ஓர் இன்னிங்சில் 6 பேரை வீழ்த்திய இலக்குக் காப்பாளர், அதிக பிடியெடுப்புக்கள், அதிக ஸ்டம்பிங், ஆட்ட நாயகன் விருதுகள், தொடராட்ட நாயகன் விருதுகள் என்று டோனியின் சாதனைப் பட்டியல் மிகமிக நீளமானது. எல்லாவற்றுக்கும் மேலாக மூன்று உலகக்கிண்ணங்களையும் கைப்பற்றி மூவகைத் தரப்படுத்தலில் தனது அணியை முதலிடத்துக்குக் கொண்டு சென்ற ஒரேயொரு தலைவர் டோனி மட்டுமே.

இந்தச் சாதனையை இன்னொரு தலைவர் படைப்பது என்பது அவ்வளவு இலகுவில் முடியாதது. முதல் போட்டியில் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்த டோனி, இறுதிப்போட்டியிலும் ரன் அவுட் முறையிலேயே ஆட்டமிழந்த விசித்திரமும் உண்டு. இதைத்தான் இந்திய அணியின் முன்னாள் வீரரான கம்பீரும் சொல்கின்றார். கிரிக்கெட் இருக்கும் வரையில் ரசிகர்களின் மனங்களில் இருந்து டோனிக்கு ஓய்வில்லை.



# ஆப்பும், அர்த்தமும்

ந.பரமேஸ்வரன்

**2010** ஆம் ஆண்டு வெல்லவே முடியாததாகக் கருதப்பட்ட யுத்தத்தை முடித்து வைத்து, வெற்றி வாகை சூடி, ஆட்சி பீடமேறிய மகிந்த ராஜபக்ஷ 2015 ஆம் ஆண்டு வரை சர்வாதிகாரப்போக்கிலேயே ஆட்சியை நடத்தினார். அத்துடன் சீன அரசுடன் நெருக்கமாக செயற்பட்டு வந்தார். இந்தக்காலப்பகுதியில் நாட்டில் விலைவாசிகள் அதிகரித்ததுடன் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் பலவும் நடந்தேறின. அத்துடன்முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் ஆங்காங்கே இடம்பெற்றன.

விலைவாசி அதிகரிப்பு, சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறைகள் மற்றும் ஜனநாயகவிரோதச் செயற்பாடுகள் என்பவற்றால் மூவின மக்களும் ஆட்சியாளர்கள் மீது வெறுப்படைந்திருந்தனர். இதேவேளை, ஆட்சியாளர்களின் சீன சார்பு நிலைப்பாடும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு எரிச்சலை ஊட்டியது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதகமாக்க விரும்பிய அமெரிக்காவும் இந்தியாவும் 2015 இல் நடைபெற்ற தேர்தலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. மகிந்த கனவிலும் நினைத்துப்பார்த்திராத வகையில் மகிந்தவுக்கு எதிரான பொது வேட்பாளராக மைத்திரி சர்வதேசத்தின் ஆசியுடனும் ரணில், சந்திரிகா மற்றும் சில பௌத்த குருமாரின் ஆதரவுடனும் களமிறக்கப்பட்டார். மூவின மக்களின் மகத்தான ஆதரவுடன் மைத்திரி தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாகப் பதவியேற்றார். இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக இரண்டு தேசியக்கட்சிகள் இணைந்து ஆட்சிய மைத்ததுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி அந்தஸ்தும் கிடைத்தது.

இதன்போது ஆட்சியாளர்கள் தமது ஆட்சியை நல்லாட்சி என்றும் வர்ணித்தனர். நல்லாட்சி அரசாங்கம் அரசியல் யாப்பில் திருத்தத்தை மேற்கொண்டு (பத்தொன்பதாவது திருத்தம் ) மகிந்தவுக்கு ஆப்பு வைக்கும் வேலைகளை மேற்கொண்டது. ராஜபக்ஷ குடும்பத்தினரை அரசியலில் இருந்து அப்புறப்படுத்தும் அல்லது ராஜபக்ஷ குடும்பத்தினரை அரசியலில் தலையெடுக்க விடாத படி அரசியல் யாப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

பத்தொன்பதாவது திருத்தம் மூலம் இரண்டு தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க முடியாது (இது மகிந்தாவுக்காக இறுக்கப்பட்ட ஆப்பு), இரட்டைப் பிரஜாவுரிமையுடைய ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது ( இது கோத்தாவுக்கு அடிக்கப்பட்ட ஆப்பு) 35 வயதுகுட்பட்டவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது (இந்த ஆப்பு நாமலுக்காக) என்றவாறு மகிந்த குடும்பத்தினரை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விடாமல் தடுக்கும் நோக்குடன் நல்லாட்சி அரசாங்கம் என்று வர்ணிக்கப்பட்ட ரணில்+மைத்திரி அரசு தீர்மானங்களை நிறைவேற்றி நாடாளுமன்ற ஒப்புதலுடன் நிறைவேற்றியது.



ஜனாதிபதி என்ற வகையில் மைத்திரி இந்தத் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தாலும் இதன் சூத்திரதாரிகள் ரணிலும் அவருக்குப் பின்னால் நின்று செயற்பட்ட சுமந்திரனுமே. இனி ராஜபக்ச குடும்பத்தினர் அரசியலில் தலையெடுக்கவே முடியாது என்ற இறுமாப்புடன் நல்லாட்சி அரசுகொலரை இழுத்து விட்டுக் கொண்டது. இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ள மகிந்தவை ஓரங்கட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் இருந்து கொண்டு எதுவும் செய்யமுடியாது என்பதை உணர்ந்து கொண்ட மஹிந்த, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற பெயரில் கட்சியை ஆரம்பித்தார். ஓடு மீன் ஓடி உறுமீன் வரும் வரையும் வாடியிருக்குமாம் கொக்கு என்ற பழமொழிக்கிணங்க மகிந்த ராஜபக்ஷவும் பொறுமையுடன் காத்திருந்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சிங்கள மக்கள் மத்தியில் நல்லாட்சி அரசாங்கத்தின் மீது இருந்த நம்பிக்கையை தவிடு பொடியாக்கியது. நாட்டைக் காப்பாற்றுவதற்கு ஒரு பலம்பொருந்திய தலைவர் தேவை என சிங்கள மக்கள் சிந்திக்கத் தொடங்கி னார். நாட்டைக் காப்பாற்றுவதற்கு கோத்தாவால் தான் முடியும் என சிங்கள மக்கள் நம்பினர். சந்தர்ப்பத்தை மகிந்த சரியாகப் பயன்படுத்திக்கொண்டார். பௌத்த அடிப்படைவாதிகளை வளைத்துப் போட்டுக் கொண்டார். ஜனாதிபதித் தேர்தலில் கோத்தா களமிறக்கப்பட்டார். தென்னிலங்கையில் கோத்தா அலை வீசத்தொடங்கியது. பெரும் எதிர்பார்ப்புடன் பேசப்பட்ட கோத்தாவின் அமெரிக்க பிரஜாவுரிமை விடயமும் பிசுபிசுத்துப்போனது. சிங்கள புத்திஜீவிகள் மற்றும் பாமர சிங்கள மக்களின் ஏகோபித்த ஆதரவுடன் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக அதுவரை எவருமே பெற்றிராத 52.5 சதவீத வாக்குகளைப்பெற்று கோத்தா ஜனாதிபதியானார். ஜனாதிபதித் தேர்தல் முடிந்ததும் அரசமைப்புக்கான திருத்தங்கள் 13 ஐயும் 19 ஐயும் நீக்க வேண்டும் என்ற கோஷம் சிங்கள ஊடகவியலாளர்களாலும் புத்திஜீவி களாலும் முன்னெடுக்கப்பட்டது.

13 ஐயும் 19 ஐயும் இல்லாமல் செய்வதற்கு ஆணை வழங்குமாறு பொதுஜன பெரமுன பொதுத் தேர்தல் பிரசாரத்தின்போது மக்களைக் கேட்டுக்கொண்டது. சிங்களமக்களும் எவருமே எதிர்பார்க்காத அளவுக்கு பொதுஜன பெரமுனவுக்கு மகத்தான ஆதரவு வழங்கியுள்ளனர்.

இப்போது 19 ஐ நீக்குவதே தனது முதல் பணி என ஜனாதிபதி ஒன்பதாவது நாடாளுமன்றின் தொடக்க நிகழ்வில் உரையாற்றும்போது கூறியுள்ளார். இப்போது ராஜபக்ச குடும்பத்திலிருந்து ஆறு பேர் நாடாளுமன்றுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மஹிந்தவுக்கு ஆப்பு வைத்த ரணில் வரலாற்றுத் தோல்வியைச் சந்தித்து , ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகக் கூட ஆக முடியாத விதத்தின், இம்முறை அவர் நாடாளுமன்றத்தில் அவுட். அவர் பின்னால் நின்ற சுமந்திரனை நாடாளுமன்ற முதல்நாள் அமர்வில் மகிந்த கைலாகு கொடுத்து உரையாடும் படங்கள் வெளியாகியுள்ளன. இதன்போது மகிந்தவின் முகத்தில் ஒரு அர்த்தம் பொதிந்த புன்னகை இருப்பதை அவதானித்திருப்பீர்கள். "பார்த்தீர்களா சுமந்திரன், நீங்களும் ரணிலும் இணைந்து இறுக்கிய ஆப்பை நான் சிம்பிளாக இழுத்து எறிந்து விட்டேன் " என்பதே அந்தப் புன்னகையின் அர்த்தம்.

---

# கடவுளும், சாத்தானும்

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் மூலக்கூறுகள் இருந்தால், அவற்றால் உருவாக்கப்படும் எதிர்ப்பொருளும் இருக்கவேண்டும். விஜய் என்பவர் இருந்தால், எதிர் விஜய்யும் (Anti vijay) இருப்பார். எதிர்த்துகள்கள் என்பவை அடிப்படையில் பெரிய மாற்றங்களைக் கொண்டவையல்ல. அவற்றின் மின்னேற்றம் (Electric charge) மட்டும் மாறியிருக்கும். எலெக்ட்ரோனின் ஏற்றம் எதிரேற்றம். அதனால். எதிர் எலெக்ட்ரோன் நேரேற்றம் உடையதாகக் காணப்படும். இதைத்தவிர எந்த மாற்றமும் இருக்காது. ஏற்றம் மாறுபடுவதால், அவற்றின் தன்மைகளுக்குப் பெரும்பாலும் வேறுபாடு இருக்காது. உதாரணமாகக் காந்தத்தின் வடமுனைக்கும், தென்முனைக்கும் உங்களால் என்ன மாற்றத்தைக் கண்டுகொள்ள முடியும்? அவை எதிரெதிரான ஏற்றங்களை மட்டும் கொண்டவை என்பதைத்தவிர. பூமியின் வடதுருவத்துக்கும், தென் துருவத்துக்கும் என்ன வித்தியாசம் உண்டு? ஒருு பற்றரியின் மேல்முனைக்கும், கீழ்முனைக்கும் என்ன வித்தியாசம் காண்பீர்கள்? முகம் பார்க்கும் கண்ணாடியில் தெரியும் விம்பம்போல. அதில் நீங்கள் இதுவரை பார்ப்பது உங்கள் முகத்தைத்தான் என்று நம்பவில்லையா? அதுபோன்றவையே எதிர்த்துகள் களும்.


**எங்கே எங்கே துகள்கள் எங்கே?**

விஜய்க்கும், எதிர் விஜய்க்கும் அப்படியொன்றும் பெரிதாக வித்தியாசம் கிடையாது. ஆனாலும், டிராக்கின் முடிவைப் பலரால் ஜீரணிக்க முடியவில்லை. பெருங் குழப்பத்தில் இருந்தார்கள். உண்மையாகவே அப்படியான துகள்கள் உண்டாவெனத் தெரியாமல் தவித்தார்கள். இந்தக் குழப் பத்துக்கெல்லாம் விரைவாக ஒரு முடிவு கிடைத்தது. அதுவும் நான்கே நான்கு ஆண்டுகளில்.1932ஆம் ஆண்டு, 'கார்ல் ஆண்டர்சன்' (Carl David Anderson) என்னும் அமெரிக்க இயற்பியலாளர் செய்த பரிசோதனையொன்றில், எலெக்ட்ரோனுக்குச் சமமான ஆனால், + ஏற்றம்கொண்ட ஒரு துகள் கண்டுபிடிக்கப்பட்டது. அண்டர்சன் கண்டுபிடித்த அந்தத் துகள்தான் 'பொசிட்ரோன்' (Positron) என்பதாகும். டிராக் எதைக் கணித்திருந்தாரோ அதே துகள். இந்தப் பொசிட்ரோன் துகளே எலெக்ட்ரோனின், ஆன்டி எலெக்ட்ரோன் ஆகும். அதாவது, போல் டிராக் கணித்தது நூறுசதவீதம் சரியானதே என்று அனைவருக்கும் புரிந்துபோனது. அதன்பின்னர், படிப்படியாகப் பல எதிர்த்துகள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவையெல்லாம், முதல் பகுதியில் சொல்லியிருந்த துகள்மோதிகளின் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டன.

அப்படியென்றால், இயற்கையில் இப்படியான எதிர்த்துகள்கள் இல்லையா? நம்மிடையே காணப்படும் அனைத்துத் துகள்களும், எதிர்த்துகள்களாக இல்லையே! அவை அனைத்தும் எங்கே? பிக்பாங் பெருவெடிப்பின்போது, துகள்களும், அவற்றுக்குச் சமமான எதிர்த்துகள்களும் ஒன்றாகவே உருவாகின என்றுதான் அறிவியலின் முடிவுகள் சொல்கின்றன.

ஆனால், அந்த எதிர்த்துகள்கள் அனைத்தும் எங்கே? பேரண்டத்தின் உருவாக்கத்தில் நடந்தவொரு மர்மத்திற்கான பிரதான கேள்வி இது. இதற்கான சரியான பதில்கள் இன்றுவரை இல்லை.

ஆனால், அவை எங்கே மாயமாகி இருக்க முடியும் என்பதற்கு மூன்றுவிதமான பதில்களை இயற்பியலாளர்கள் கொடுக்கிறார்கள். அவை என்னவென்று அடுத்த பகுதியில் சொல்கிறேன். அதிகம் எழுதினால், படிக்கும் உங்களுக்கும் ஒரு ஆயாசம் வந்துவிடும். நீண்ட கட்டுரைகள் அறிவியலுக்கு ஆபத்தானவை. அதனால், மெல்ல மெல்ல ஒவ்வொன்றாக அறிந்து கொள்வோம்.



○ ந.பரமேஸ்வரன்

# யாழ். மாநகர சபையின் வரலாறு

## 10

## (1906 - 1949)

14.11.1925 ஆம் திகதியன்று சனி காலை 9.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு மேலதிக விடுதி அமைத்துத்தருமாறு கோரிக்கை விடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அத்துடன் பருத்தித்துறை வீதி செம்மணி வீதிச்சந்தியிலும், கடற்கரை வீதி சேமக்காலைச்சந்தியிலும் மேலதிக விளக்குகள் பொருத்தப்பட வேண்டுமென திசைவீர சிங்கம் பிரேரித்தார். 19.11.1925 ஆம் திகதியன்று 1926ம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. வரவு செலவுத்திட்டத்தில் வரிவருமானத்தை 11372.00 ரூபாவாக அதிகரிப்பதென தீர்மானிக்கப்பட்டது. அத்துடன் சிற்றூழியரினதும் Inspector of Works (வேலை மேற்பார்வையாளர் என்று நினைக்கிறேன்) இனதும் சம்பளத்தை அதிகரிப்பதெனவும் சிற்றூழியருக்கு மிதிவண்டி அலவன்சும் வேலை மேற்பார்வையாளருக்கு மோட்டார் சைக்கிள் அலவன்சும் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

1926ம் ஆண்டிற்குரிய சந்தை குத்தகை வருமானம் வருமாறு.

| | |
|---|---|
| பெரிய கடைச்சந்தை | 6221.00 |
| மீன் சந்தை | 900.00 |
| கல்வியங்காடு சந்தை | 1201.00 |

02.12.1925 அன்று யாழ் நகர அபிவிருத்தி சபை ஏனைய சபைகளைப்போல் செயற்படுவதில்லை, ஒழுங்கான சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என கூறி வரி செலுத்துவோர் சங்கம் வீரமாகாளி அம்மன் கோயில் முன்றலில் கண்டனக்கூட்டமொன்றை ஏற்பாடு செய்தது. முதலியார் தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற கண்டனக்கூட்டத்தில்
சிவசம்பு, பண்டிதர் மயில்வாகனம், A.இளையப்பா C.நவரத்தினம், A.P.தம்பையா ஆகியோர் உரையாற்றினார். கூட்டத்தின் முடிவில் ஆளுநருக்கு மனு அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது.

1926.03.13ஆம் திகதி சனி காலை 9.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் பின்வரும் குழுக்கள் அமைக்கப்பட்டன.

- நிதிக்குழு
- சட்ட ஆலோசனைக்குழு
- சுகாதாரக்குழு
- உணவுக்குழு
- வீதி கட்டிடக்குழு

இதே கூட்டத்தில் காலஞ்சென்ற வேலைப்பகுதி சுப்பிரிண்டன் சின்னத்தம்பிக்கு ஓய்வூதியம் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.
அத்துடன் மருத்துவமாதுவின் வீட்டுக்கடன் பற்றியும் ஆராயப்பட்டது. அத்துடன் நீர்மலசலகூடத்திற்கு விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன.
1926.06.12 சனி காலை 9 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் 16 வீதி விளக்குகளை கொள்வனவு செய்து வடடாரத்திற்கு இரண்டு வீதம் பொருத்துவது என R.R.நல்லையா பிரேரணை ஒன்றைக்கொண்டு வந்தார். அதனை R.சுப்பிரமணியம் வழிமொழிந்தார்.

*(Hindu Organ 24.06.1926)*

09.10.1926 சனி காலை 9.00 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் 1927ஆம் ஆண்டிற்குரிய வரி அறவிடுவது பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1927ம் ஆண்டிற்குரிய வாகன வரி விபரம் வருமாறு


| | |
|---|---|
| குதிரை வண்டி, வண்டில், ரிக்ஷோ | 5.00 ரூபா |
| இரட்டை மாட்டு வண்டி | 4.00 ரூபா |
| ஒற்றை மாட்டு வண்டி | 2ரூபா 50 சதம் |
| மிதிவண்டி | 1.00 ரூபா |
| **மிருகவரி** | |
| குதிரை, கோவேறு கழுதை | 2 ரூபா 50 சதம் |

இதே கூட்டத்தில் பொதுச்சுகாதாரப்பரிசோதகருக்கு மழைக்கோட் வாங்குவது பற்றி ஆராயப்பட்டது; அத்துடன் மருத்துவமாதுவின் நடவடிக்கை சரியில்லை எனவும் இனிமேல் தவறான நடவடிக்கையில் ஈடுபட்டால் பதவி நீக்கம் செய்யப்படுவாரெனவும் இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண உள்ளூராட்சி சபையில் அங்கத்தவர்களாக இருந்தவர்களின் புகைப்படங்களை வைத்திருப்போர் அவற்றை மின்னஞ்சல் மூலம் parames35@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தால் இந்த ஆவணம் பூரணமான ஒன்றாக அமையும்.

○ பொக்கிசன்

# அக்கியும் சிங்கமும்



தம்பி அந்தக் காவிச்சிரட்டையை எடுத்துக்கொண்டு வா" எண்டு அம்மா சொன்னா. ஆரோ சிங்கம் கீற வந்திருக்கினம் கலட்டி ஆக்கள் போலை கிடக்கு. புருசனும் பெண்சாதியுமா சைக்கிளிலை ஒரு சின்னப்பிள்ளையையும் கொண்டு வந்திருக்கினம். பிள்ளைக்கு இரண்டரை மூண்டு வயதிருக்கும் போலை கிடக்கு. பிள்ளையின் உடம்பு முழுவதும் பருப் போட்டிருக்கு. இப்பிடி
சின்னப்பிள்ளையளுக்கு ஏதாவது உடம்பில அவியல் மாதிரி வந்தா எல்லாரும் எங்களிட்டை தான் வாறவை சிங்கம் கீறுறதுக்கு. இப்பிடி அவியல் வாறதை அக்கி எண்டும் சொல்லுறவை. முந்தி சின்னம்மா (அம்மாவின் சின்னம்மா) எழுதுறவ. அவ செத்த பிறகு இப்ப அம்மா தான் எழுதுறவா. அக்கி எழுதுறது கூடுதலாய்ப் பின்னேரத்திலை தான்.
"உந்தக் கல்லிலை இருங்கோ வாறன்"
சொல்லி விட்டு அம்மா காவிச்சிரட்டைக்குள் தண்ணியை விட்டு கரைச்சுக்கொண்டு வந்து பலகையை எடுத்துபோட்டு விட்டு
அவைக்கு முன்னாலை இருந்தா. தாய் பிள்ளையின் சட்டையை கழட்டி விட்டு மடியில் பிள்ளையை வைத்துக்கொண்டு இருக்க
அம்மா விபூதியை எடுத்து பிள்ளையின் தலையில் போட்டு விட்டு நெற்றியிலும் பூசி வாய்க்குள்ளும் கொஞ்ச விபூதியை போட்டா.
பிள்ளை அழத்தொடங்கியிட்டுது; எங்கட அம்மாவும், அந்தத் தாயும் பிள்ளையைச் சமாதானப்படுத்திக்கொண்டு சிங்கம் கீறத் தொடங்கிட்டினம்.
பிள்ளையின் தாய் இரு கைகளாலும் பிள்ளையைத் தூக்கிப்பிடித்துக்கொண்டிருக்க அம்மா பிள்ளையின் முதுகில் சிங்கம் கீறத் தொடங் கினா. பிள்ளை தொடர்ந்து அழுது கொண்டிருந்திச்சு. பிள்ளைக்கு பிராக்குக் காட்டினபடி அம்மா பிள்ளையின் முதுகில் ஒரு அழகான சிங்கம் ஒன்று கீறி விட்டா. பிள்ளையை முன்பக்கம் திருப்பச்சொல்லி பிள்ளையின் மார்பிலும் வயிற்றிலும் கண்ணிமை மாதிரி கீறி ரெண்டு கன்னங்களிலும் காவியால் பொட்டும் வைத்து நெற்றியிலும் கீறினா.
கீறி முடிந்ததும் அம்மா எழும்பி கையைக் கழுவி விட்டு வந்தா. "நாளைக்கு வேண்டாம் நாளையிண்டைக்கு வாங்கோ .மூண்டு தரம் கீற சரியாய்ப்போயிடும் " என்டு அம்மா சொன்னா. புருசன் சேர்ட் பொக்கெற்றுக்குள் கையை விட மனைவி அம்மாவிடம் "அம்மா எவ்வளவு?' என்று கேட்டார். "அதொண்டும் வேண்டாம் .மூண்டு தரம் சிங்கம் கீறின பிறகு பிள்ளைக்கு பால் வைச்சு தோய வாருங்கோ .வேணுமெண்டா அம்மாளுக்கு ஒரு பூசை கட்டி விடுங்கோ" எண்டு அம்மா சொன்னா.
அக்கி எழுதுவது எமது பரம்பரை (இலவச) நாட்டு வைத்தியம். அம்மா இறந்த பின்னர் அதைச் செய்வதற்கு ஒருவருமில்லை.

அவியல் மாதிரி வந்தா எல்லாரும் எங்களிட்டை தான் வாறவை சிங்கம் கீறுறதுக்கு. இப்பிடி அவியல் வாறதை அக்கி எண்டும் சொல்லுறவை. முந்தி சின்னம்மா (அம்மாவின் சின்னம்மா) எழுதுறவ. அவ செத்த பிறகு இப்ப அம்மா தான் எழுதுறவா. அக்கி எழுதுறது கூடுதலாய்ப் பின்னேரத்திலை தான்.

# கூட்டமைப்பு:

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)

இந்த யதார்த்தம் புரிந்த நிலையிலேதான், தங்கள் அமைப்புக்களின் தலைவர்களைக் கொன்றவர்கள் என்று கருதப்படும் விடுதலைப் புலிகளோடு இணைந்து அரசியல் செய்வதற்கு ஈ.பி.ஆர். எல். எப் மற்றும் ரெலோ ஆகியவை முன்வந்ததையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

**சந்திரிக்காவின் தீர்வுத் திட்டம் குறித்து கருத்து வேறுபாடுகள்**

இந்த நிலையில் ,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்துக்கான உடனடித் தேவைப்பாடு முதலில் கிழக்கிலேயே உணரப்பட்டது. திருகோணமலையில் தமிழர்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை இழந்தனர். மட்டக்களப்பில் அதற்கு முன்னர் மூன்று தமிழர்கள் தேர்வான நிலைமாறி, இருவர் மட்டுமே தேர்வு செய்யப்பட்டனர். இதற்குக் காரணம், தமிழ்க்கட்சிகள் பிரிந்து நின்று போட்டியிட்டு வாக்குகளைச் சிதறடித்ததே. இந்த பின்னணியில் கிழக்கில் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டும் என்கிற கருத்து உருவாகிறது. கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் துணையோடு அதன் போசகர்களில் ஒருவரான சிவராம் இதற்கான காய் நகர்தல்களைச் செய்கின்றார். புலிகளின் ஒப்புதல் கிடைத்துவிடவே தேசிய அளவில் தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பதற்கான வேலைத் திட்டத்தில் பலரும் இணைகின்றனர். அதுவரை இராணுவப் பாதுகாப்புடன் இயங்கியவர்களுக்கு புலிகளிடமிருந்து உயிருக்கான உத்தரவாதம் கிடைத்தது. இந்த ஒன்றிணைவுக்குப் பிறகும் இலங்கை `இராணுவத்துடன் சேர்ந்து செயற்பட்ட சிலரை, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தமது அமைப்பில் இருந்து நீக்குவதாக அறிவித்தார்.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரையில், தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது சிறீலங்கா நாடாளுமன்றத்துக்கு தமிழர் சார்பில் அனுப்பட்ட பிரதிநிதிகள் என்பதற்கப்பால், பெரிய முக்கியத்துவம் எதுவும் அப்போது இல்லை. அதுதான் உண்மையும் கூட. அரசுடனான பேச்சுவார்த்தை, அரசியல் முடிவுகள், தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் செயற்பாடுகள் என அனைத்தும் புலிகளின் நெறிப்படுத்தலில்தான் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவ்வப்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் நடைபெறும் கூட்டங்களில் புலிகளால் தகவல்கள் பரிமாறப்படும் அவ்வளவே.

புலிகள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்பது குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் எப்போதும் இருவேறு கருத்துக்கள் இருந்து வந்தன. இதில் சம்பந்தனும் ஆனந்தசங்கரியும் பெரும்பாலும் ஒரே கருத்துடையவர்களே. சந்திரிக்கா ஆட்சியில், தமிழர் விடுதலைக் கூட்டணி எம்பியான நீலன் திருச்செல்வம் பங்குபற்றுதலோடு ஒரு தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்த தீர்வுப் பொதிதான் இதுவரையான இலங்கை அரசின் தீர்வுத் திட்டங்களில் சிறப்பானது எனலாம். ஆனால் அது விடுதலைப் புலிகளைப் புறம் தள்ளி உருவாவதாகக் கூட்டணிக்குள் விமர்சனம் உருவாகியது. ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலான மட்டக்களப்புக் கிளை அந்தத் தீர்வுப் பொதி புலிகளுடன் பேசாமல் முன்மொழியபடுவதை ஆதரிக்கப் போவதில்லை என முடிவு செய்தமை அப்போது தமிழர்விடுதலைக் கூட்டணிக்குள் விவாதமானது. தமிழர் விடுதலைக் கூட்டணி, ஆயுதம் தாங்கிய தமிழ்க் குழுக்களான ஈ.பி. ஆர். எல். எப் ,ரெலோ ஆகிய கட்சிகள் இணைவது இது முதல் முறையல்ல அதாவது அறவழிப் போராட்ட அமைப்பு என்ற பெயரைக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்த ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களோடு முகாம்களில் இருந்த1989 இல் நடைபெற்ற தேர்தலில் கூட்டுச் சேர்ந்திருந்தன. விடுதலைப் புலிகள் விரும்பியிராத அந்தத் தேர்தவில் தமிழர் விடுதலைக் கூட்டணி ,ஈ.பி.ஆர் .எல். எப், ரெலோ ஆகியவற்றோடு ஈ.என். டி .எல் .எப் ஆயுத இயக்கமும் இணைந்து போட்டியிட்டன. சுரேஸ் பிரேமச்சந்திரன் முதன் முதலில் அந்தத் தேர்தலில் வெற்றி பெற்றுத்தான் எம்.பியானார். சுரேஸ் யாழ்ப்பாணத்தில் போட்டியிட்டார். எதிர்க்கட்சித் தலைவராகவெல்லாம் இருந்த தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் மட்டக்களப்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். இந்தியாவின் அனுசரணையில் உருவான இந்தக் கூட்டணி பற்றி அறிந்த புலிகள் இவர்களைத் தோற்கடிப்பதற்காக, ஈரோஸ் இயக்கத்தை இந்தக் கூட்டணியை எதிர்த்துப் போட்டியிடுமாறு கூறுகிறார்கள். இந்திய இராணுவம், ஈ.பி.ஆர். எல். எப் நடத்தும் மாகாண சபை ஆட்சி என இருந்த சூழலில் கடும் சிரமத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த ஈரோஸ் அதிக இடங்களில் வெற்றி பெறுகிறது. வெற்றி பெற்ற ஈரோஸ் உறுப்பினர்கள் புலிகளின் உத்தரவுக்கு அமைய, எம்.பிகளாகப் பதவியேற்காமல் ராஜினாமாச் செய்கிறார்கள். இந்த தேர்தலில் ஈ. பி .ஆர். எல் .எப் சார்பில் மட்டக்களப்பில் வெற்றி பெற்ற சாம் தம்பிமுத்து கொலை செய்யப்பட அந்த இடத்துக்கு பத்திரிகையாளரான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவானார். இதே தேர்தலில்தான் புளொட் இயக்கத்தின் அரசியல்பிரிவின் செயலாளரான தாராகி சிவராம், அந்த இயக்கத்தின் சார்பில் தலைமை வேட்பாளராக களமிறங்கி தோல்வியைத் தழுவுகிறார்.

**தமிழர் ஐக்கிய கூட்டணியின் உதயம்**

1972 இல் தமிழர் ஐக்கிய கூட்டணி திருகோணமலையில் உதயமாகியது. சௌமியமூர்த்தி தொண்டைமான்,ஜீஜீபொன்னம்பலம்,செல்வநாயகம் ஆகிய முப்பெரும் தலைவர்களை இணைத்து உருவான தமிழர் ஐக்கிய கூட்டணி பின்னர் தமிழர்விடுதலைக் கூட்டணி என்றாகியது. தமிழர்கள் பலமிக்க அமைப்பாக இலங்கை அரசுடன் பேசுவதற்காகவே இந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டது. தமிழர்களின் வரலாற்றுப் புகழ்மிக்க வட்டுக்கோட்டைத் தீர்மானம் இந்தக் கூட்டணியின் பெரும் பிரகடனமாகிறது. 2009 இல் போர் முடிந்த பிறகு இப்படி ஒரு ஒற்றுமைக் கூட்டணியை அமைப்பது தொடர்பான பேச்சுகள் தொடங்கப்பட்டன. சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற கூட்டம் பலருக்கும் மறந்து போயிருக்கலாம். தமிழ்தேசியத் தரப்புக்கு எதிர்நிலையில் இருக்கும் டக்ளஸ் தேவானந்தாவைக் கூட இணைத்து ஒரே தமிழ்த் தரப்பாக அரசுடன் பேச வேண்டும் என்கிற கருத்துருவாக்கம் நடந்தது. ஆனால் யதார்த்தம் அதற்கு நேர் எதிர்த் திசையில் இருக்கிறது.

2009 இல் முடிந்துவிட்ட ஆயுதப் போராட்டக் காலத்தின் பின், தோற்றம் பெற்றிருக்கக் கூடிய புதிய காலம், அரசியல் செய்ய வேண்டிய காலம் . கலைஞர் கருணாநிதியின் அரசியல் சாணக்கியம் பற்றிச் சொல்லும் போது சொல்லுவார்கள், ஒருவரைக் கட்சியைவிட்டு ஓரங்கட்சி வெளியேற்ற வேண்டும் என கலைஞர் நினைத்துவிட்டால், குறித்த நபரே வெறுப்பாகி கட்சியைவிட்டு வெளியேறிச் சென்று விடும் சூழலை உருவாக்கிவிடுவார். குறித்த நபருக்கு வெளியேறுவதைத் தவிர வேறு தேர்வுகள் இருக்காது. இதைச் சுமந்திரன் சிறப்பாக செய்துள்ளார்.இலங்கை அரசியல் வரலாற்றில் தமிழ் அப்புக்காத்து அரசியல்வாதிகளின் தொடர்ச்சியாக அவர் உருவாகிவிட்டார். இராமநாதன், பொன்னம்பலம் ,செல்வநாயகம், திருச்செல்வம் என்று தொடரும் தமிழ் மேட்டுக்குடி, கொழும்பு மைய அப்புக்காத்து அரசியலின் தொடர்ச்சிதான் சுமந்திரன்.

சுமந்திரன் எப்படி ஐக்கியதேசியக் கட்சியோடு நல்லெண்ணத்தின் ஊடாகத் தீர்வைப் பெற்றுக் கொள்ள விளைந்தாரோ அப்படித்தான் டட்லி சேனநாயக்க அரசில் திருச்செல்வம் தமிழரசுக் கட்சியின் சார்பில் அமைச்சருமாகினார். அரசமைப்பை மாற்றும் பொறுப்பும் அவருக்கு வழங்கப் பட்டது. அவரும் தன் சட்டத்தரணி மூளையை வைத்து அந்த அரசுக்கு உதவினார். கடைசியில் ஒன்றும் நடக்காமல் தமிழரசுக் கட்சி அந்த அரசில் இருந்து வெளியேறியது "போன மச்சன் திரும்பி வந்தார்..... .. " என்ற சொலவடைக் கணக்காக மீண்டும் முதலில் இருந்து தொடங்கிறது அரசியல். ஒன்றும் மட்டும் தெளிவு .ஆயுதப் போராட்டத்தைக் கருத்தில் எடுக்காமல் அது முடிந்த இடத்தில் இருந்து தொடங்காமல் பழைய மொந்தையில் புதிய கள்ளாக பழைய தமிழரசுக் கட்சியைத் தூக்கி முன்னிறுத்தி புதிய சட்டவாளர் சுமந்திரன் அரசியல் செய்தால் அது எப்படியிருக்கும் என்பதற்குக் கடந்த பத்தாண்டுகள் நல்ல உதாரணம். போர் முடிவுக்கு வந்த இறுதி நாட்களிலும் அதற்குப் பின்னரும் மஹிந்தவின் மாளிகையிலும் கொழும்பில் உள்ள இந்திய இல்லத்திலும் பின்னர் புதுடில்லி சந்திப்புக்களிலும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் பணிப்புரைகள், திட்டங்கள் எல்லாவற்றுக்குமான சாட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே. ஆனால், அந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது இல்லை என்பதே கசப்பான உண்மை.

# மாற்று அணியின்...

(மூன்றாம் பக்கம் தொடர்ச்சி)

லினத்தன்மை மிக்க மகத்தான ஒரு மக்கள் ஆணை. அந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு ஐ.நா. இலங்கைத் தீவில் நிலைமாறுகால நீதியை முன்னெடுக்க முயற்சித்தது. ஆனால் அது தோற்கடிக்கப்பட்டது. இப்பொழுது இருப்பதோ தனிச் சிங்கள வாக்குகளால் கட்டி எழுப்பப்பட்டது என்று காட்டப்படும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை. இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு நிலைமாறுகால நீதியை முன்னெடுக்க முடியுமா?

அது கஷ்டம் என்ற காரணத்தால் தான் சம்பந்தர் வெளி அழுத்தத்தை வேண்டி நிற்கிறார். இந்தியா எம் பின்னால் நிற்கிறது ஏன்று அவர் கூறுவது அதனால்தான். அதாவது நிலைமாறு கால நீதியை அதன் சிதைந்த வடிவத்திலாவது நடைமுறைப்படுத்துவதற்கு வெளிநாடுகளின் அழுத்தம் தேவை என்று பொருள். மேற்கண்ட மூன்று அனுபவங்களையும் தொகுத்து சிந்தித்தால் ஒன்று தெளிவாகத் தெரியவரும். வெளி அழுத்தம் அல்லது மூன்றாவது தரப்பின் தலையீடு என்ற ஒரு விவகாரம் இல்லையென்றால் இலங்கைத் தீவில் இரண்டு இனங்களுக்கும் இடையே இணக்கம் ஏற்பட வாய்ப்பில்லை.

அப்படி என்றால் அந்த அழுத்தத்தை எப்படி உருவாக்குவது? அதுவும் அரசற்ற தரப்பாகிய தமிழ் மக்கள் அதை எப்படி உருவாக்குவது? நாடாளுமன்றத்தில் நெருப்பைக் கக்கும் உரைகளின் மூலம் அது உருவாகாது. நாட்டுக்கு வரும் வெளிநாட்டு பிரதிநிதிகளைச் சந்தித்து விட்டுக்கொடுப்பற்ற நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவதன் மூலம் அது உருவாகாது. அப்படி என்றால் இலங்கை அரசாங்கத்தின் மீது வெளித் தரப்புக்கள் நிர்ப்பந்தங்களைப் பிரயோகிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்? இது தான் கேள்வி. இந்தக் கேள்விக்கு பொருத்தமான தீர்க்கதரிசனம் மிக்க விடையைக் கண்டுபிடிப்பதில் தான் மாற்று அணி என்பது ஒரு புதிய அரசியல் செயல் வழியைத் திறக்க முடியும். கூட்டமைப்பு செய்தவை எல்லாம் பிழை என்று கூறும் மாற்று அணி தமிழ் அரசியலை பொருத்தமான விதத்தில் அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதாக இருந்தால் முதலில் மேற்கண்ட கேள்விக்கு விடை கண்டுபிடிக்க வேண்டும். இதை இன்னும் கூர்மையாகக் கூறின் நாடாளுமன்றத்துக்கு வெளியே தான் மாற்று அணி அதிகம் வேலை செய்ய வேண்டியிருக்கும். நாடாளுமன்றத்துக்கு வெளியே என்பது நடைமுறையில் மூன்று பரப்புகளைக் குறிக்கும். முதலாவது தாயகம். இங்கு வெகுசன மையப் போராட்டங்கள். இரண்டாவது தமிழகம். அங்கே இந்திய நடுவண் அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கும் போராட்டங்கள், நகர்வுகள். மூன்றாவது புலம் பெயர்ந்த தமிழ்ச் சமூகம். அங்கே ஐ.நா.வை நோக்கியும் தலைநகரங்களை நோக்கியும் முன்னெடுக்கப்பட வேண்டிய ஒரு லொபி. இப்படியாக புதுடில்லியை நோக்கியும் ஏனைய தலை நகரங்களை நோக்கியும் ஒரு லொபியை முன்னெடுக்க வேண்டும்.

அதேசமயம் நடந்தது இனப்படுகொலையே என்பதை நிரூபிக்கத் தேவையான சான்றாதாரங்களை உலகம் ஏற்றுக்கொள்ளும் ஒரு முறைமை ஊடாக முன்வைக்க வேண்டும். இதற்கு வேண்டிய ஒரு வழிவரைபடத்தை இரண்டு மாற்றுக் கட்சிகளும் இணைந்து உருவாக்க வேண்டும். இணைந்து உருவாக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியமான ஒரு முன்நிபந்தனை. இதுவிடயத்தில் தனித்தனியாக நின்று தனி ஓட்டம் ஓடினால் கூட்டமைப்பு கடந்த 11 ஆண்டுகளாக தமிழ் மக்களை எங்கே கொண்டு வந்து நிறுத்தியதோ அதே இடத்துக்குத் தான் அடுத்த ஐந்து ஆண்டுகளின் பின் தமிழ் மக்களைக் கொண்டு வந்து நிறுத்தும். எனவே ஐக்கியம் முக்கியம். இணைந்த செயற்பாடு முக்கியம். ஆகக்குறைந்தது ஏற்றுக்கொள்ளத்தக்க பொதுவிடங்களிலாவது ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அதற்கு வேண்டிய விடயப் பரப்புக்களை அடையாளம் காண்பதற்குரிய உரையாடல்களை இப்பொழுதே ஆரம்பிக்க வேண்டும். ஏற்கனவே தமிழ் மக்கள் பேரவையின் முக்கியஸ்தர் சிலர் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என அறிய முடிகிறது. அதைத் தமிழ் மக்கள் பேரவை உட்பட, ஏனைய சிவில் அமைப்புக்கள் ஒரு நிறுவனமயப்பட்ட செயற்பாடாக மாற்றி மாற்று அணியின்மீது தார்மீக அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும். அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கும் தோற்காமல் இருப்பதென்றால் அதை இப்போதே உடனடியாகத் தொடங்க வேண்டும்.

# அறிந்தும் அறியாமலும்





○ சனத்

## என்ன செய்யப்போகிறார்?

நகமும் சதையும்போல அரசியல் களத்தில் ஓரணியில் வலம் வந்த முன்னாள் அமைச்சர் பழனி திகாம்பரமும், முன்னாள் எம்.பி. திலகராஜும் தற்போது கீரியும் பாம்பும்போல அரசியல் போரில் ஈடுபட்டுவருவதால் அடுத்து என்ன நடக்கும் என தெரியாமல் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தொண்டர்கள் திண்டாடி வருகின்றனர்.

2015 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்கி வெற்றிக் கனியை ருசித்த திலகர் இம்முறையும் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகும் கனவுடனேயே வலம் வந்தார். ஆனால் அவருக்கு வாய்ப்பளிக்காமல் கடைசிநேரத்தில் கழுத்தறுப்புச் செய்யப்பட்டது.

இதனால் மனமுடைந்துபோன திலகர் நுவரெலியாவிலிருந்து கொழும்பை நோக்கி நடையைக்கட்டினார். தேர்தல் பிரச்சாரத்தின்போது நுவரெலியாவைவிட்டு மொனறாகலை, இரத்தினபுரி மாவட்டங்களுக்குசென்று பரப்புரைகளில் ஈடுபட்டார். திகாவை உளரீதியாக தாக்கும் விதத்திலான அரசியல் நகர்விலும் ஈடுபட்டார். கடைசியில் திகாம்பரம் கடுப்பானார். ஆனாலும் பொறுமைகாத்தார். மறுபுறத்தில் திலகரும் மறைமுகமாக தாக்குதல்களை தொடுத்தே வந்தார்.

வாக்களிப்பு தினத்தன்றுகூட தேசிய மக்கள் சக்தி வேட்பாளருக்கு வாக்களித்துவிட்டு அது தொடர்பில் திலகர் முகநூல் பதிவொன்றையும் இட்டார். ஆனால், தேர்தல் முடிவடைந்த பின்னர் 2 கோடி ரூபா தொடர்பில் திலகரால் வெளியிட்ட கருத்தே தற்போது பெரும் புலயாக மையங்கொண்டுள்ளது. 'திலகருக்கு சீட் வழங்க 2 கோடி ரூபா கேட்கப்பட்டதாம்' என்ற தொனியில் முகநூல் போராளிகள் கம்பு சுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தொழிலாளர் தேசிய முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம் ஆகியவற்றில் திலகர் வகிக்கும் பதவிகளில் இருந்து அவர் எதிர்வரும் 23 ஆம் திகதி நீக்கப்படவுள்ளார். அவ்வாறு நடைபெற்ற பின்னர் என்ன நடக்கும்?

1965 ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளராக செயற்பட்ட அமரர் செல்லச்சாமி,1993 ஆம் ஆண்டு காங்கிரஸைவிட்டு வெளியேறும் போது 'பொதுச்செயலாளர்' என்ற அடிப்படையில் அரசியல் கிளையின் உரித்தையும் (சேவல் சின்னம்) எடுத்துச் சென்றார்.

இந்நிலையில் 14 ஆண்டுகளுக்கு பிறகு 2007 இல்தான் காங்கிரசுக்கு அவர் சேவல் சின்னத்தை விட்டுக்கொடுத்தார். சின்னத்தை மீளப்பெறுவதற்கு ஆறுமுகன் தொண்டமான் கடும் பிரயத்தனங்களில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்பட்டது.

அதேபோல் தொழிலாளர் தேசிய சங்கம், அரசியல் கிளையாக பதிவுசெய்யப்பட்டபோது ஆரம்பத்தில் மயில் சின்னம் வழங்கப்பட்டது. அதன் பொதுச்செயலாளராக செயற்பட்டவர் சின்னத்தை ரிஷாட் பதியுதீனுக்கு வழங்கிவிட்டார். தற்போது ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சின்னமாக அது திகழ்கின்றது.

தற்போது தொழிலாளர் தேசிய சங்கத்தின் அரசியல் கிளையான தொழிலாளர் தேசிய முன்னணியின் பொதுச்செயலாளராக எம். திலகராஜ் திகழ்கின்றார். எனவே அவர் சங்கத்தின் அரசியல் கிளையை எடுத்துச்செல்வாரா என கேள்வி எழுப்பட்டுள்ளது.

முன்னணியின் யாப்பை உருவாக்கியதில் திலகருக்கு பெரும் பங்குண்டு எனக் கூறப்படுகின்றது. எனவே யாப்பில் எவ்வாறான சரத்துகள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டுவருகின்றது.

இராஜினாமா கடிதத்தை ஏற்கனவே சங்கத்தின் தலைவரிடம் கையளித்துவிட்டதாக திலகர் கூறியுள்ளார். அதேபோல் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பேராளர் குழுவுக்குத்தான் அதிகாரம் இருப்பதால் திலகரால் புரட்சியில் ஈடுபடமுடியாது. எனவே கட்சியைவிட்டு அவர் கௌரவமாக வெளியேறுவார் என்பதே 'லேட்டஸ்ட்' தகவல்

## வருவார் மாகாண சபைக்கு...!



பொதுத்தேர்தலில் ஏற்பட்ட தோல்வியால் நொந்து நூடில்ஸாகியுள்ள ஹிருணிக்கா பிரேமச்சந்திர, இன்னமும் கொலன்னாவையிலுள்ள வீட்டிலேயே முடங்கியிருக்கிறாராம். முக்கியமான பிரமுகர்கள் வீடுதேடிச்சென்று அவரை சந்தித்து உற்சாகப்படுத்தினாலும் சிறிது காலத்துக்கு தனக்கு ஓய்வு வேண்டுமெனக்கூறி வெளியில் வருவதை ஹிருணிகா தவிர்த்துவருகிறாராம்.

தாய், கணவன் மற்றும் குழந்தையுடன் சிறிதுகாலம் நிம்மதியாக வாழ்ந்துவிட்டு, அடுத்த கட்டம் பற்றி சிந்திக்க இருப்பதாக தனக்கு நெருக்கமான சிலரிடம் உள்ளக்குமுறல்களை ஹிருணிக்கா வெளியிட்டுள்ளாராம்.

எனினும் ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி தலைமைப்பதவியை ஹிருணிகாவுக்கு வழங்கி அவரை செயற்பாட்டு அரசியலில் தொடர்ந்தும் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என சஜித்துக்கு சிலர் ஆலோசனை முன்வைத்துள்ளனராம்.

அதுமட்டுமல்ல விரைவில் மாகாணசபைத் தேர்தல் வரவுள்ளதால் அந்தத் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை அவருக்கு வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எது எப்படியோ விரைவில் மகளிர் அணியில் முக்கிய பதவியை ஹிருணிகா ஏற்பார் என்பது உறுதி.

## சம்பந்தருக்கு மரியாதை




9ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நடைபெற்று முடிந்தது. 73 ஆண்டுகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி இல்லாமல் சபை கூடியமை உட்பட சில முக்கிய சம்பவங்கள் நடைபெற்றன: இவை தொடர்பில் ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர்கள். ஆனால் இதுவரை வெளிவராத தகவல் இது.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை முடிவடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எம்.பிக்களுக்கான சிற்றுண்டிச் சாலையில் தேநீர் விருந்து வைக்கப்பட்டது.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் பங்கேற்றிருந்தார். தனது கர்ப்பிணி மனைவி சகிதம் அவ்விடத்துக்குவந்த நாமல் ராஜபக்ச சம்பந்தனைக் கண்டதும் அவர் அருகில் வந்தார்.

"சேர் எப்படிச் சுகம்?" என புன்னகையுடன் விசாரித்ததுடன், குனிந்து சம்பந்தனை வணங்கினார் நாமல். உடனே முதுகில் தட்டி நாமலுக்கு சம்பந்தனும் ஆசிவழங்கினார்.

அரசியல் மேடைகளில் அரசியலுக்காக விமர்சனங்களை முன்வைத்தாலும் சிரேஷ்ட தமிழ் அரசியல்வாதியொருவருக்கு நாமல் செலுத்திய மரியாத அங்கிருந்த அனைவரையும் வியப்படையச்செய்தது.




## எப்படி இருந்தவர் இப்படியாகிட்டாரே

அரசியலில் சுழிவு, நெளிவு, தந்திரம், மந்திரம், எதிர்நீச்சல் என அத்தனை வித்தைகளையும் கற்றுவைத்துள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலானது வரலாற்று தோல்வியை வழங்கியுள்ளது.

அரசியல் நகர்வுகளை துல்லியமாகக் கணிக்கக்கூடிய அதேபோல் பல தடவைகள் தியாகங்களைசெய்து வெற்றிநடைபோட்ட ரணில் இம்முறை ஏன் இப்படியொரு முடிவை எடுத்தார் என்பதே பலரினதும் கேள்வியாகும்.

தேர்தலில் குறைந்தபட்சம் 10 ஆசனங்கள் தமது அணிக்கு கிடைக்கும் என ரணில் உறுதியாக நம்பினார். அவ்வாறு கிடைத்தால் கட்சியில் மறுசீரமைப்பை மேற்கொண்டு அதிகாரம்மிக்க பதவியொன்றை உருவாக்கி தலைமைப்பதவியை விட்டுக்கொடுக்க தயாராகவே இருந்தார். எனினும் அவரின் எதிர்ப்பார்ப்புகளையெல்லாம் தேர்தல் முடிவுகள் தவிடு பொடியாக்கியுள்ளன. அடுத்து என்னவென்று தெரியாமல் ரணிலே பரிதவித்து வருகிறார்.

இந்நிலையில் சர்வதேச அமைப்பொன்றில் அவருக்கு முக்கிய பதவியொன்று வழங்கப்படவுள்ளது எனவும் அதற்காக விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும் சமூகவலைத்தளங்களில் தகவல்கள் வெளியாகின. எனினும், அவ்வாறு எந்தவொரு பதவிக்கும் ரணில் விண்ணப்பிக்கவில்லையெனவும், பதவியேற்குமாறு அவருக்கு எந்தவொரு அமைப்பும் இன்னமும் கோரிக்கை விடுக்கவில்லையெனவும் ரணிலுக்கு நெருக்கமான ஒருவர் தெரிவித்தார்.

# கொரோனா

## கொடுங்கனவுக் காலத்தில்.....!

○ உளவாளி




உலகமே பயந்து நடுங்கும் கொரோனாவுக்கு இலங்கையில் மட்டும் ஐந்து சதத்துக்கும் மதிப்பில்லை. " நானும் ரவுடிதான். நானும் ரவுடிதான்" என்று கொரோனாவும் தன் பங்குக்கு தினமும் நாலைந்து பேர் மீது தொற்றிக் கொண்டே இருந்தாலும் நாங்கள் அதனைப் பொருட்டாகவே மதிப்பதில்லை. மாஸ்க் போடாமல் தான் வீதிக்கு இறங்குவோம். கல்யாணம், கொண்டாட்டம் என்று எல்லாமே களைகட்டத் தொடங்கிவிட்டன. இரவு 10 மணி வரையும் கடைகளையும் திறக்கச் சொல்லிவிட்டார்கள். நல்லூர்த் தேரென்றால் கூட , கும்பலாகப் போய் நெரிபட்டுத்தான் கும்பிடுவோம். கிருமி நீக்கும் திரவத்தை ஒரு சாட்டுக்காக நாலைந்து நாட்கள் அலுவலங்களுக்கு முன்னால் வைத்து விட்டு, பின்னர் காணாமல் போகச் செய்துவிடுவோம். குறைந்த பட்சம் கைகழுவும் வசதி கூட பல பொது இடங்களிலும், அலுவலகங்களிலும் செயலிழக்கத் தொடங்கிவிட்டன. 'ரப்பை' திறந்தால் தண்ணீருக்குப் பதில் வெறும் காற்றுத்தான் வருகின்றது. சிலவேளைகளில் காற்றில் கைகழுவினால் தான் கொரோனா அழியுமென்று எவராவது கண்டுபிடித்துவிட்டார்களோ தெரியவில்லை.

ஆனால் இதே கொரோனாவுக்கு இலங்கை நடுங்கி, பேதி போன காலமும் இருந்தது. அது அப்படியொன்றும் மிக முந்திய கி.மு காலமல்ல. வெறும் ஐந்து மாதங்களுக்கு முன்னர் தான். அப்போது யாரேனும் தப்பித்தவறி " கொரோனா " என்று உச்சரித்தால் கூட கால் பிடரியில் அடிபட, சாரம் அவிழ்ந்து விழ ஓட்டமெடுத்தவர்கள் பலர். பெயரைக் கேட்டாலே சும்மா அதிர்ந்தது மட்டுமல்லாமல், உதறல் எடுத்து, பலருக்குப் பயக்காய்ச்சலும் வந்தது. சும்மா தும்மினால் கூட கொரோனாவாக இருக்குமோ என , இனிக் கட்டாயம் சாவுதான் என்கிற துர்க்கனவில் மூழ்கியவர்களும் உண்டு.

கொரோனா பற்றிய கொடுங்கனவு உச்சமாக இருந்த காலத்தில், யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்று ஏற்பட்டபோது எழுந்த அதிர்வலைகளுக்கு அளவேயில்லை. 'இனி அவ்வளவுதான், யாழ்ப்பாணமே கொரோனாவால் அழியப்போகின்றது' என்ற ஓலங்கள் எழத் தொடங்கின. கொரொனா தொற்றியவர்கள் மட்டுமல்ல, அவர்களோடு தொடர்புடையவர்கள், அயலில் வசிப்பவர்கள், அவர்களுக்கு நோய்க்காலத்தில் உதவி செய்தோர் என அனைவரையுமே கொலைகாரர்கள் போன்றே வெறுப்போடு நோக்கினார்கள். தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கினர். பேசினால் கூட குற்றமென போன் நம்பரைக் கூட 'புளொக்' செய்தார்கள். கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிக்குப் போனாலே பாவம் என்பது போல அந்த இடத்தைப் பற்றி பலவாறு சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு கிலியை இன்னும் அதிகப்படுத்தினர்.

இந்தக் கொடுந்துயர்க் காலத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் உடல், உள ரீதியாகச் சந்தித்த வேதனைகள் சொல்லி மாளாதவை. கிட்டத்தட்ட அவர்கள் நரகத்தின் மேல் உழல்வதாக உணர்ந்தனர். அவர்களைக் காப்பாற்ற மட்டுமல்ல, ஆதரவோடு பற்றிக்கொள்ளக் கூட ஒருவரும் முன்வரவில்லை. அந்தப் புறக்கணிப்பு வேளைகளில் அவர்கள் பட்ட இன்னல்களை, சவால்களை, மனப்போராட்டங்களை பதிவு செய்வதனூடாக , கொரோனா பற்றிச் சமூகத்தின் தவறான கண்ணோட்டத்தை நீக்கவும், சிவற்றை நாம் கற்றுக்கொள்வதனூடாக சரியான விழிப்புணர்வை உண்டுபண்ணவும் யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக கொரோனாவால் பாதிப்புற்றவரின் கொரோனாக் கால அனுபவங்கள் இங்கு பகிரப்படுகின்றன. வாருங்கள் அவரின் கொடுங்கனவுக் காலத்துக்குள் நுழைவோம்.

### வாழ்வைப் புரட்டிப் போட்ட பேனா

" நான் நீண்ட காலமாக கட்டட ஒப்பந்தகாரராகத் தொழில் செய்து வருகிறேன். என்னுடன் பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் வேலை செய்து வருகின்றனர். அவ்வாறு எனக்குக் கீழ் வேலை செய்து வரும் இளைஞன் ஒருவன் மூலம் எனக்கு ஒரு தகவல் கிடைத்தது. ' அரியாலைப் பகுதியில் கிறிஸ்தவ மதப்பிரிவொன்றைச் சேர்ந்த போதகர் பாடசாலை ஒன்றை அமைக்க திட்டமிட்டு இருக்கின்றார். அந்தப் போதகரோடு தொடர்பு கொண்டால் வேலைக்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்' என்பதே அந்தத்தகவல். உடனேயே நான் போதகரைத் தொடர்பு கொண்டு அவரைச் சந்திக்க அரியாலைத் தேவாலயத்துக்கு அருகில் அவர் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றேன்.

அந்தச் சந்திப்பின் போது மேசையின் ஒருபக்கம் அந்தப் போதகரும் மறுபக்கம் நானுமாக உட்கார்ந்து கலந்துரையாடினோம். அந்தக் காலப்பகுதியில் கொரோனா எவருக்கும் ஏற்பட்டிருக்கவில்லை, அதனால் அப்போது நாங்களும் கொரோனா கால சுகாதார நடைமுறைகளை பின்பற்றியிருக்க வில்லை. அவருடைய பேனாவையே நானும் வாங்கி கையொப்பம் இடுவதற்கு பயன்படுத்தினேன். ஒரு பேனா என் வாழ்வையே புரட்டிப் போடுமென்று அப்போது நான் நினைக்க வில்லை. இதன் பின்னர் சிலநாள்கள் கழித்து எனது உடல் நிலையில் சில மாற்றங்கள் ஏற்படுவதை அவதானித்தேன். வழமையாக வரும் சாதாரண காய்ச்சல் என்று நினைத்து அருகில் உள்ள மருத்துவ நிலையத்தில் மருந்து எடுத்தேன், அப்படி இருந்தும் காய்ச்சல் குறைவதாக இல்லை. அடுத்த நாள் இன்னும் காய்ச்சல் கூடியதே தவிர குறையவில்லை. காய்ச்சல் வீரியத்தாலும், என் போனில் பகல் நேர 'டேட்டா' முடிவடைந்திருந்ததா லும் போனையே கையில் எடுக்கவில்லை, அப்படியே நித்திரையாகி விட்டேன். இதனால் அன்று பகல் இணையச் செய்திகளையோ, சமூக வலைத்தளங்கள் எதனையுமோ பார்க்க முடிய வில்லை.

### நள்ளிரவில் வந்த அதிர்ச்சி

நள்ளிரவு பன்னிரண்டு மணியை கடந்தபின்னர் இரவு நேர 'டேட்டா' இணைப்புக் கிடைத்தது. இதனால் சமூக வலைத்தளங்களில் இருந்து பகல் பதிவிடப்பட்ட பேஸ்புக் பதிவுகளைப் பொழுதைப் போக்க பார்க்கத் தொடங்கினேன். பார்க்கப் பார்க்க பெரும் அதிர்ச்சி. அன்று பேஸ்புக் முழுக்க,

" சுவிஸ் போதகருக்கு கொரோனா... அனைவரும் பிரார்த்தனை செய்யுங்கள், சுவிஸ் போதகருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதி" போன்ற செய்திகளே நிறைந்திருந்தன.

அவற்றை பார்த்ததும் உடம்பு பயத்தில் நடுங்கியது. உலகமே இருண்டது போல் உணர்வு. மனைவி ,பிள்ளைகள், உறவுகள், கடந்த சில நாள்களாகப் , போய்வந்த இடங்களில் இருப்பவர்கள், நண்பர்கள் இவர்களுக்கெல்லாம் என் மூலமாகக் கொரோனா பரவப் போகின்றதே என்று குற்ற உணர்வு என்னை ஆட்டிப் படைத்தது. இதனால் இரவு முழுவதும் நித்திரை யில்லாமல் தவித்தேன் என்ன செய்வது..? எனக்கேற்பட்டுள்ள உடல் நிலை மாற்றம் நிச்சயமாக கொரோனா தான் என்பதை ஊகிக்க முடிந்தது. என்னால் எவருக்கும் கொரோனாத் தாக்கம் தொற்றியிருக்கக் கூடாது என்று இறைவனை வேண்டுவதைத் தவிர வேறு வழி எதுவும் இருக்கவில்லை.

## " சாவின் எல்லைவரை சென்று மீண்டேன்"

வி. சிவானந்தன் (வயது– 41) ( கட்டட ஒப்பந்தகாரர். யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுக்கு முதன் முதலாக இலக்கானவர் இவர் தான். சுவிஸில் இருந்து வந்த மத போதகரை தொழில் நிமித்தமாகச் சந்தித்ததால், இவர் மீது கொரோனா தொற்றிக்கொண்டது. அத்துடன் மிக நீண்டநாட்கள் சிகிச்சை பெற்ற பின்னர்தான் அவரால் இயல்பு வாழ்வுக்கும் மீள முடிந்தது. இவர் யாழ்ப்பாணம், தாவடியைச் சேர்ந்தவர். அதனால் இவருக்கு கொரோனா என்று உறுதியானதும் தாவடிப்பகுதி ஒட்டுமொத்தமாக முடக்கப்பட்டது.)



#### சிகிச்சை ஆரம்பம்

காலை விடிந்ததும் அவசர அவசரமாக வெளிக்கிட்டு முகக் கவசத்தை அணிந்துகொண்டு , யாழ் போதனா வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கும் ஒரு தயக்கம் எனக்கு. வெளி நோயாளர் பிரிவுக்குச் சென்றால் அங்கு சிகிச்சை பெற வந்தவர்கள் ,வைத்தியர்கள், ஊழியர்கள் எனப் பலருக்கும் என்னால் கொரோனா தொற்றக் கூடுமோ என்று சிந்தித்தேன். அதனால் வெளியே நின்று கொண்டு அங்கிருந்த ஊழியர்களிடம் “ நான் கொரோனா தொற்றுக்குள்ளான போதகரைச் சந்தித்துள்ளேன். எனக்கும் அதற்குரிய அறிகுறிகள் இருப்பதால் பரிசோதனை செய்ய வேண்டும் “ என்பதை வைத்தியசாலை நிர்வாகத் துக்குத் தெரியப்படுத்தினேன்.

உடனடியாகவே வைத்தியசாலையில் கொரோனாவுக்கென பிரத்தியேகமாக தயார் நிலையில் இருந்த இடத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டேன்.மறுநாள் மாலை எனக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்ட தகவல் எனக்குச் சொல்லப்பட்டது.இதை நான் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தேன், ஆனாலும் கொரோனாத் தாக்கம் உறுதியாகியுள்ளது எனச் சொல்லப்பட்ட போது பெரும் மனத்துயர் நெஞ்சை அடைத்தது. என் கதி அவ்வளவுதான் என முடிவே கட்டிவிட்டேன்.

#### ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகம்

அன்று மாலையே அம்புலன்ஸ் வண்டி மூலம் அங்கொட ஐ.டி.எச் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். சிறு அறை ஒன்றுக்குள் அடைக்கலமானேன். வேலைக்காக இருக்கக் கூட நேரமில்லாமல் பம்பரம் போல சுற்றித்திரிந்த எனக்கு , திடீரென ஓர் சிறு அறைக்குள் முடங்குவது கடினமாகவே இருந்தது..ஆனாலும் எனக்காகவும் , குடும்பத்துக்காகவும், அயலவர்களுக்காகவும் ஓர் இடத்தில் முடங்கி இருப்பதே பாதுகாப்பு என்பதை உணர்ந்து எமது மனதைத் தேற்றிக்கொண்டேன். ஒவ்வொரு கணமும் ஒவ்வொரு யுகங்களாகக் கடந்தன. புதிய இடம் ,வேற்று மொழி , நோய்த்தாக்கம் எப்படி இருக்குமோ, குணமடைய எவ்வளவு காலம் ஆகுமோ என்ற ஏக்கங்களுடனேயே அங்கொடை ஐ.டி.எச் மருத்துவமனைக்கு நான் வந்து சேர்ந்திருந்தேன். ஆனால் அதற்கு மாறாக அங்கொட மருத்துவமனையைச் சேர்ந்த மருத்துவர்கள் முதல் சுகாதார ஊழியர்கள் வரை எந்தப் பாகுபாடும் இல்லாமல் அன்பாகவும் அக்கறையோடும் என்னைக் கவனித்துக்கொண்டார்கள். உணவு தொடக்கம் சகல அடிப்படைத் தேவைகளும் எந்தவித குறைபாடுகளும்



இல்லாமல் கிடைத்தன. அடிக்கடி பரிசோதனை செய்தார்கள். கொரோனாத் தொற்றாளர்களை கவனிப்பதில் பெரும் பொறுப்பை தாதியர்களே தாங்கிக்கொண்டார்கள்.

#### சாவின் எல்லையில்...

அங்கொட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஒரு சில நாட்களில் மூச்சு விடுவதில் பெரும் சிரமத்தை எதிர்கொண்டேன். உடனடியாக அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டேன். மூச்சுப் பிரச்சினை சீராகும் மட்டும் தொடர் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டேன். அப்போது சிலர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர் என்ற செய்தி கிடைத்த போது, நானும் அப்படி இறந்துவிடுவேனோ என்ற பயம் ஏற்பட்டு, சாவின் எல்லையில் நிற்பதைப் போல உணர்ந்தேன்,

அந்தச் சமயங்களில் யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி வாரத்துக்கு இரண்டு தடவைகளாவது தொலைபேசியில் தொடர்புகொண்டு நலன் விசாரிப்பார். அவருடைய நலன் விசாரிப்பு மிகுந்த ஆறுதலாகவும், நம்பிக்கையூட்டுபவையாகவும் இருந்தன. வைத்தியசாலையில் இருந்த நாட்களில் தொலைபேசியில் பிள்ளைகளுடன் கதைப்பேன். இருப்பினும் அவர்களை நேரில் பார்த்துப் பழக முடியாததால் பெரும் துக்கம் எப்போதும் என்னைச் சூழ்ந்திருந்தது.

#### திரும்பியது உயிர்

ஒரு மாத சிகிச்சையின் பின்னர் பரிசோதனையின் போது என்னுடலில்கொரோனா கிருமிகள் இல்லை என முடிவுகள் கிடைத்தன. பெரும் ஆனந்தம். ஆனால் அடுத்த பரிசோதனை முடிவில் இன்னும் கொரோனா என்னில் இருப்பதாகக் காட்டியது. மொத்த சந்தோசமும் உடைந்து போனது. இப்படி ஒருமுறை மாறிவிட்டது போலவும்,அடுத்த முறை இருப்பது போலவும் கொரோனா முடிவுகள் மாறி மாறி வந்து பெரும் மனவுளைச்சலைக் கொடுத்தன.

கடைசியாக 64 நாட்களின் கொரோனா வைரஸ் என்னை விட்டு முற்றாக நீங்கி, பின்னர் பூரணமாக நலம் பெற்று அம்புலன்ஸில் வீட்டுக்கு வந்து சேர்ந்த போதுதான் எனக்கு போன உயிர் திரும்ப வந்தது போல இருந்தது.

#### சுற்றிவளைக்கப்பட்ட தாவடி

எனக்குக் கொரோனாத் தொற்று உறுதியானதைத் தொடர்ந்து தாவடிப் பகுதியில் எமது அயலை அண்டிய பகுதிகள் இராணுவம் மற்றும் பொலிசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டு அனைவரும் வீடுகளுக்குள் முடக்கப்பட்டனர் . என்னால் அத்தனை மக்களும் பெரும் சிரமங்களுக்கு ஆளானார்கள். எங்கள் வீட்டிலுள்ளோரும் இராணுவம் மற்றும் பொலிசாரினால் கண்காணிப்பின் கீழ், சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர். ஏற்கனவே ஊரடங்குச் சட்டத்தை எதிர்பார்த்து சமையலுக்குத் தேவையான பொருட்களை வீட்டில் வாங்கி வைத்திருந்தோம், அதைத் தவிர எமது பகுதி கிராம சேவையாளர் ,சுகாதார உத்தியோகத்தர் மற்றும் அயலில் வசிப்பவர்களும் உணவுப் பொருட்களை வீட்டாருக்கு வழங்கியுள்ளனர். நான் வீட்டுக்கு வந்த பின்னரே இராணுவக் கண்காணிப்பு அகற்றப்பட்டது. வீட்டிலும் 28 நாட்கள் சுய தனிமைப்படுத்தலில் இருந்த பின்னர்தான் வெளியே வந்தேன்.

#### கைவிட்டுப் போன தொழில்

இப்போது கூட நான் வெளியில் செல்லும் போது , என்னைக் கண்டதும் ஏதோ பேயைக் கண்டவர்கள் போல சிலர் முகக் கவசத்தை அவசரமாக அணிவார்கள். உறவுகள் அனைவருக்கும் நான் தொலைபேசி மூலம் அழைப்பெடுத்து, எவரும் வீட்டுக்கு வர வேண்டாம் என்று தெரிவித்துள்ளேன். நானும் யாருடைய வீட்டுக்கும் செல்வதில்லை. என்னுடைய வருமானம் தான் இந்தக் கொரோனா தொற்றியதால் அடிபட்டுப் போய்விட்டது. பல ஒப்பந்தங்கள் கைவிட்டு போயின. கொரோனா அச்சத்தலோ என்னவோ புதிய ஒப்பந்தங்களும் கிடைக்கவில்லை. இதனால் பெரும் பொருளாதாரச் சுமை எனக்கு. மற்றும்படி சிலரின் விசமத்தனமான கருத்துக்களை நினைத்து நான் வருந்துவதில்லை. இப்போது யாருமே கொரோனா குறித்து முன்னெச்சரிக்கையோடு செயற்படுவதைக் காண முடிய வில்லை. அலட்சியமாக இருக்கின்றனர். அலட்சியத்தை தவிர்த்து எச்சரிக்கையாக இருத்தல் அவசியமானது.

ஆவதும் , அழிவதும்

## மேலுமொரு பிரச்சினை

கடந்தவாரம் அதிரடி அரங்கில் , மாணவர்களின் மதியபோசனப் பிரச்சினை தொடர்பில் சொல்லியிருந்தோம். இன்னும் அந்தப் பிரச்சினை நீடிப்பதாக பலர் எமக்கு தொடர்ந்து முறையிடுகிறார்கள். இப்போது மேலுமொரு பிரச்சினையும் சேர்ந்துள்ளது. திங்கட்கிழமை முதல் பெரும்பாலான பாடசாலைகள் வழமைபோல இயங்கவுள்ளன. அதாவது இதுவரை கட்டம் கட்டமாக அழைக்கப்பட்ட மாணவர்கள் இனிமேல் ஒட்டுமொத்தமாக முன்னரைப் போல ஒன்றாக வருகை தரப் போகின்றார்கள். பாடசாலைக்குள் உள்நுழையும் போது, மாணவர்கள் கைகழுவி வெப்பநிலை பரிசோதிக்கப்பட்ட பின்னரே உட்செல்ல னுமதிக்கப்படு கின்றனர்.

ஆனால் இனிமேல் பாடசாலைக்கு பஸ்களில் வரும் மாணவர்கள் இ.போ.ச பஸ்களிலோ, தனியார் பஸ்களிலோ வரும் போது அங்கு எப்படி மாணவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படப்போகின்றது என்பதே பெற்றோரின் ஆதங்கம். பொதுப்போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களில் எல்லா இடத்தைச் சேர்ந்தவர்களும் ஏறி, இறங்குவர். அப்படி எவராவது கொரோனாவை பஸ்ஸில் பரப்பிவிட்டால், மாணவர்கள் மூலம் அது இன்னொரு கொரோனா அலையை ஏற்படுத்திவிடும். பாடசாலைகளை இயங்கச் செய்யும் போது, இப்படியான விடயங்களிலும் பொறுப்பானவர்கள் கவனம் செலுத்துவது நல்லதல்லவா?




- மின்னல்




## ரீ.விக்குள் புதையல்?

சதுரங்க வேட்டை படம் பார்த்திருப்பீர்கள், 'ஒருவனுடைய ஆசையைத் தூண்டுவதுதான் ஏமாற்றுவதன் முதற்படி" என்று அதில் சொல்லி, எப்படி மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கிறார்கள் என்பதை அதில் காட்டியிருப்பார்கள்.

இப்போது அதேபாணியில் யாழ்ப்பாணத்தில், 'செம்பாதரசம்' என்ற ஒன்றைத் தேடி ஒரு வேட்டை நடக்கிறது. அணு ஆயுதத் தொழினுட்பத்துக்கு இந்த செம்பாதரசம் முக்கியமானது எனவும், அது பல கோடிரூபா பெறுமதியானது என்றும், முன்னைய காலத்தில் பயன்பாட்டில் இருந்த 'வால்வு; மொடல் தொலைக்காட்சி, வானொலி என்பவற்றில் அது இருப்பதாகவும் ஒரு கதை இப்போது பரவலாக அடிபடத் தொடங்கியுள்ளது.

இந்தக் கதையைக் கேள்விப்பட்ட பலர் பழைய மொடல் தொலைக்காட்சிகள், வானொலிகளைத் தேடி வாங்கத் தொடங்கியுள்ளனர்.அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டில் இருந்த பழையமொடல் தொலைக்காட்சியை ஒருவர் திடீரென வந்து விலைபேசி வாங்கிச் சென்றுள்ளார். அதன் பின்னர் இன்னொரு வியாபாரி அவர்களின் வீட்டுக்கு வந்து பழைய மொடல் தொலைக்காட்சியைத் தந்தால் ஒரு லட்சம் ரூபா தருவதாக ஆசை காட்டியுள்ளார். அதை நம்பி இவர்கள் முன்னர் விற்ற அந்த தொலைக்காட்சியை வாங்கி வந்து, குறித்த வியாபாரிக்கு தகவல் வழங்கினர். அவரும் வந்து பார்த்துவிட்டு, "நான் கொண்டு போய் சோதித்து விட்டு காசைத் தருகின்றேன்" என்றிருக்கிறார். ஆனால் வீட்டுக்காரரோ " அப்படி இல்லை, ஒன்றில் காசைத் தந்துவிட்டு கொண்டு செல்லுங்கள், இல்லையேல் இங்கேயே சோதித்துவிட்டுச் சொல்லுங்கள்" என்றிருக்கிறார்கள். அதனால் வியாபாரி பிறகு வருவதாகச் சொல்லிவிட்டு நழுவியுள்ளார்.

இதுமட்டுமல்லாமல் நகரப் பகுதியில் பல வீடுகளில் இப்படி பழையமொடல் தொலைக்காட்சிகள் இருக்கின்றனவா என்று பலர் அலைவதாகவும் தகவல்கள் உண்டு. உண்மையாகவே அப்படி செம்பாதரசம் என்ற பொருள் பழைய தொலைக்காட்சிகளுக்குள் உண்டா? இல்லையேல் சதுரங்க வேட்டைப் பாணியில் யாரோ அவிழ்த்துவிட்ட கதையா?

அடுத்தவாரம் இன்னும் சில தகவல்களை இதுபற்றிச் சொல்வோம். காத்திருப்பீர்கள் தானே?




(தொடரும்)






லிங்கேஸ்வரன் லக்ஷிகன்,
*இந்துக் கல்லூரி, தரம்- 9. அங்கத்துவ இல.012*




வா.அமுதினி
ஆண்டு - 9